# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 9: இதழ் 2—3 ஜனவரி—பெப்ருவரி, 1957 விலை : சதம் 30



# அட்டைப் படம்




இதற்குமுன் நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலும் பார்க்க இவ்வரு விழா புதுப் பொலிவுடன் காட்சியளித்தது. மக்கள் முன்னணிக்கட்சி ஆட்சிக் வந்து முதன் முதலாகக் கொண்டாடிய சுதந்திரதின விழா இதுவாகும். எனவே இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் ஆர்வம மக்களிடையே முன்னரிலும் பார்க்க மிகுந்து காணப்பட்டது. நமது பிர்தமரின் வேண்டுகோளை எற்று ஆசியாவின் மாபெரும் வீரரும் சீனமக்கள் குடியரசின் மதிப்பு மிக்க தலைவரும், பிரதமருமான திரு. சௌ-என்-லாய் இந்நாட்டிற்கு விஜயஞ்செய்து சுதந்திரதின விழாவில் பங்குபற்றியதால், அரசாங்கமும் மக்களும் மட்டற்ற மகிழ்வெய்தினர். அன்று சுதந்திர தின மண்டபத்தின் கண்கொள்ளாக் காட்சியைக்காண இலங்கையின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள் வந்து குழுமினர். நமது பிரதமரும், சீனப் பிரதமரும் மண்டபத்தின் மீது வீற்றிருந்து நம் நாட்டு நடனங்களைக் கண்டு களி பேருவகை எய்தினர். அன்று சிங்களத் தேசீய விளையாட்டுக்களுக்கும், நடனங்களுக்கும் முதலிடம் அளிக்கப்பட்டது. அப்பொழுது தாளத்திற்கு காலைத் தூக்கி அதியற்புதமாக ஆடும் அரிவையரின் உணர்ச்சிமிக்க ஒரு கட்டத்தை அட்டைப்படம் சித்தரிக்கிறது.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சீனப் பிரதமரின் இலங்கை விஜயம் | 3 |
| 2. | பொங்கற் பண்டிகை | 8 |
| 3. | கமக்காரருக்கு ஒரு நிறை பொங்கல் | 13 |
| 4. | இலங்கையின் முதற் பிரதமர் | 14 |
| 5. | நான் கண்ட சீன | 15 |
| 6. | காந்திஜியும் பெண்களும் | 17 |
| 7. | தமிழ்ப் பெரியார் மறைவு | 19 |
| 8. | நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர் | 20 |
| 9. | சீன | 22 |
| 10. | கன்பூஷியஸின் மணி மொழிகள் | 25 |
| 11. | பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை | 26 |
| 12. | மழைக்காவியம் | 27 |
| 13. | பொய்யும் மெய்யும் | 30 |
| 14. | ஆறுமுக நாவலர் | 32 |
| 15. | மகாத்மா | 35 |
| 16. | கம்போடியா இளவரசர் இலங்கை விஜயம் | 36 |
| 17. | ஐம்பத்தேழே வாழ்க! | 43 |


1—J. N. B 63512—5 508 (2/57



சுதந்திரதின விழாவின்போது, சுதந்திர மண்டபத்தில் ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர் கவர்ச்சி மிக்க தேகப்பயிற்சி, விளையாட்டுகளில் கலந்துகொண்டனர். மகாதேசாதிபதி சிறுமிகளின் மரியாதை அணிவகுப்பை ஏற்றுக்கொள்கின்றார்.

# சீனப் பிரதமரின் இலங்கை விஜயம்

சீனமக்கள் குடியரசின் பிரதமர் திரு. சௌஎன்லாய் பெப்ருவரி மாதத்தில் இந்நாட்டிற்கு விஜயஞ் செய்தமை, இலங்கைச் சரித்திரத்தில் பொன்னேடுகளில் பொறிக்கப்படத்தக்க முக்கிய சம்பவமாகும். திரு. சௌஎன்லாய்யுடன், உதவிப் பிரதமர், திரு. ஹோலங்கும், சில முக்கிய உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர். உத்தியோகத்தர்களுக்கிடையே உதவி வெளிவிவகார மந்திரியும் காணப்பட்டார். சீனப் பிரதமர் கோஷ்டி ஜனவரி மாதம் 31 ந் திகதி விமான மூலமாக இலங்கைக்கு வருகை புரிந்து பெப்ருவரி மாதம் 5 ந் திகதி செவ்வாய்க் கிழமை சீனாவுக்குத் திரும்பியது.

சீனப் பிரதமர் திரு. சௌஎன்லாய் இலங்கையில் தங்கிய 5 நாட்களில் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் சர்வதேச ரீதியில் உடனிருந்து வாழ்தலும், ஒத்துழைத்தலும் என்ற அடிப்படையில் பல பேச்சு வார்த்தைகள் நடத்தினார். பேச்சுவார்த்தைகளின் இறுதியில் இரு தேசப் பிரதமர்களும் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

### சீனா—இலங்கை கூட்டறிக்கை

"சீனப் பிரதமர் இலங்கைக்கு விஜயஞ் செய்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கைப் பிரதமரும் சீனப் பிரதமரும் ஆகிய நாம் இருவரும் எம் இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மையைத்தரும் பல விஷயங்களையிட்டு கலந்துரையாடினோம். எமது பேச்சு வார்த்தைகள் சுமுகமான, சிநேகப் பூர்வமான சூழ்நிலையிலே ஒழிவு மறைவின்றி நடாத்தப்பட்டன.

ஆசிய ஆபிரிக்க நாடுகள் 1955 ம் ஆண்டு பாண்டுங் மகாநாட்டில் கூடி ஏற்றுக்கொண்ட பஞ்ச சீலக் கொள்கைகளைக் கடைப் பிடிக்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்துகிறோம். சர்வதேச ரீதியில் உடனிருந்து வாழ்தல், ஒத்துழைத்தல் ஆகிய ஐந்து கோட்பாடுகளே பொதுவாக பஞ்சசீலக் கொள்கை எனப் படுகின்றது.

இக்கொள்கைகளை அமுல்நடத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இதற்கென மற்றோர் ஆசிய ஆபிரிக்க மகாநாட்டை கூடிய சீக்கிரம் கூட்டவேண்டுமெனவும் நாங்கள் கருதுகின்றோம்.

உலக சரித்திரம் இப்பொழுது மாறும் கட்டத்தில் இருக்கிறது. இத்தகைய சகாப்தங்களிலே சமூகத்தில் மாறுபட்ட கருத்துக்களும், பலதரப்பட்ட எண்ணங்களும் காணப்படுவது இயற்கையே. ஆனால் என்னதான் கருத்து வேறுபாடுகளும், பலதரப்பட்ட சமூக அமைப்புகளும் இருந்தபோதிலும் நாடுகள் சமாதானமாக வாழமுடியுமென்றே நாங்கள் நம்புகிறோம். உலக யுத்தம் தோன்றுவதற்கோ, அத்தகைய யுத்தம் தோன்றக்கூடிய சூழ்நிலை தொடர்ந்து இருக்கவோ இடமளிக்கமுடி

யாது. சர்வதேசப் பூசல்கள் யாவும் பரஸ்பர உடன்படிக்கை, சுமுகமான பேச்சு வார்த்தை ஆகியவற்றின் மூலமாகத் தீர்க்கப் பட வேண்டும். ஆதலால் விரோத மனப்பான்மையுள்ள இராணுவக் கோஷ்டிகள் அமைப்பதை நாங்கள் ஆட்சேபிக்கி றோம். இராணுவ பலக் குறைப்பை நாம் ஆதரிக்கும் வேளை யிலேயே, அணுசக்தி ஆயுதங்கள் ஒழிக்கப்படவேண்டுமென்றும், அணுகுண்டு, ஜலஜகுண்டுப் பரீட்சைகள் நிறுத்தப்பட வேண்டு மென்றும், வற்புறுத்துகின்றோம்.

அதேநேரத்தில், ஆசிய–ஆபிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தி யத்தின் ஆக்கிரமிப்பையும், விஸ்தரிப்பையும் எதிர்ப்பதற்கும் புதுயுக எண்ண அடிப்படையில் வாழப் பாடுபடும் உலகமக்களின் சுதந்திரத்தைப் பறித்து, விருத்தியை அழிக்க ஏகாதிபத்திய சக்திகள் நிர்க்கதியாகப் போராடி வருவதைத் தடுக்கவும் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

எகிப்து, மேற்கு ஆசிய பிரச்சினைகளை ஒரு வல்லரசின் ஆதிக்கம் தொடர்ந்திருப்பதனாலோ ஒரு வல்லரசின் இடத்தை மற்றோர் வல்லரசு நிரப்புவதனாலோ தீர்க்கமுடியாதென நாங் கள் கருதுகின்றோம். அந்நாட்டு மக்களின் எதிர்காலத்தை அவர்களின் விருப்பத்துக்கிணங்க நிர்ணயித்துக் கொள்ள அவர் களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். இம்முறையில் மாத் திரமே இப்பிரதேசங்களிலுள்ள சர்வதேசப் பிரச்சினைகளைச் சமா தானமாகத் தீர்க்கமுடியும்.

காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கு மிடையேயுள்ள தகராறின் காரணமாக ஏற்பட்டிருக்கும் துர திர்ஷ்டவசமான நிலைமையைக் கண்டு நாங்கள் ஆழ்ந்த கவலை யடைகின்றோம். இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களின் நலன் களையும், ஆசிய–ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமையையும் கருத் திற்கொண்டு, இப்பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதற்கு மேலும் முயற்சி யெடுக்குமாறு கேட்டுக்கொள்ளு கிறோம்.

எம் நாடுகளிரண்டும் பன்னூற்றாண்டுகளாக நட்புறவால் பிணைக்கப்பட்டுள்ளன. எங்களிடையே நிலவும் கருத்துவேற்றுமை களை உணர்ந்து, அவைகளுக்கு மதிப்புக் கொடுப்பதோடு, இரு நாடுகளினதும் பரஸ்பர நலன் கருதியும், ஆசிய–ஆபிரிக்க ஒற்றுமையையும், உலக சமாதானத்தையும் கருத்திற்கொண் டும், எமது பழைய நட்பைப் பலப்படுத்துவதென்றும், எமது பொருளாதார கூட்டுறவை விருத்தி செய்வதென்றும், கலா சார இணைப்புகளை ஏற்படுத்துவதென்றும் நாங்கள் திடசங்கற் பம் கொண்டுள்ளோம்."

இரு பிரதமர்களினதும் கூட்டறிக்கை 1957 ம் ஆண்டு பெப்ரு வரி மாதம் 5 ந் திகதி இருவராலும் கைச்சாத்திடப்பட்டது.

### இரத்மலானையில்

திரு. சௌஎன்லாய் ஜனவரி 31 ந் தேதி இலங்கை வந்திறங்கியபோது பெருந்திரளான மக்கள் அவரை இரத்மலானை விமான நிலையத்தில் வரவேற்றனர். வரவேற்பு முடிவடைந்த பின்னர், இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகவும், திரு. சௌஎன்லாயும் காலி ரோட்டு வழியாக திறந்த காரில் மோட்டார் சைக்கிள் வீரர் படையொன்று சூழ்ந்து வர இராணி மாளிகைக்கு செல்லும் காட்சியைப் பார்ப்பதற்கு வீதியின் இருமருங்கிலும் பெருந்திரளான மக்கள் கூடியிருந் தனர்.

பெப்ரவரி முதலாந் தேதி சீனப் பிரதமர் இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கும் செனட் சபை அங்கத்தி னர்களுக்கும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

இச்சொற்பொழிவில் திரு. சௌ சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை மிகவும் வற்புறுத்தியதோடு, சீனவும் இலங்கை யும் நட்புத் தொடர்புகளால் பிணைக்கப்பட்டிருக்கும் நாடுகள் என்றும் குறிப்பிட்டார்.

### சீனத்தலைவர் இலங்கைப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தல்

அதன் பின்னர், திரு. சௌஎன்லாய் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து சில மணிநேரம் உலக விவகாரங்களைப்பற்றிச் சம்பாஷித்தார். பகல் போசனத்திற்குப் பிறகு சீனப் பிரதமர் கண்டி மாநகர் நோக்கிப் புறப்பட்டார். இயற்கைவனப்பு மிக்க மலைநாட்டின் தலைநகரை யடையுமுன், வழியில் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கும், பூந்தோட்டத்திற் கும் விஜயஞ்செய்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தை யடைந்த சீனப் பிரதமரை உபவேந்தர். சர். நிக்கலஸ் ஆட்டிகலை வரவேற்று பல்துறைத் தலைவர்களையும் சீனத் தலைவருக்கு அறிமுகம் செய்து வைத் தார். உபவேந்தரால் சீனவிருந்தாளிகளுக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. திரு. சௌஎன்லாய் விலையுயர்ந்த சீன நூல் கள் பலவற்றை பல்கலைக்கழக நூல்நிலையத்திற்கு வழங்கினர்.

பேராதனைப் பூந்தோட்டத்தில் சீனத் தலைவர் ஒரு மரக் கிளையை நாட்டினர். மாட்சிமைதங்கிய எலிஸபெத் இராணி யாரும், மேன்மைதங்கிய யப்பானிய இளவரசரான மிக்காசா வும் இந்நாட்டிற்கு வருகை புரிந்ததன் ஞாபகார்த்தமாக நாட்டிய கிளைகள் சௌஎன்லாய் அவர்களுக்குக் காட்டப்பட்டன.

### கண்டியில் இராஜாங்க வரவேற்பு

சீனப் பிரதமர் கண்டி மகாநகரை யடைந்ததும் நகர மேயரும், அங்கத்தவர்களும் அவருக்கு இராஜாங்க மரியாதை செலுத்தி வரவேற்றார்கள்.

போகம்பரை மைதானத்தில் திரு. சௌஎன்லாய் அவர் களுக்கு பொதுவரவேற்பொன்று அளிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான மக்கள் குழுமி சீனப் பிரதமரை உற்சாகத்துடன் வரவேற்றனர். சீனப் பிரதமர் தமது சொற்பொழிவின்போது "நாம் பழம்பெரும் சரித்திரங்களை உடையவர்கள். கம்பீரத் தோற்றத்துடன் காட்சியளிக்கும் கண்டி நகர் நம் பழம் பெரு மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற" தென்றார்.

கண்டி மாநகர மேயர் திரு. ஈ. எல். சேனநாயக்க வெளி நாட்டுப் பிரதமருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து அவரிடம் கையளித்தார்.

**தலதா மாளிகையில்**

சீனப் பிரதமரும், அவரது கோஷ்டியினரும் புத்தரின் புனித பல் வைக்கப்பட்டிருக்கும் தலதா மாளிகையை யடைந்ததும் தியவடன நிலமை திரு. சி. பி. நுகவெல விருந்தினரை வர வேற்றார். திரு. சௌஎன்லாய் விக்கிரக அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் அவர் மல்லிகை மலரிட்டு புத்தரை வணங் கினர்.

அதன்பின் சீனத் தலைவர் தலதா மாளிகைக்கு ரூபா 10,000 பெறுமதியான ஒரு செக்கும் (காசோலை) சீன பௌத்தர் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட பல பௌத்த நூல்களையும் இனமாக வழங்கினர்.

**சிகிரியாக் குன்றையும், புராதன பொலநறுவை நகரையும் பார்வையிடல்**

சனிக்கிழமையன்று திரு. சௌஎன்லாயும் அவரது கோஷ்டி யினரும் சிகிரியா குகைக் கோட்டையைப் பார்வையிட்டனர். அவர்

களுடன் சென்ற முன்னாள் தொல்பொருள் அதிபர் டாக்டர் எஸ். பரணவித்தான 6 ம் நூற்றாண்டைச் சேர்ந்த இக் கோட்டையின் சரித்திரத்தை அவருக்கு எடுத்துரைத்தார்.

சிகிரியாவை விட்டுப் பிரிந்த வெளிநாட்டுப் பிரமுகர் கோஷ்டி புராதன பொலநறுவை நகரையும், குடியேற்றத் திட்டங்களையும் பார்வையிட்டது. சீனப் பிரதமருடன் காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. சி. பி. டி சில்வாவும் சென்றார்.

### கொழும்புமாநகர வரவேற்பு

ஞாயிற்றுக்கிழமை சௌஎன்லாய் குருநாகல் வழியாக கொழும்புக்குத் திரும்பினர். மகாதேசாதிபதி மேன்மைதங்கிய சர். ஒலிவர் குணதிலக அவர்களுடன் விருந்துண்ட சீனப் பிரதமர் பிற்பகலில் கொழும்பு மாநகர சபை மண்டபத்திலே, கொழும்பு மேயராலும், அங்கத்தவர்களாலும் அதிவிமரிசையாக வரவேற்கப்பட்டார்.

மேயர் திரு. வீ. ஏ. சுகததாச பனையோலையிலே பொறிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார்.

"இன்று பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பஞ்சசீலக்கொள்கையைச் சிருஷ்டித்தவர்களில் தாங்களும் ஒருவரென்பதும், நாடுகளிடையே சமாதானமும், நட்புறவும் ஏற்படத் தக்க சூழ்நிலையை தோற்றுவிப்பதில் தாங்கள் பெரிதும் உதவியிருக்கிறீர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்."

"சீனமக்கள் முடியரசை உத்தியோகப் பூர்வமாக ஏற்றுக்கொண்ட முதல் வரிசை நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். பாரம்பரையாக எம்மிடையே நிலவிவந்த நட்புறவையும், நேச மனப்பான்மையையும் வியாபார ஒப்பந்தத்தின் மூலமாக மேலும் பலப்படுத்தியுள்ளோம். தங்களின் வருகை எமது நட்புறவை பன்மடங்கு உறுதிப்படுத்தியுள்ள தென நாங்கள் திடமாக நம்புகின்றோம்" என்று மேயர் கூறினர்.


திரு. சௌஎன்லாய் வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது :—

எனது நண்பர்கள் சார்பாகவும், என் சார்பாகவும், தாங்கள் எங்களுக்களித்த பெருமை மிக்க வரவேற்புக்கு நன்றி கூறுகிறேன். சீன மக்கள் சார்பாக, கொழும்பு மக்களாகிய உங்கள் மூலமாக இலங்கை மக்களுக்கு எமது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### சர்வதேசிய முக்கியத்துவம் வாய்ந்த நகர்

"கொழும்பு சீன மக்களுக்கு மிகவும் தெரிந்த நகரமாகும். கொழும்பு உங்கள் அழகிய நாட்டின் தலைநகராக இருப்பதோடு, சர்வதேசிய முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகவும் இருப்பதே இதற்குக் காரணமாகும். ஆசிய, ஆபிரிக்க ஒற்றுமைக்காகவும், உலக சமாதானத்திற்காகவும் பெரும் பணியாற்றிய கொழும்பு மகாநாட்டுக்கு உங்கள் நகரின் பெயர் அளிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகர மக்கள் தங்கள் நகரின் பெருமை குறித்து பெருமிதம் கொள்ளக் காரணமுண்டு. என்னைப் பொறுத்த வரையினும் கொழும்பு நகரம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முப்பத்தாறு வருடங்களுக்குமுன் நான் இந்நகர வழியாகச் சென்றிருக்கிறேன். அப்பொழுது உங்கள் நகரம்—பூங்கா நகரம்—என் உள்ளத்தைக்கவர்ந்தது எனினும் அப்பொழுது இலங்கை மக்கள் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர்."

சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்காக சுதந்திர மண்டபத்திற்கு இரு தேசப் பிரதமர்களும் வருங்காட்சி.



"இன்று மீண்டும் நான் இங்கு வந்திருக்கிறேன். இப்பொழுது நான் விசேடமாக மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் நகரம் அன்றுபோல இன்றும் ஒரு பூங்காவைப்போலவே காட்சியளிக்கின்றது. ஆனால் அன்றைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்குமுள்ள வித்தியாசம் கொழும்பு நகர் இன்று இலங்கை மக்களுக்குரிய நகராய் விளங்குவதாகும். இவ்வழகிய நகரம் அதன் உரிமையாளர்களிடம் திரும்பக்கொடுக்கப்பட்டுள்ளது. இனிமேல் அது என்றென்றுமே இலங்கை மக்களின் சொத்தாகவிருக்கும்" எனக் கூறி சௌஎன்லாய் இலங்கை மக்களை வாழ்த்தினார்.

அன்றிரவு வெளிநாட்டுப் பிரதமரும் அவரது கோஷ்டியினரும் மகாதேசாதிபதி இராணிமாளிகையில் அளித்த உத்தியோகப்பூர்வமான விருந்தில் கலந்துகொண்டனர்.

### பத்திரிகை நிருபர் மகாநாட்டில் திரு. சௌ என் லாய்

"ஆசிய நாடுகளுக்கு இதர நாடுகளின் உதவி தேவைப்படுகின்றது. ஆனால் இப்படிப்பட்ட உதவியளிக்கும் சில நாடுகள் இராணுவத்தளங்கள் போன்ற சில உரிமைகளைக் கோருகின்றன. காலக் கிரமத்தில் இப்படிப்பட்ட கொள்கைகளின் ஆக்கிரமிப்புத் தன்மை பட்டவர்த்தனமாக வெளிப்பட்டு, உதவி பெறும் நாட்டுக்கு அது ஒரு பெரும் சுமையாகிவிடும்" என்று பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் பேசிய சீன மக்கள் குடியரசின் பிரதமர் திரு. சௌஎன்லாய் கூறினார். அவர் மேலும் கூறியதாவது :—

"ஆசியாவின் சமாதானமும் சுபீட்சமும், பாண்டுங் மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் படி ஆசிய மக்களாலேயே திட்டமிடப்பட்டு, உருவாக்கப்பட வேண்டும். அந்நிய நாடுகளிடமிருந்து ஆசியநாடுகள் நிபந்தனைகளுடன் உதவி பெறுவதை நான் வெறுக்கிறேன். ஏனெனில் அப்படிப்பட்ட உதவியால் இராணுவ ஒப்பந்தங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இது, உதவி பெறும் நாடுகளின் பொருளாதாரத்தைப் பாதிக்கும்".

### சுற்றுப்பிரயாணத்தின் நோக்கம்

சீனப் பிரதமரிடத்தில் பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்ததன் நோக்கமென்ன வென்று வினவப்பட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார் :—"எனது விஜயங்கள் மூன்று நோக்கங்களைக் கொண்டதாக விருந்தன. அவையாவன : (அ) நட்பை நாடுவது, (ஆ) சமாதானத்தைக் கோருவது, (இ) அறிவை வளர்ப்பது.

"எட்டு ஆசிய நாடுகளில் நாங்கள் செய்த சுற்றுப்பிரயாணத்தில் இம்மூன்று நோக்கங்களையும் அடைந்து விட்டோம். இந்த எட்டு ஆசிய நாடுகளினதும் மக்கள் சமாதானத்தையும்நட்டையும் பெரிதும் விரும்புகிறார்களென்பதை நாங்கள் கண்டுகொண்டோம். இந்நாடுகளிடமிருந்து அதிக அறிவையும் நாங்கள் பெற்றுக்கொண்டோம். இதர நாடுகள் கற்றறிந்து கொள்ளக் கூடிய நல்ல விஷயங்கள் சில எங்கள் நாடுகளில் இருக்கின்றனவென்றே நாங்கள் எப்பொழுதும் நம்பிவந்துள்ளோம்.

"சமாதானமாக உடனிருந்து வாழும் பாண்டுங் கொள்கைகளின் அடிப்படையில் எங்கள் நாடுகளின் சிரத்தையை ஈர்க்கும் விஷயங்கள்பற்றி பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்கு இந்த எட்டு ஆசிய நாடுகளின் தலைவர்களையும் நாங்கள் சந்தித்தோம். சமாதானத்தையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கு நாங்கள் தொடர்ந்து முயற்சிப்போம்."

### சுதந்திர தினத்தில் சௌ

பெப்ருவரி 4 ந் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற இலங்கையின் 9 ஆவது சுதந்திர தின விழாவில் சீனப் பிரதமர் கலந்துகொண்டார். அப்பொழுது அவர் நிகழ்த்திய சொற்பொழிவு பின்வருமாறு :—

அன்புமிக்க இலங்கைத் தோழர்களே,

நாங்கள் இலங்கைக்கு விஜயஞ்செய்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில், இலங்கை மக்கள் தங்கள் நாட்டின் சுதந்திரத்தை யீட்டிக் கொண்ட ஒன்பதாவது வருடாந்தக் கொண்டாட்டங்களில் இலங்கை மக்களுடன் கூடி பங்குபற்றிக்கொள்வதற்கு எங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நாங்கள் அதிக மகிழ்ச்சியடைகிறோம். உங்கள் நாட்டின் மகிழ்ச்சி மிக்க இத்தினத்தன்று 60 கோடி சீன மக்களின் நல் வாழ்த்துக்களை இலங்கை மக்களுக்கு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். சுதந்திர மண்டபத்தில் இலங்கை மக்கள் ஈட்டிக்கொண்ட வெற்றிக்காக சீன மக்கள் தங்கள் இதய பூர்வமான வாழ்த்துக்களை இலங்கை மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறார்கள். மேலும் இலங்கை மக்கள் தங்கள் நாட்டின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்துக்கொள்ளும் பணியிலும், சுபீட்சமாக வாழ்வதற்குத் தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் வெற்றியீட்டிக் கொள்ள வேண்டுமென்றும் சீன மக்கள் விரும்புகிறார்கள்.

நாங்கள் நல்வாழ்த்துக்களை உங்களுக்குக் கூறும் போது உங்கள் உள்ளங்களுடன் எங்கள் உள்ளங்களும் ஒன்று கலப்பதை நாங்கள் உணர்கின்றோம். ஏறக்குறைய இலங்கை மக்களுக்கு ஏற்பட்டிருந்த கதிதான் சீனமக்களுக்கும் ஏற்பட்டிருந்தது. இலங்கை மக்கள் ஒன்பது வருடங்களுக்குமுன் சுதந்திரமடைந்தனர் ; சீன மக்கள் எட்டு வருடங்களுக்கு முன் தங்கள் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டனர். துக்கத்தோடு வெட்கமும் கலந்த இருளடைந்த கடந்த கால ஞாபகங்கள் இன்னும் எங்களை விட்டகலாததால் சுதந்திரத்தின் பெருமதியை நாங்கள் நன்கறிந்தவர்களாவோம். அடிமைத்தளைகளை அறுத்தெறிய நாங்கள் நடாத்திய கடும்போராட்டாம் இன்னும் எங்கள் மனக்கண்முன் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. ஒரே மாதிரியான சரித்திரப் பின்னணி நம் இரு நாடுகளுக்குமிடையே இருக்கின்றன. நம் நாடுகள் ஒன்றுக் கொன்று அனுதாபம் தெரிவித்துக்கொள்வது இதன்மூலம் சாத்தியமாகின்றது.

எங்கள் உள்ளங்களைப் பிணைப்பது சரித்திரப் பின்னணிமட்டுமேயல்ல. ஆனால் முன்னேறிச் செல்லும்படி ஊக்குவிக்கும் பொது நோக்கமுமாகும். இலகுவில் ஈட்டிக்கொள்ளப்படாத சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள நம் இரு நாட்டு மக்களும் உறுதி பூண்டிருக்கிறோம். பழங்கால ஆட்சிகள் எமக்கு விட்டுச் சென்றிருக்கும் பிற்போக்கையும் வறுமையையும் ஒழித்துக் கட்டி, ஒரு சுபீட்சமான புது வாழ்வை சிருஷ்டிக்க நம் இரு நாட்டு மக்களும் உறுதிகொண்டிக்கிறோம். கடந்த கால சரித்திரத்தில் எமது நாடுகள் இதர நாடுகளுடன் கொண்டிருந்த அந்நியோன்னிய உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளவும் உலகிலுள்ள எத்தனை நாடுகளுடன் நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியுமோ அத்தனை நாடுகளுடனும் நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் நாங்கள் உறுதிகொண்டிருக்கிறோம். உலகில் சமாதானத்தைப் பாதுகாக்கவும், சமாதானமாக நாட்டின் புனருத்தாரண வேலைகளிலீடுபட நமக்குள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் நாங்கள் உறுதிகொண்டிருக்கிறோம். இந்த ஒரே மாதிரியான நோக்கம் எம் இரு



இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களும் சீனமக்கள் குடியரசின் பிரதமர் திரு. சௌ என் லாயும் பஞ்சசீலக் கூட்டறிக்கையில் கையெழுத்திடுகின்றனர்.

நாடுகளுக்கும் இருப்பதால், நாங்கள் ஒன்று சேரவும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளவும், ஒத்துழைக்கவும் சாத்தியமாகியுள்ளது.

இரு நாடுகளும் வெவ்வேறு பாதைகளில் சுதந்திரம் பெற்றது உண்மைதான். தேசீய உணர்ச்சியால் உந்தப்பெற்று இலங்கை மக்கள் தங்கள் சுதந்திரத்தைப் பெற்றனர். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சீனப்புரட்சி வெற்றிகரமாக முடிந்தது. நம்மிரு நாடுகளின் சமூக ராஜீய அமைப்புகளும் வெவ்வேறானவைகளே. இத்தகைய வேற்றுமைகள் நமது ஒத்துழைப்பு உணர்ச்சிக்கும் நேச உணர்ச்சிக்கும் ஒரு தடங்கலாக இருக்க முடியாது. ஏனெனில் தங்கள் சுதந்திரத்தைப் பேணிக் காக்கும் மக்கள், எப்பொழுதும் இதர நாட்டு மக்களின் சுதந்திரத்தையும் மதித்து வாழ்வர்.

பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் சீனா எல்லா நாடுகளுடனும் சிநேகபாவத்துடன் வாழவிரும்புகின்றது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இன்றைய தினம் சுதந்திர இயக்கங்கள் பலமடைந்து வருகின்றன. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் குடியேற்ற நாட்டு ஆட்சியில் கஷ்டப்பட்டுவந்த இங்குள்ள நாடுகளில் பல இப்பொழுது சுதந்திர மடைந்திருக்கின்றன. ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலே இன்றைய தினம் புத்துணர்ச்சியும், புது எழுச்சியும் தலைதூக்கிநிற்கின்றன.

ஆசிரியாவிலும் ஆபிரிக்காவிலும் தோன்றியுள்ள மகத்தான தேசீய சுதந்திர இயக்கம் உலகத்தில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இன்று நாம், பல புதிய நாடுகள் தோன்றுவதை மட்டுமேயல்லாமல், தேசிய சுதந்திரம், உலக சமாதானம், சர்வதேச நல்லுறவு ஆகியவற்றைக் கோரும் ஒரு புத்துணர்ச்சி உருவாகுவதையும் காண்கின்றோம்.

சீன மக்கள் குடியரசை முதலாவதாக அங்கீகரித்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். ஐ. நா. ஸ்தாபனத்தில் சீன மக்கள் குடியரசுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று இலங்கை பல முறை வற்புறுத்தி வந்துள்ளது. எமது கஷ்ட காலத்தில் இலங்கை, மேற்கத்திய நாடுகளால் விதிக்கப்பட்டிருந்த கப்பற் போக்குவரத்துத் தடைகளை உறுதியுடன் தகர்த்தெறிந்து, பரஸ்பர உதவியின் அடிப்படையில் சீனாவுடன் வர்த்தகஞ் செய்தது. இப்படிப்பட்ட ஒரு நேர்மையான நடவடிக்கையை எடுத்துக் கொண்டதற்காக நாங்கள் இலங்கைக்கு எங்கள் மனப் பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

உங்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆவலுடனேயே இத் தடவை நாங்கள் இங்கு விஜயஞ் செய்திருக்கிறோம். இலங்கை மக்களாலும் அவர்களின் தலைவர்களாலும் எங்களுக்களிக்கப்பட்ட வரவேற்பு, எமது நாடுகளுக்கிடையே நட்பை வளர்ப்பதற்கு எமது இந்த விஜயம் உதவியிருக்கிற தென்ற நம்பிக்கையை எங்களுக்குண்டுபண்ணியிருக்கிறது. சீனாவுக்கும் இலங்கைக்குமிடையில் உள்ள நட்பு பலமடைவதைக் கொண்டு ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலுள்ள தொடர்புகள் வலுவடைவதோடு மட்டுமேயல்லாமல் உலக சமாதானமும் ஸ்திரமடையும்.

வாழ்க இலங்கை மக்கள்!



விளக்கேற்றுதல்

# பொங்கற் பண்டிகை

மு. இராமலிங்கம்

பொங்கல் இந்துக்களுக்கு மிகவும் முக்கியமான பண்டிகை. இது வருஷந்தோறும் தை மாதம் முதல் தேதி வரும். மற்றப்பண்டிகைகள் எல்லாம் கடவுளையும் கடவுளரையும் வாழ்த்தும் பொருட்டு எழுந்தனவாக, இஃது ஒன்றுமட்டும் இயற்கையை வாழ்த்த எழுந்ததாகும்.

மழைக்கடவுளான இந்திரனுக்கு நன்றி தெரிவிப்பதற்காக இந்தப் பண்டிகை கொண்டாடப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. நவதானியங்கள் விளையவும், ஜீவராசிகள் வாழவும், காலந்தவருது மேகங்களை ஏவிவிட்டுப் புதுவருஷத்திலும் மழை பெய்விக்கவேண்டும் என்று சப்த மேகங்களுக்கும் அதிபனை இந்திரனுக்கு ஞாபகப்படுத்தும் முறையில், அரசன் முதல் ஏழைக் குடியானவன்வரை, எல்லோரும் இந்திரவிழாவைக் கொண்டாடிவந்தார்களாம். மார்கழி மாதமே இந்திரவிழாவுக்குரியதாக அமைந்தது. வடநாட்டைப்போலவே தமிழ்நாடும் இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிவந்தது.

கிருஷ்ணபகவானுடைய காலத்திலும் இந்த இந்திரவிழா கொண்டாடப்பட்டு வந்ததென்று புராணங்கள் அறிவிக்கின்றன. கண்ணன் குலத்தினரான ஆயர்கள், தங்கள் கன்று காலிகள் எல்லாம் பால்சுரக்க ஏதுவாகப் பசும்புல் மேயும் வண்ணம் மழை பொழிந்து உதவிய தேவாதிபனை இந்திரனுக்கு தாங்களும் நன்றி செலுத்துவதற்காக இந்திரவிழாவைக் கொண்டாடி வந்தார்களாம்.

புதுமைக்குப் பழமை இடங்கொடுத்துக்கொண்டே போகாவிட்டால், பக்தியும் மூடப்பக்தியாக முடிந்துபோகுமென நினைத்துப் போலும் கண்ணன் ஆயர்களை நோக்கி, "நீங்கள் இந்திரனுக்குப் படைக்கும் உணவுகளை யெல்லாம் கோவர்த்தனகிரிக்குப் படைத்து விடுவீர், இம்மலைதானே புல் முதலியன அளித்து உங்கள் ஆடு மாடுகளைப் போஷித்து வருகின்றது" என்று பிரசாரம் செய்தாராம்.

ஆயர்களும் அப்படியே செய்ய பரமாத்மாவாகிய கண்ணன், தானே அந்த உணவுகளை உண்டு வந்தாராம். இந்திரனுக்கோ கோபம் பொங்கிவிட்டது. உயிர்களைக் காப்பாற்றும் அதே மழையை வெள்ளமாகப் பொழியச் செய்து இந்திரன் ஆயர்களையும் ஆடுமாடுகளையும் ஒருங்கே அழிக்கத் தொடங்கினன். உடனே கண்ணன் அந்தக் கோவர்த்தனகிரியை அப்படியே குடையாகப் பிடித்து, ஆயர்களையும் கன்று காலிகளையும் காப்பாற்றினராம்.

"ஆவிற் கரும்பனி தாங்கிய மாலையும்
கோவிற்குக் கோவலனென் றுலகம் கூறுமால்
தேவர்க்கு மக்கட்கெனல் வேண்டா தீங்குரைக்கு
நாவிற்கு நல்குரவில்....

எனப் பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்றாய பழமொழியில் வருதல் காண்க. அதன் பின்பு இப்பண்டிகை கிருஷ்ணனைக் குறித்துச் சில காலம் கொண்டாடப்பட்டுவந்தது என்றும் சரித்திரமுண்டு.

இந்த இந்திரவிழாவே நாளா வட்டத்தில் மாற்றமடைந்தது. மக்கள் குலதெய்வங்களைப் பரவினார்கள். பொங்கலுக்கு முன்னரே மார்கழி மாதம் முழுமையும் மக்கள் மனவாக்குக் காய சுத்தத்தோடு காலையில் எழுந்து திருவாசகம் முதலிய சிறந்த நூல்களை இசையோடு பயின்று தங்களைத் தூய்மைப் படுத்திக்கொண்டனர் என்றுங் கூறுப.

மானுடர்களாகிய எங்களுக்கு ஒருவருடம் எனப்படும் காலம் தேவர்களுக்கு இராப்பகலோடு கூடிய ஒரு நாளாகும். இதனுள் உத்தராயணமாகிய தை மாசந்தொடக்கம் ஆனி இறுதியாகவுள்ள

ஆறு மாதங்களும் தேவர்களுக்குப் பகற்காலமாகும். தட்சணாயன காலமாகிய ஆடிதொடக்கம் மார்கழி இறுதி வரையுமுள்ள ஆறுமாதங்களும் தேவர்களுக்கு இராக் காலம் ஆகும். தை மாதம் முதற் தேதியாகிய உத்தராயண புண்ணியகால ஆரம்பமே மக்களின் வாழ்க்கையில் புண்ணியகாலம் என்றும் அதுவே பொங்கலாக மாறியது என்றும் கூறுவாருமுளர்.

இந்துக்கள் முன்னொருகாலத்தில் பஞ்ச பூதங்களையும் சூரிய சந்திரர்களையும் வணங்கி வந்தார்கள். தெய்வத்தின் மகிமையை அவை வெளிப்படையாய் காட்டத்தகுந்தவையாதலால் அவ்வாறு வணங்கிவந்தார்கள். சூரியன் உலகத்திற்கு மிக வேண்டிய கிரகம், பயிர்த்தொழிலுக்கு அது அத்தியாவசியமானது. சூரிய உஷ்ணம் இல்லாவிட்டால் புல் பூண்டுகளும் வளரா. ஆகவே பயிரிடுங்குடிகள் தாங்கள் செய்யும் பயிர்த்தொழிலுக்கு அதிக அவசியமான சூரியனுக்குத் தாம் பயிர்த்தொழிலில் கொண்ட பொருள்களை ஆராதிக்கும் பண்டிகையைக் கொண்டாடி வந்தார்கள். அக்கிரியை இன்றும் நிலவுகின்றது.

பயிரிடுவோர்களுள் வழங்கிவரும் பழமொழிகள் வருமாறு:

1. தை ஈனுப் புல்லுமில்லை மாசி ஈனு மரமுமில்லை.
2. தை உழவு ஐபாட்டுக்கிடை.
3. தை உழவோ நெய் உழவோ.
4. தை எள்ளு தரையில்.
5. தைக்குருவை தரையைவிட்டெழும்பாது.
6. தைக் குருவை தவிட்டுக்கும் உதவாது.
7. தைக்குருவையோ பொய்க்குருவையோ.
8. தைபிறந்தது தரைவறண்டது.
9. தை பிறந்தால் தலைக்கோடை.
10. தை பிறந்தால் வழிபிறக்கும்.
11. தைப்பானையைத் தடவி எடு.
12. தைப்பிறை வடகொம்பு உயர்ந்தால் வடவனுக்குச் சோறுண்டு தென்கொம்பு உயர்ந்தால் தெரு வெங்கும் திரிய வேண்டும்.
13. தை மழை நெய்மழை.
14. தையும் மாசியும் வையகத்துறங்கு.
15. தை வாழை தரையில் போடு.
16. தைவெள்ளம் தாய்க்குச் சோறு.
17. பண்டைபட்ட பாட்டைப் பழங்கிடுகில் போட்டுவிட்டுச் சம்பாநெல் குத்திப் பொங்கல் இடுகிருள்.
18. பறையன் பொங்கல் இட்டால் பகவானுக்கு ஏருதோ ?
19. பொங்கலும் போச்சு போகியும் போச்சு பெண்ணை அனுப்படாபேயாண்டி.
20. சோற்றுக்கு வீங்கின நாயே மாட்டுப்பொங்கலுக்கு வாயே.

இவற்றிலிருந்து தை மாதப் பிறப்பு தமிழ்நாட்டவர் வாழ்வில் எத்துணைச் சிறப்பெய்தியது என நீங்கள் உணரலாம்.

தை மாதம் முதல் தேதியன்றே "பெரும் பொங்கல்". இந்தக் கொண்டாட்டத்தில் பழமை கழிந்து புதுமை உண்டாம் என்ற உணர்ச்சியும் மகிழ்ச்சிக்குரிய ஒரு முக்கிய காரணமாகின்றது. பொங்கலுக்கு முன்பே வீடுகளைப் புதுப்பித்துச் சுத்தஞ் செய்து, தூய்மைக்கு அறிகுறியாக வெள்ளைச் சாந்து பூசி வைப்பார்கள். மங்களத்திற்கு அறிகுறியாகச் செங்காவிப்பட்டையடிப்பார்கள். பொங்கலன்று வாசற்படிகளிலும் மஞ்சள் பூசுவார்கள், அழகிற்கு அறிகுறியாகத் தோரணங்கட்டித் தூக்குவார்கள். பெண்கள் பொன்னகையும் புன்னகையுமாய்ச் சித்திரக் கோலம் போடுவார்கள். முதலில் அறுத்த தானியத்தின் அரிசியைப் பெரிய புது மண் பானையில் பொங்குவார்கள். பால் வார்த்துப் பொங்குவார்கள். பால் பொங்கும். அப்போது "பொங்கலோ பொங்கல்" என்று மக்கள் ஆரவாரஞ் செய்து மகிழ்வார்கள்; பால் பொங்காமல் நின்றுவிடுவதுமுண்டு. அப்போது பொங்குவோரின் விசனத்தைச் சொல்லமுடியாது. பால் பொங்கினுல் அடுத்த பொங்கல் வருமளவும் வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்குமாம். இல்லாவிட்டால் இல்லையாம். அப்படிப் பொங்கும்போது அந்தப் பொங்கல்நீரிலே கொஞ்சம் நீரை ஒரு பாத்திரத்தில் முகந்துகொள்வார்கள். அதை எடுத்துச் சென்று தம்முடைய பயிர்ப்பச்சைகளிலே தெளித்துப் பொங்கலோ பொங்கல் என்று கூறுவார்கள். பயிர் பச்சைகள் செழிக்கும் என்று அதிலும் ஓர் நம்பிக்கை. பொங்கலுக்குச் சர்க்கரை சேர்த்துக் கனிவர்க்கங்களோடு சூரிய பகவானுக்கு படைத்து, பந்தினர் விருந்தினரோடு பெருநாட் கொண்டாடுவார்கள்.

தாரணியில் இந்திரன்
றன்பழியைத் தீர்த்த
சங்கமன் வாழ்திரு
மதுராபுரி நன்னுட்டில்
நீறணியுந் தேன்கதலி
தேங்காய் மற்றும்
நெய்பால் சர்க் கரையமுது
நிரம்பக் கொள்ளும்
ஆரணமும் அருளுமென்று
குட்டிக் கொள்வர்
அரியகங்கை பதிலுதித்து
மதிக மானேன்
காரணமாய்த் திருநீல
கண்டன் தந்த
கணபதியு மல்லவிதைக்
கழறு வீரே..

பூரண கும்பம் வைத்தல்



என்று பொங்கற் பானைக்குக் கூறும் விடுகதையுங் காண்க. பத்திமான்கள் இத்தினத்தினில் பரம்பொருளை மனத்தில் நினைத்துத் தியானிப்பார்கள்.

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களுள் கிருஷ்ணாவதாரமும் ஒன்று. அவர் ஆயர் குலத்தில் பிறந்து தானும் மாடு மேய்த்தார். வேறு எத்தனையோ சுவையுடைய பொருள்கள் இருக்க, வெண்ணெயை உண்பதிலேயே அவருக்கு விருப்பம் அதிகம். வீடுகள் தோறுஞ் சென்று பால், தயிர், வெண்ணெய் இவற்றைத் திருடியுண்டார். ஆகவே பசுவின பால், வெண்ணெய், தயிர், நெய் இவைகள் மனித உடலுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்கின்றன என்பது பெறப்படுகின்றது.

முற் காலங்களில் வீடுகள் தோறும் ஒவ்வொரு பசுவேனும் வளர்ப்பார்கள். பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஐந்தையும் மிகப் பரிசுத்தஞ் செய்கின்ற பஞ்சகவ்வியம் என இந்துக்கள் கொள்கின்றார்கள். பசுவின் சாணத்தால் வீடு மெழுகினால் அசுத்தம் நீங்குவதோடு, தொற்று நோயைப் பரப்புகிற சில கிருமிகள்நாசமடையவுஞ் செய்கின்றன. சாணத்திலிருந்தே திருநீறும் செய்யப்படுகின்றது. இவ்வளவு நன்மைகள் பசுக்களிலிருந்து நமக்குக் கிடைப்பதால் நம்மவர் அதனைத் தெய்வமாகக் கொண்டாடுவதில் வியப்பென்ன !

தை மாதம் இரண்டாந் தேதி அஃதாவது பொங்கல்தினத்துக்கு அடுத்தநாள், உழவுகாரியங்களுக்கு விசேஷ உதவியாயிருந்த காளைகளும் காலமெல்லாம் பால் என்னும் அமுதளித்து வந்த பசுக்களும் விருத்தியடைய வேண்டுமென்னுங் கோரிக்கைகளுடன் பகலின் மேல் பொங்கலிட்டு கடவுளுக்குப் படைத்துத் துதிப்பார்கள். காலையில் மாட்டையெல்லாம் பட்டியை விட்டு மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்று, மத்தியானத்திற்குள் மேய்த்து எல்லாவற்றையும், ஊர்ப்புறத்திலுள்ள ஏரிகளில் குளிப்பாட்டிக் கரையேற்றி அவற்றின் கொம்புகளிலும் நெற்றிகளிலும் மஞ்சள் குங்குமம் இட்டு, மாலைகள் சூட்டி, பொங்கல் கொடுத்து அவற்றின் எதிரில் எஜமான்மார் சாஷ்டாங்கமாக வீழ்ந்து கும்பிடுவார்கள். எஜமான்மார் அவற்றிற்குச் செய்த கொடுமைகள் எல்லாம் அன்றோடு தொலைந்து விடுகின்றனவாம்.

காடுவளம் குண்டைவளம்
குண்டைவளம் குடிவளம்
குடிவளம் கோயில்வளம்
கோயில்வளம் கோன்வளம்

என்பது பயிரிடுவோரின் கொள்கை. காடுகள் செழிப்பாயிருந்தால் குண்டை என்கின்ற ஆடுமாடுகள் புல் பூண்டுகளை நன்றாய் மேய்ந்து விருத்தியாகும். ஆடு மாடுகள் விருத்தியானால் குடிகள் செழிப்படைவார்கள். குடிகள் செழிப்பாயிருந்தால் கோயிலுக்கும் சிறப்பாய்ப் பூசை முதலியவை நடைபெறும். கோயில்களில் பூசை முதலியன சிறப்பாய் நடந்தால் அரசனும் சிறப்பாக இருப்பான். அதனால் நாடெங்கும் நல்ல செழிப்பு உண்டாகும்.

மாட்டுப் பொங்கலன்று அனைவரும் கோடி வஸ்திரம் உடுத்து கோயிலுக்குப் போய், கடவுளை வணங்கிய பின்பு, தம் பந்துக்கள் சிநேகிதர்கள் முதலானவர்களைச் சந்தித்து சுகசேமங்களை விசாரிப்பது வழக்கம். வேலைக்காரர்கள் தங்களுக்கியன்ற பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்து, தம் எசமான்மாரைக் கண்டு வெகுமதி பெற்றுக்கொண்டு போவார்கள், பயிர் வளப்பத்தின் நன்றிக்காகப் பொங்கலிடும் முதல் நாளைப் "பெரும் பொங்கல்" என்றும், மாடுகளின் விருத்தியைக் கோரிப் பொங்கலிடும் இரண்டாம் நாளை "மாட்டுப் பொங்கல்" என்றும் பட்டிப் பொங்கலென்றும் வழங்கிவருகிறார்கள்.

உத்தராயணத்திலே வரும் முதற் கரிநாள் மாட்டுப் பொங்கலின் மறு நாள் வரும். அன்று மக்கள் எந்த வேலையும் செய்யமாட்டார்கள். அதற்குப் பதிலாகக் கூட்டங் கூட்டமாகக் கூடிப் பலவித விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள். சிலர் தாம் வளர்த்து வைத்திருக்கும் காளையை அவிழ்த்துவிட்டு வலிமையுள்ள ஆடவர்களைச் சில நிபந்தனையின்படி அதைப் பிடித்து அடக்கிவிடும்படி பந்தயம் கூறுவார்கள். இது தமிழ் நூல்களில் கொல் ஏறு தழுவுதல் என்ற வழக்கத்தோடு தொடர்புடையது. அந்த வேடிக்கை குதூகலத்துடன் நிகழும். ஆயினும் அபாயமுடைத்து. வீரத்தை வியப்பார் ஆண்களிலும் பெண்களே.

இந்த விழாக்கள் கிராமவாசிகளின் நம்பிக்கையையும் அன்னார் கையாண்ட முறைகளையும், பயபக்தியையும், வாழ்க்கை வரலாறுகளையும் ஞாபகப்படுத்துகின்றன. சிசுபாலனத்தைப்போல் பசுபாலனமும் அவசியந்தான் என்பதையும் தமிழர் பெரும்பாலும் உழுதுண்டு வாழ்ந்தவர் என்பதனையும் ஞாபகப்படுத்துகின்றன.

# தை பிறந்தது!

(நாவற்குழியூர்—நடராஜன்)

தை பிறந்தது தை பிறந்தது
தமிழ் குடித்தெனக் களி பிறந்தது
மெய் பிறந்தது என உலகினில்
மேவி எங்கும் ஒளி பரந்தது

இருள் பறந்தது குளிர் ஒழிந்தது,
இருநி லத்தினில் அருண தேவன்
அருள்நிறைந்தது பொருள் பரந்தது,
அறிவுபோலத் தொழில் விரிந்தது !

காய் கனிந்தன கனியுதிர்ந்தன,
கதிர்க ளெல்லாந் தலை குனிந்தன,
வாய்திறந்(து) இதழ்கள் வழங்கிடும்
வனிதை யென்ன மலர் மலர்ந்தன !

நோய் ஒழிந்தது நுளம் பழிந்தது,
நுண்ணிடை மருட் கண்ணழ குடை
ஆய்மலர்த்தொடை அணங்கனார்க்கு
அவனியெங்கும் மணமெழுந்தது !

வீடு தோறும் முழவதிர்ந்தது
வீதிதோறும் விழவெழுந்தது,
பாடுபட்ட மக்கள் நன்கு
பருக இன்பப் பயன் விளைந்தது !

உழவர் தந்த ஊரரிசியும்
ஊற்றெடுத்துகு பாலுந்தேனும்
பழ வகையொடு முன்றிலெங்கும்
பாய்ந்து பொங்கிப் பரிமளிக்குது !

பொங்கல் பொங்கிடப் புவியும் பொங்கிடப்
புதுமைவெள்ளம் புரண்டு பொங்கிடத்
தங்கள்வாழ்வும் தமிழும் பொங்கிடத்
தை பிறந்தது ! தை பிறந்தது !

# புதுமைப் பொங்கல்

## "மஹாகவி"

பொங்கல் நாளின்று : பொழுது வழக்கம்போல்
எங்கும் புலர, எழுந்த இளம் பெண்கள்
முற்றத்தைக் கூட்டி மெழுகி முழுகி வந்து
பற்றவைக் கின்றூர் அடுப்பைப் : பலநாளாய்க்
கோடியிலே இந்தக் குதூகலநா ளுக்காகத்
தேடி ஒதுக்கிவைத்த தென்னையின் பாளை இதோ
மூண்டெரியும் போதுன் முகத்தையே பார்த்திருக்கும்
"காண்டை" விழிகளின்மேல் கண்ணைவிடாதென் அழகி
கட்டுவனில் சுட்ட களிமண் முழுப்பானை
இட்டுக் கறவை இறைத்த நறும்பாலை
ஊற்று ; நெடுநாள் உழைப்பால் விளைவித்த
நாற்றுக் கொடுத்த நமது வயலரிசி
ஒவ்வோர் மணியும் உதிரத் தொரு துளியாம் ;
அவ்வா றிருக்க அதனையோ சிந்துவது ;
மெல்லக் "களைந்து" மெது வாகப் பானையிலே
அள்ளி இடுடொன்னே ! ஆலை நெரித்த
கரும்புச் சருக்கரையின் கட்டிகளைக் கொட்டு
விரும்பிச் சிறுவர் விலாப்புடைக்க உண்டதற்கே !
கொள்ளி விறகெடுத்துக் கொண்டோடும் சின்னவனைக்
கிள்ளுதற்குத் தேவை கிடையாது ; தம்பி, நீ
சீனத்து நன்மக்கள் செய்தனுப்பித் தந்தவெடி
வானத்தை மோதட்டும், வைத்துக் கொளுத்தி எறி !
சத்தமிட்டுக் காதுகளின் சவ்வை உடைத்திடும் உன்
வித்தைகளைக் காட்டி விளையாடு ! வேலியிலே
ஒற்றை விழியை உணவின்மேல் வைத்தபடி
சற்றும் அசையாமல் தக்க தருணத்தைப்
பார்த்திருக்கும் அந்தப் பழைய விருந்தாளி
வேர்த்துப் பயந்து வெளி விண்ணில் பறந்தாலும்,
சாப்பாட்டு நேரம் சமையல் முடிந்ததுவும்
கூப்பிட்டால் பேச்சு :—கொளுத்து நீ உன்வெடியை !

* * *

இன்று புதுப்பொங்கல் ஆதலினால் என்னினிய
கன்றுகள் நன்று களிக்கத் தடையில்லை !
ஆழக் கிணற்றின் அடிச்சேற் றையும் இறைத்து
வாழாப் பயிரை வளர்க்கும் முயற்சியிலே
மூவர் துலாவின் முழுநீ ளமும் மிதிக்கத்
தேவை ! மிதி மீதத் தெள்ளமுதைப் பட்டையிலே
கோலிக் கயிற்றுக் கொடிகைப் பிடித்து வாய்க்
காலில் விடஒருவர் ! காய்ந்த நிலத் தூறிநீர்
போகும் வழிவழியே போக்குவிக்க மற்றொருவர்
ஆகும் ! இவற்றை அடுக்கி முடியாது !
இந்தப் பழைய இறைப்பு முறை மறந்து
விந்தைப் புதுமை மிசின் பூட்டிப் பாய்ச்சுவதால்
ஒற்றைப் பரப்போ டுடலில் உயிர் முழுவதும்
வற்றி மடிகின்ற வாழ்வகன்றோம் ! முன்னுளில்
வீட்டுக்குப் போதா திருந்த விளைவினைநாம்
கூட்டிக்கொண் டோமே கொடுத்துண்ண லாகுமினி !
ஆதலினால் இன்றைக் கரும் பொங்கல் நம்நாட்டு
வேதனைகள் முற்றும் வெளியூருக் கோட
விடைகொடுத்து விட்டோம் விடிவின் இளங் காலை
அடியெடுத்துள் வைத்துளதால் ஆர்வம் மிகப்பொங்கும்
நேரம் இதடி ! நெடும் தேக்கம் விட்டெழுந்தே,
ஊரில் புதுப்புதிய உத்திகளைக் கையாண்டு,
கீரை பயிரிடவும், கிண்டி உழவல்ல
பார "இரும்பு" களைப் பாவித்து, நாட்டினரைக்
கொல்லும் பசியின் கொடுமை யொடு மிடிமை
வெல்லும் புதுநாள் விடிந்ததெனப் பொங்கடி நீ !
காட்டைத் தறித்துக் கதிர்கள் தலைதூக்க
ஆற்றைத் திருப்பி அவைகளுக் கூட்டுவதும்,
இன்றைக்கு நம்மால் இயலுமடி ! இப்புதுமை
என்றைக்கும் குன்றாதெனச் சொல்லிப் பொங்கடியே !
பொங்கி அதோ பால் வழிகின் றது : "பொடியள்"
எங்கே ? வரட்டும் ! எடுக்கட்டும் தம்குரலை !
"பொங்கலோ பொங்கல்" ! "புதுப்பொங்கல்" ! என்றயல்வீ
டெங்குமே கேட்க எழுப்பட்டும் ஓசையை ! என்
தோகை இளமயிலே உண்ணத் தொடங்குமுன்
காகத்தைக் கூவு ! கதவைத் திறந்துவை !
உள்ளத்தில் கொள்ளா உவகையொடு பொங்கலினை
அள்ளிப் படைநீ அழகான மென்கரத்தால்
தேனும் தெவிட்டும் தெவிட்டா தடியே இன்
ருனந்தப் பொங்கல் அமுது !

---

## பொங்கல் வாழ்த்து

### செ. வேலாயுதபிள்ளை

கொங்குலவுங் கூந்தலார் கொண்டாடும் மக்களொடும்
மங்கலமாய் வாழ மனைதோறும்—பொங்கலினை
அன்பாலித் தைநாளில் ஆதவனைப் போற்றிமகிழ்ந்(து)
இன்பாய்ப் புரிக இசைந்து. (1)

* * *

அன்பே உலைநீராய் ஆர்வக் கனல்மூட்டி
இன்பே அரிசியாய் இட்டின்று—துன்பேக
உள்ளக் கலத்தில் உவகைப்பாற் பொங்கலட்டே
அள்ளிப் புசிக்க உலகு. (2)

* * *

நீராடிக் காலை நிலமெழுகிக் கோலமிட்டுச்
சீராகப் பானை அடுப்பேற்றி—நேராகப்
பாற்பெய்து பொங்கிப் பகலவனைக் கும்பிடுவீர்
ஏற்றம் அருள்கவெமக் கென்று. (3)

* * *

செய்யில் விளைந்தபுதுச் செந்நெல் அரிசிதனைத்
தையின் தலைநாள் தமிழ்க்குடியீர்—வையமெலாம்
பொங்கி மகிழ்கவெனப் பொங்கிப் பலரோடும்
இங்கிதமாய் உண்டுமகிழ் வீர். (4)

* * *

உள்ளத்துப் பொங்கும் உவகைக் கறிகுறியாய்
வள்ளற் கதிரோன் வளம்பாடித்—தெள்ளுதமிழ்
ஓத்தினிக்கும் பாற்புற்கை பொங்கி உறவாடிச்
சித்தம் அழகாவீர் நீர். (5)

## பொங்கற் பெருநாள்

(பண்டிதர் வீ. கே. பி. நாதன் அவர்கள்)

பொங்கற் பொதுநாள் போந்தது ! போந்தது !
எங்கணும் நலன்கள் எல்லாம் பொங்குக !

பாலும் சோறும் பாகும் நெய்யுமிந்
நாலும் கலந்த நற்பொங்கலைப் போல்
நம்மொரு பண்பும் நம்மொரு நண்பும்
பொன்னெழில் போலப் பொங்குக ! பொங்குக !
இன்னதோர் பொங்கல் என்று மோராயிரம்
மன்னக் கண்டு மகிழ்ந்து வாழ்மின் !
என்னரு நண்பீர் இன்புற வாழ்க !
பன்னு பாலாற்றின் பாயலிற் பல்லாண்டே !

---

## பொங்கலோ பொங்கல்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

1. அன்பு பொங்குக அருளும் பொங்குக
இன்பப் பாலே எங்கும் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

2. அறிவும் பொங்குக அழகும் பொங்குக
நறிய ஆன்பால் நன்றாய்ப் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

3. மாயமழை பொங்குக மன்னர் பொங்குக
தூமது ஞாயிறுந் துலங்கிப் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

4. ஆற்றில் வெள்ளமும் அகத்தில் விருந்தும்
வீட்டின் மக்களும் விளங்கிப் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

5. பூவின் மணமும் புதிய அழகும்
நாவில் உண்மையும் நயந்து பொங்குக
பொங்கலோ பொங்கல் !

6. காவிற் கனியும் கவின்று பொங்குக
சேவும் கன்றும் செழித்துப் பொங்குக
பொங்கலோ பொங்கல்

7. பண்ணை பொங்குக பசுங்கதிர் பொங்குக
எண்ணும் எழுத்தும் என்றும் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

8. ஏரும் ஏரியும் எழிலுடன் பொங்குக
சீரும் திருவும் சிறந்து பொங்குக
பொங்கலோ பொங்கல் !

9. கொடையும் பொங்குக குணமும் பொங்குக
மடையும் மனையும் மலிந்து பொங்குக
பொங்கலோ பொங்கல் !

10. வாழ்நா ளோங்கி வையகம் பொங்குக
தாழ்வொன் றின்றித் தமிழும் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

11. கைத்தொழில் பொங்குக கனகம் பொங்குக
மெய்த் தொழில் வாணிகம் மேவிப் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

12. பொங்குக சர்க்கரைப் பொங்கல் பொங்குக
எங்கள் நாடும் காடும் பொங்குக
பொங்கலோ பொங்கல் !

காண்க : ஒரு பிள்ளை கண்ணிகளைச் சொன்னதும் மற்றவர் " பொங்கலோ பொங்கல் " எனச் சொல்லிவர வேண்டும்.

---

## பொங்கல்

கவிமணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

தீம்பா லரிசி செழும்பயறு பாகுமொன்றாய்
வேம்போ தினிய சுவை மேவுதல்போல்—நாம்பூவில்
துன்பம் வருங் காற்துளங்கா தொன்றாகி நின்றால்
இன்பம் பெறுத லெளிது.

அன்பினிது பொங்க அறம் பொங்க ஆருயிர்கட்
கின்பசுகம் பொங்க இசை பொங்க—தேன்பொலியும்
சங்கத் தமிழோசை தாரணி யெல்லாம் பொங்க
பொங்கு தைப் பொங்கல் பெரிது.

---

## அன்புப் பொங்கல்

பரமஹம்ஸதாசன் எழுதியது

சக்திஓம் சக்திஓம் சக்தி யென் றேசுத்த
சக்திக் கனல்வளர்த்தே—அருட்
சக்தி மணமெங்கும் பொங்கிடத் தித்திக்கும்
தண்டமிழ்ப் பொங்கல் வைப்போம் !

ஜாதி, மதநிறத் தாழ்வுயர்வு பேதச்
சர்ச்சை விறகையெல் லாம்—ஆத்ம
ஜோதிஞானத்தீயில் சுட்டு எரித்துச்சன்
மார்க்கச் சுடர் வளர்ப்போம் !

தூய்மை யெனும்புதுப் பானையிலே—தியாகத்
தொண்டெனும் பால் நிறைத்தே அதில்
வாய்மையுடன் நீதி நேர்மையெனும் முத்து
மரகதத் திரள் சொரி வோம் !

பைந்தமிழ்ச் சோலையில் பொங்கி யெழுந்த
பழந்தமிழ்த் தேனினைப்போல்—உயிர்
சிந்தை யுடலெல்லாம் தித்திக்கும் தீங்கவித்
தெள்ளமு தம்விளைப்போம் !

செங்கதிர்ச் செல்வியெம் தங்க நகைமுகச்
செந்தமிழ்த் தாய் இணைக்கே—சுய
மங்கல வாழ்த் தெனும் சங்கம் முழங்கிட
மாசற்ற பூஜை செய்வோம் !

அன்புப் பழங்கள் அறிவுத் தேங்காய் அரு
ளார்வ மலர்களுடன்—எழில்
இன்பக் கலைக்கரும் பியாவையும் அர்பணித்—
தின்னமுதம் படைப்போம் !

வீழ்க பகையிருள் சூழ்க ஒளித்திரள்
வெல்க அருட்திறனே ! —என்றும்
வாழ்க எந் தாய்மொழி ! வாழ்கஎந்தாய் ! என்றே
வாழ்த்திப் பணிந்திடுவோம் !

# கமக்காரருக்கு ஒரு நிறை பொங்கல்

திரு நா. மாணிக்க இடைக்காடர் அவர்கள் (குடிசன மதிப்பு புள்ளிவிவர அதிபதி)

தமிழகத்தில் ஒரு சிறப்பான பண்டிகை பொங்கல். தமிழ் மக்கள் எவ்விடத்தில் இருந்தாலும் இந்தப் பண்டிகையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். பொங்கல் பலவித மக்களுக்கு பல அம்சங்களுடன் தோன்றும். உதாரணமாக என்னுடைய தாயார் வினவுவார், "எத்தனை சேர் அரிசியில் பொங்கல்?" என்று. என் மனைவியார், "சர்க்கரைப் பொங்கலா? அல்லது வெண்பொங்கலா?" என்று. நாடகக்கலைஞராகிய மருமகன், "என்ன நாடகம் ரேடியோவில் பொங்கலன்று நடத்தலாம்?" என்று. என் பிள்ளைகளோ, "எத்தனை பெட்டி சீனவெடி கொளுத்தலாம்?" என்று. என் வீட்டில் சமையல் வேலை செய்யும் மாணிக்கம், "என்ன விதமான பானை வாங்க வேண்டும்?" என்று. இவ்வாறு பலரும் தத்தம் தராதரத்துக்கு இயையவே பொங்கலைப் பற்றி பேசுவார்கள்.

ஆனல் விவசாயிக்கு நிறை. பொங்கல் வேளாண்மை சரிவந்தால்தான். இந்த விதத்தில் இம்முறை நிறை பொங்கல் என்றே சொல்லலாம். சில ஆண்டுகளாக வருண பகவானல் ஏமாற்றப்பட்ட விவசாய மக்கள் இம்முறை ஒரு அளவில் மழையால் திருப்தி அடைந்திருக்கிறார்கள். காலத்தே பயிர் செய்ய முடியாத பகுதிகளிலும் காலபோகம் செய்ய இயலாமற் போன பொழுதும் இடைப்போகம் செய்யக்கூடியதாய் இருக்கிறது.

## நெற்செய்கை

கடந்த போகத்தில் ஏறக்குறைய 7 லட்சம் எக்கர் இலங்கையில் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது. சிறந்த நெற்செய்கை முறைகள் சிலவற்றையும் கமக்காரர் கையாண்டிருக்கின்றனர். ஏகவர்க்க விதைநெல் உபயோகித்தல், நாற்று நடுதல், (ஜப்பானிய முறை) பசளை உபயோகித்தல், களைபிடுங்குதல், நல்ல கலப்பையால் உழுதல் ஆகியனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். ஏறக்குறைய ஒரு இலட்சம் ஏக்கருக்கு ஏகவர்க்க விதை நெல் கமக்காரர் உபயோகித்திருக்கின்றனர். 2 இலட்சம் ஏக்கர் நெற் காணிக்கு செயற்கைப்பசளை போட்டிருக்கிறார்கள். 70,000 ஏக்கர் நிலத்தில் நாற்று நட்டிருக்கிறார்கள். இவ்விதமாக நெல் விளைவை அதிகரிப்பதற்கு மக்களும் உத்தியோகத்தரும் நாட்டிற்கு அரும் பெரும் சேவைகள் ஆற்றியுள்ளார்கள்.

## எதிர்காலம்

எதிர்காலத்தையும் நெற் செய்கையையும் ஒருமித்து யோசிக்கும் பொழுது மனம் மிகவும் திருப்திப்பட்டுச் சாந்தம் அடைகிறகிறது. ஏனென்றால், இந்தக் கால போகத்தில் இலங்கையில் பல பாகங்களிலும் நாற்று நடும் விழாக்கள் நடத்தியபொழுது பள்ளிக் கூடப் பிள்ளைகள் வயலில் இறங்கியும், சேற்றில் நின்றும் நாற்றை மிகவும் குதூகலத்துடன் நாட்டினார்கள்.

இது நாற்று நடுவதற்குத் தேவையான மக்களைக் கமக்காரருக்குக் கொடுத்து உதவுவதுடன் விளைவையும் அதிகரிக்கச் செய்கிறது. எதிர்கால மக்களாகிய எங்கள் இளைஞரை விவசாயத்தில் விருப்புள்ளவர்களாய் இருக்கச் செய்வதற்கும் நல்ல முறையே. சில ஆண்டுகட்குமுன் இந்த வைபவத்தைக் கேகாலையில் பார்த்த இலங்கையில் இருந்த பர்மாப் பிரதிநிதி தங்கள் நாட்டில் இப்படிப்பட்ட சிறந்த முறையில்லையே என்று கவலைப் பட்டார்.

(19 ம் பக்கம் பார்க்க)

நிறை பொங்கல்



# இலங்கையின் முதற் பிரதமர்

## அதி. கௌரவ. டி. எஸ். சேனநாயக்கா அவர்களின் உருவச்சிலைத் திறப்பு விழா

“பாராளுமன்ற ஆட்சியை இந்நாட்டில் என்றும் நிலை நிறுத்த வேண்டும். எத்தகைய இடருற்றபோதிலும் ஐக்கிய இலங்கை யின் மீதுள்ள விசுவாசத்தையும் நம்பிக்கையையும் இழந்து விடக்கூடாது. விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்கு வதிலே தான் இலங்கை மக்களின் நல்வாழ்வு பெரிதும் தங்கியிருக்கின்றதென்பதை மறந்து விடவேண்டாம். இந்த மூன்று பிரதான விஷயங்களையே காலஞ்சென்ற எங்கள் மதிப் புக்குரிய பிரதமரின் வாழ்க்கை நன்கெடுத்துக் காட்டுகின்றது” என்று மகாதேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலகா தேசப்பிதா திரு. டி. எஸ். சேனநாயக்கா அவர்களின் உருவச் சிலையை பெப்ருவரி மாதம் 4 ம் திகதியன்று திரை நீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். பாராளுமன்ற முன்றிலில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஏராளமானமக்கள் கலந்து கொண்டனர். சீனப் பிரதமர் திரு.சௌ என் லாய், இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஸ்தானிகர்கள், அமைச்சர்கள், பொதுமக்கள் முதலிய பல திறத்தினரும் இக்கூட்டத்திற் கலந்து கொண்டனர். உருவச்சிலை ஏறக்குறைய 30 அடி உயரமானதாகும் எனக்கருதப்படுகின்றது.

உருவச்சிலையைத் திரை நீக்கம் செய்துவைக்குமாறு மகாதே சாதிபதி அவர்களைக் கேட்டுக் கொண்ட பொழுது தேசபிதா இந்நாட்டுக்குச் செய்த அரும்பெருஞ் சேவைகளை சபாநாயகர் அல்ஹாஜ் எச். எஸ். இஸ்மயில் குறிப்பிட்டார். மகா தேசாதி பதி தமது சொற்பொழிவிற் கூறியதாவது :—

எனது அரசாங்க உத்தியோக வாழ்க்கையிலே 40 ஆண்டுக ளாக நான் மரியாதை செலுத்திக்கௌரவித்துவந்த பெரியாரின் இந்த உருவச் சிலையைத் திறந்துவைத்ததைப்போன்ற ஒரு சிறந்த கடமையை நான் என்றுமே நிறை வேற்றியதில்லை. இவ்வரிய சந்தர்ப்பத்தை எனக்களித்ததற்காக நான் பிரதம அமைச்சருக்குக் கடமைப்பட்டுள்ளேன். நமது காலத்திலிருந்த மாபெருந் தலைவரின் இந்த உருவச் சிலையை ஸ்ரீலங்காவின் மாண்புக்கும் புகழுக்கும் சமர்ப்பிக்கின்றேன். இலங்கைப் பிரத மர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் சிங்களத்தில் பேசுகையில், “காலஞ் சென்ற சேனநாயக்கா அவர்களுடன் 25 வருட காலம் நெருங்கிப் பழகினேன். அவர் காலமாகி 5 வருடங்களாகி விட்டனவெனினும் அவருடைய சேவையை இலங்கை மக்கள் எக்காலமும் மறந்து விடமாட்டார் கள். எங்களிடையே அபிப்பிராய பேதமிருந்த போதிலும் சுதந்திரப் போராட்டத்தில் அவர் பெரிதும் துணைபுரிந்தார்” எனக்குறிப்பிட்டார். பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் டக்டர் என். எம். பெரேரா சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பேசினர். அவர் கூறியதாவது :—

இவ்வைபவத்தில் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத் ததற்காக மகிழ்ச்சியடைகின்றேன். 8 ஆண்டுகளாக நான் திரு. சேனநாயக்காவின் அரசியல் எதிரியாக இருந்திருக்கிறேன். சில சமயங்களில் நாங்கள் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிக் கொள்வோம். இந்தச் சிலை நிறுவப்பட்டிருக்கும் இடத்தை விடச் சிறந்த இடம் தெரிந்தெடுக்கமுடியாது. இந்தச் சபையிலே தான் அவர் கடந்தகால ஆட்சியாளரை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தினர். எதிர்கால சந்ததியினருக்கு ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்காகப் பாடுபட்ட ஒரு தலைவரை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள இந்த உருவச்சிலை பெரிதும் உதவுவதாக. இத்தகைய மனப்பான்மையுடன்தான் யான் இந்த வைபவத்திற் கலந்து, இலங்கையின் மாபெருந் தலைவர் ஒருவருக்கு எனது அஞ்சலியையும் செலுத்துவதிற் பெருமை கொள்கின்றேன்”.

உருவச்சிலையின் அடித்தளத்திற் பொறிக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பு :

இலங்கை மக்களின் உரிமைக்குப் போராடிய
உத்தம வீரரும் உண்மைத் தொண்டரும்
விடுதலைப் போரில்
முன்னணியில் நின்றவரும்
சுதந்தர இலங்கையின்
முதற் பிரதம அமைச்சருமான

**அதி. கௌரவ. டொன் ஸ்ரீபன் சேனநாயக அவர்கள்.**

தோற்றம் : 1884 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி.
மறைவு : 1952 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22 ஆம் திகதி

## சுதந்திர தின விழா

இலங்கைப் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் திங்கட்கிழமையன்று சுதந்திர தினக்கூட்ட மொன்றில் பேசுகையில் கூறியதாவது :—

“இந்நாட்டைப் பஞ்சத்தினின்றும், தட்டுப்பாட்டினின்றும் விடுவிக்கவேண்டுமென்பதே எனது அரசாங்கத்தின் இலட்சிய மாகும். நாட்டில் பொருளாதார சுதந்திரம் நிலவச் செய்து, வாழ்க்கைத் தரத்தைச் சீர்திருத்தி, அதனை ஓர் உன்னத நிலையில் வைக்க வேண்டுமென்பது எனது வேணவா. இந்த வருடம் சுதந்திர தின விழாக்களை வித்தியாசமான வழிகளில் கொண்டாடும்படி நான் ஆலோசனை கூறியுள்ளேன். பொது மக்களாகிய நீங்கள் உண்மையாகவே சுதந்திரமடைந்திருக் கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியதுடன் அங்ஙனம் உணரவும் வேண்டுமென நான் விரும்புகிறேன்.

இலங்கையடைந்த சுதந்திரத்தை முன்னைய அரசாங்கம்சிறந்த முறையில் பயன்படுத்தவில்லை. எனக்கு ஏற்பட்ட மனக் கசப்பி னால் நான் அந்த அரசாங்கத்திலிருந்து 1951 ம் ஆண்டில் இராஜிநாமாச் செய்தேன். மக்கள் என்னை மறந்து கைவிட்டு விடவில்லை. இலங்கையில் முன்பு எந்த அரசாங்கத்துக்கும் இருந்திராத பெருந்தொகையான அங்கத்தவர்களுடன் 1956 ம் ஆண்டில் நான் ஆட்சிப்பீடமேற்றப்பட்டுள்ளேன். இதிலிருந்து மக்கள் என்னிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தனர் என்பது புலனுகிறது. மக்கள் அரசாங்கம், மக்களுக்கு உகந்த வகையில் சேவைசெய்யக் கடமைப்பட்டுள்ளது.

அரசாங்கம் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளது. சிங்கள மொழி எற் கெனவே அரசாங்க மொழியாக்கப்பட்டுள்ளது. சாம்ராஜ்யத் துக்குரிய கௌரவப்பட்டங்களை அரசாங்கம் நிறுத்தி விட்டது. பௌத்த கொமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. மக்களின் பாரம்பரிய கலாச்சாரங்களைப் புனருத்தாரணஞ் செய்யும் பொ ருட்டு, கலாச்சார விவகாரங்களைக் கவனித்தற்கென ஓர் புறம் பான மந்திரிகாரியாலயம் நிறுவப்பட்டுள்ளது. நாட்டில் அபிப்பி ராய பேதங்கள் நிலவுகின்றன. ஆனால் அவற்றைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியும்.

இக்கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்தியவர்களுள், சீன மக்கள் குடியரசின் பிரதம மந்திரி திரு. சௌ என் லாய் அவர்களும் ஒருவராவர்.

# நான் கண்ட சீனா

திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை (உணவு விவசாய அமைச்சு நிரந்தரச் செயலாளர்)

இலங்கையைப் போலவே சீனமும் புராதனப் பெருமை வாய்ந்தது. இவ்விரு நாடுகட்கிடையில் கலாசாரத் தொடர்பு பன்னெடுங்காலமாக இருந்துவருகிறது. தமிழகத்திற்கும் சீனத்துக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததென்பது சீனத்துப் பட்டு, சீனத்து முத்து, சீனக்குடை, சீனச்சட்டி முதலிய சொற்களையும் சொற்றொடர்களையும் நோக்குமிடத்து நன்கு புலப்படும். பாரத நாட்டுக்கண்மையில் இருக்கும் இலங்கையுடன் சீனம் மிக மிகப்பழங்காலந்தொட்டே தொடர்பு பூண்டிருந்தது வியப்பன்று. இவ்விரு நாடுகட்குமிடையே தொடர்பு ஏற்படத் தொடங்கியது கி. பி. 97 வரை எனலாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாஹியன் எனும் சீன யாத்திரீகன் இலங்கைக்கு வந்து ஈராண்டுவரை தங்கியிருந்து பௌத்த மதத்தைக் கற்றுச் சென்றனன் எனச் சரித்திரம் கூறுகின்றது. இலங்கையுடன் புராதனத் தொடர்புபூண்ட சீனாவில் பிரயாணஞ் செய்யும் வாய்ப்பு எனக்கு இருமுறை கிடைத்தது. 1952 ம் ஆண்டு மார்கழி மாதத்தில் இலங்கை அரசாங்கம் சீன அரசாங்கத்தோடு ஒரு வர்த்தக ஒப்பந்தம் முடித்தது. அந்தக் காலத்தில் நம் நாட்டுத் தேவைக்குப் போதிய அரிசியைப் பிறநாடுகளிலிருந்து பெறுவது மிகக் கஷ்டமாயிருந்தது. அத்துடன் இங்கே உற்பத்தியாக்கப்படும் ரப்பரை உலக சந்தையிலே நியாயமான விலைக்கு விற்பதும் கஷ்டமாயிருந்தது. நாம் ஏற்றுமதி செய்யும் விளைபொருட்களுக்குத் தக்க விலை கிடைக்காவிடின் நமக்குப் போதுமான உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்வது எப்போதும் கஷ்டமாகத்தானிருக்கும். இந்த நிலையில், எங்களுடைய ரப்பருக்குத் தக்க விலை கொடுப்பதாயும், நாம் அனுப்பும் ரப்பருக்குப் பதிலாக நமக்கு அரிசி தருவதாயும் சீனா தெரிவித்தது. இத்தகைய பண்டமாற்று இருபகுதியாருக்கும் வாசியாயிருப்பதாற்றான் முன் கூறிய ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் சீனா நமக்கு வருஷமொன்றுக்கு 2,70,000 தொன் அரிசி கொடுப்பதாயும் நாம் சீனாவுக்கு 50,000 தொன் ரப்பர் கொடுப்பதாயும், இவற்றின் விலையை ஒவ்வொரு வருஷமும் இருபகுதியாரும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இவ்வொப்பந்தம் 1953 ல் இருந்து 1957 ம் வரை உறுதியாயிருக்குமென்றும் முடிவு செய்யப்பட்டது. 1954 ம் ஆண்டில் அமுலாயிருக்க வேண்டிய விலையைப் பேசுவதற்காக இலங்கை அரசாங்கம் அனுப்பிய தூதுக் கோஷ்டியில் நானும் சேர்ந்துகொண்டேன். இக் கோஷ்டி எங்கள் ஜப்பான் ஸ்தானிகர் சேர் சுசந்தா பொன்சேகாவின் தலைமையில் 1953 ம் வருஷம் புரட்டாசி மாசம் சீனாவின் தலைநகராகிய பீக்கிங்குக்குப் புறப்பட்டது. நாமெல்லாம் "கொங்கொங்" தீவில் சந்தித்துப் புகையிரத மார்க்கமாய்ப் புறப்பட்டோம். தற்காலத்திலே ஒரு நாட்டின் மக்கள் இன்னொரு நாட்டுக்குப் போவதானால் பல தொல்லைகள். தன்னாட்டு அரசினர் உத்தரவுப்பத்திரமன்றி மறுநாட்டரசினருடைய உத்தரவுப்பத்திரமும் வேண்டும். அதுவும் சீனாவுக்குப் போவதென்றால் இன்னும் கூடியதொல்லை. இப்போதைய சீன அரசினர் பிறநாட்டவர்மேல் கொண்டிருக்கும் சந்தேகத்தின் பொருட்டு எல்லாரையும் தம் நாட்டெல்லைக்குள் வர அநுமதிப்பதில்லை. "கொங்கொங்" கைத் தாண்டிச் சீனாவின் எல்லைக்குள் பிரவேசிக்கும்போது சீன காவற்காரர் துப்பாக்கி தாங்கி காவல் புரிவது எனக்கு வியப்பாயிருந்தது. ஆனால் இதற்காகச் சீன அரசாங்கத்தைக் குறை சொல்வதற்கில்லை., ஏனென்றால் தமக்கு விரோதமான நடவடிக்கைகளை பிறநாட்டவர் சிலர் கையாளுகின்றனரென்பதையறிந்தே இத்தகைய பந்தோபஸ்து முறைகளை ஏற்படுத்தி யிருக்கின்றனர். ஆனால் அவர்கள் அழைப்பின் பிரகாரம் சென்றமையாலும் இலங்கைக்கும் சீனாவுக்கும் நல்லுறவு இருப்பதனாலும் நமக்குப் பிரமாதமான வரவேற்புக் கிடைத்தது.

தற்போது சீனாவில் பிறநாட்டாதிக்கத்தின் சின்னமாக இன்னும் காணப்படும் இடங்கள் "**கொங்கொங்**", **மக்காவோ** என்ற சிற்றூர்கள். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்குமுன்னர் சீனர் பலவீனப்பட்டு இருந்தபோது மேலைத்தேய வல்லரசுகள் சீனாவின் பல துறைமுகங்களையும் கைப்பற்றித் தம் நாட்டு வர்த்தகத்தை விருத்தி செய்வதற்காக ஆட்சி நடத்திவந்தனர். ஆனால் இந்தியா, பர்மாவில் நடந்தவாறு சீனா முழுவதுமோ அல்லது அதன் பெரும்பாகமோ ஒரு போதும் பிறநாட்டாரால் கைப்பற்றப் படவில்லை. இது சீனருடைய தேச பக்திக்கும் தியாகப் பண்புக்கும் எடுத்துக்காட்டாகும். ஆனால் சீனாவின் வட கிழக்கிலுள்ள மஞ்சூரியாப் பிரதேசம் மாத்திரம் ஜப்பானியரால் 1931 ம் ஆண்டில் ஆக்கிரமிக்கப்பட்டு சில காலமாக அவர்கள் ஆட்சியிலிருந்தது. சென்ற மகாயுத்தத்தின் விளைவாக இப்பிர தேசம் சீன ஆட்சிக்குள் திரும்பவும் வந்து விட்டது. ஆகவே சீனக் கண்டத்தில் பிரித்தானியர் வசமிருக்கும் "கொங்கொங்"கும், போர்த்துக்கீசர் வசமிருக்கும் மக்காவோவுமே இப்போது சீன இராச்சியத்திற்குப் புறம்பாக உள்ளவை. சாங்கை, ரீன்ற்சின் போன்ற இடங்களில் வேரூன்றிய வெள்ளைக்கார ஆதிக்கம் நாளடைவில் வெளியேற்றப்பட்டது.

இன்னும் சில காலங்களில் "கொங்கொங்" மக்காவோப் பகுதிகளும் சீனா ஆட்சிக்குள் வரக்கூடும்.

படத்தைப் பார்க்கும் போதே சீனா எவ்வளவு பிரமாண்டமான நாடென்று தெரிகின்றது. ஆனால் ஒரு சிறு தீவில் வசித்துவந்த எனக்கு சீனாவில் கால்வைத்த போதே ஒரு புது உணர்ச்சி தோன்றியது. சீனாவில் ஆகாய விமானப் போக்குவரத்து மிகக் குறைவு. ஆகையாலே பீக்கிங் நகரத்துக்கு நாம் புகையிரத மார்க்கமாகப் போவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பத்து மணி நேரத்தில் பிரயாணஞ் செய்து பழகிய எனக்கு சீன எல்லைப்புறப் புகையிரதத் தானத்திலிருந்து பீக்கிங் நகரத்துக்கு புகையிரதப் பிரயாணம், கடுகதி வண்டியில் (Express Train). 4 பகலும் 3 இரவும், எடுக்குமென்றறிந்ததே ஒரு புறம் அதிசயமும் ஒரு புறம் கவலையுமாயிற்று. அத்தனை பெரிது சீனா. இனிச் சீனமக்களைச் சிங்கப்பூர், மலாயா, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் பார்த்திருக்கிறேன். ஆனால் சீனாவில் எல்லாம் சீனமயம். பிறநாட்டவர்கள் மிக மிகக் குறைவு. சீனாவின் விஸ்தீரணம் ஏறக்குறைய 40 இலட்சம் சதுரமைல். சீனாவின் சனத்தொகை அநேக காலமாக எண்ணிக்கை செய்யப்படவில்லை. பூமிசாஸ்திரப் புத்தகங்களில் தந்திருப்பது ஊகிக்கப்பட்ட எண். அண்மையில் சீன அரசாங்கம் எண்ணிக்கை செய்து காணப்பட்டதொகை 600,000,000 சீனாவைத் தாண்டி மறு தேசங்களில் ஏறக்குறைய 30,000,000 சீனர் வசிப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆகவே உலக குடி

சனத்தில் சீனமக்கள் நாலிலொருபங்காக விளங்குகின்றுர்கள். சர்வாதிகாரி "நெப்போலியன்" ஐரோப்பாக் கண்ட முழுவதிலும் தன் ஆணையைத் தாபிக்க முயன்றபோது சொன்ன வாக்கியம் நினைவு கூரற்பாலது. "தூர கிழக்கு ஆசியாவில் சீனு பெரிய இராட்சத ரூபத்தோடு காணப்படுகின்றது. ஆனுல் அந்த இராட்சதன் இப்போது உறங்கிக்கொண்டிருக்கிருன். அவன் உறங்கும் வரை மேலைத்தேய ஆதிக்கத்துக்கு எதிர்ப்பில்லை" நெப்போலியன் நினைத்தவாறு கிட்டத்தட்ட 150 ஆண்டுகளாகச் சீனர் உறங்கிக் கொணடிருந்தார்கள் என்று சொலலலாம். குடிசனம் மிகுந்த யாதேனுமொரு நாட்டுக்கு இயற்கை வளனு மிருக்குமேல் அதுசெல்வமும் வன்மையும் பொருந்தி உலகத்திலே மதிப்போடு விளங்கும். ஒரு அரசை வல்லரசாக்குவதும் நல்லரசாக்குவதும் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று பண்டைய தமிழர் வகுத்தார்கள். சீனு பல்லாண்டுகளாகத் தூங்கிக்கொண்டிருந்தமைக்குப் பல காரணங்களுள. சீனுவின் பூர்வீகம் 4,000 ஆண்டுகளுக்கப்பாற்பட்டது. தமிழர் பண்டைய நாகரீகம்போல சீனருடைய அக்கால நாகரிகமும் உயர்ந்திருந்தது. விவசாயத்தை அடிப்படையாக் கொண்டது. மலைகளுக்கும் நதிகளுக்கும் பூமிச்செழிப்புக்கும் குறைவில்லை. சீனர் நல்ல உழைப்பாளிகள். பல லோகப் பொருட்களும் சீனுவின் பல பாகங்களிலும் உண்டு. வட சீனுவிலும் மத்திய சீனுவிலும் நிலக்கரியும் இரும்பும் உண்டு. தென் சீனுவில் பொன், செம்பு, ஈயம், தகரம் ஆகிய பொருட்கள் உண்டு. ஆனுல் இவற்றை விஞ்ஞான முறை கொண்டு சீனர். அநேககாலமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. 4,000 ஆண்டுகளாக நாட்டின் செல்வம் விவசாயத் தொழிலேயே தங்கியிருந்துவந்தது. ஆனுல் குடிசனம் அமோகமாகப் பெருகினபோது பொருளுற்பத்தியெல்லாம் மக்களின் அன்ருட சீவனத்துக்கும் போதாமல் வந்தது. காலத்துக்குக் காலம் பஞ்சமும் பிணியும் நாட்டில் பரவின. சீனரின் பல தாரக் கொள்கையே குடிசனப் பெருக்கத்துக்குக் காரணம். ஆகையாலே மாருவறுமையில் ஆழ்ந்திருந்து சீனு. அத்துடன் பழைய காலத்தில் சீனுவின் வெவ்வேறு பாகத்தையும் வெவ்வேறு அரசுகள் பரிபாலித்தன. இவர்களுக் கிடையில் இடையிடையே போர் நிகழ்ந்தது. கிறிஸ்தாப்தத் தொடக்கத்தில்தான் பெரும் பாகம் ஒரு சக்கரவர்த்தியின் ஆட்சிக்குள் வந்தது. ஈற்றில் 1912 ம் ஆண்டிலேயே பல வகுப்பினரும் ஒற்றுமைப்பட்டு ஒரு குடியரசை நிலை நாட்டினர். சீன தேசத்தை ஒற்றுமைப் படுத்தி ஒரு பலமுள்ள நாடாக்கும் முயற்சியில் அரும்பாடுபட்ட தலைவருட் தலைசிறந்தவர் சுன் யாற் சென் என்ற பெரியார். இவர் காலத்தில் சீனுவின் அரசியல் நிலையும் பொருளாதார நிலையும் திருந்தி வந்தன. ஆனுல் நாட்டின் ஏழைத்தன்மை அதிகம் திருந்தவில்லை. இதற்கு ஒரு காரணம் அக்காலச் சமூகமுறை. நாட்டிலே உள்ள விவசாய நிலம் சிலருக்கே சொந்தம். நிலத்தைச் செய்யும் விவசாயிகள் குத்தகைக்குச் செய்து விளைவின் பெரும் பாகத்தைக் குத்தகையாகக் கொடுக்கும் நிலைமை யிருந்தது. இதைப் பழைய கால (Feudal) மானிய முறையென்றழைப்பார்கள். இந்தியாவிலும் இம்முறை வழங்கியது. இதன்பயனுக ஏழை விவசாயிகள் எப்போதும் ஏழைகளாகவே இருந்தார்கள். விவசாயப்பலனைப் பெருக்குவதில் அக்கறையில்லாமலிருந்தனர். அத்துடன் சுன்யாற்சென் இறந்தபின் உள் நாட்டுக்குழப்பங்கள் உண்டாயின. 1937 ம் ஆண்டில் மஞ்சூரியாவை ஏற்கனவே கைப்பற்றிய ஜப்பானியர் சீனுவில் படையெடுக்க நாட்டின் நிலைமை இன்னும் மோசத்திற்கிடமானது. இந்தக் காலத்தில் நாட்டின் ராசீயத்தலைவராயிருந்தவர் **சாங்கேசெக்** என்பவர். இவருடைய நிர்வாகத்தில் பெருங் குறைகள் காணப்பட்டன. பசியும் பிணியும் நாட்டில் தலையெடுத்தன. ரூசியாவில் பொது உடமை அரசாட்சி முறையின் பலாபலன்களை அறிந்த சில அறிஞர் சீனுவின் ஏழைத் தொழிலாளரைச் சேர்த்துத்தாமும் ஒரு பொது உடமைத் தாபனத்தைத் தொடங்கினர். காலகெதியில் ஏழைவிவசாயிகளையும் தம் பக்கம் சேர்த்தனர். ஆரம்பத்தில் சீனுவின் வட பாகத்தில்தான் பொது உடமை இயக்கம் வேரூன்றியது. ஆனுல் சென்ற யுத்தத்தின் பொழுது ஜப்பானை எதிர்ப்பதற்காகப் பொது உடமை கட்சியும் சாங்கே செக்கின் முதலாளிக்கட்சியும் ஒருங்கு சேர்ந்தனர். ஜப்பானைத் தோற்கடித்தபின் பொது உடமை யாளரை ஒழிக்க சாங்கே செக் முயன்றுர். ஆனுல் சாங்கே செக்கின் ஆட்சிமுறையில் இலஞ்சம் சுயநலம் போன்ற ஊழல்கள் மலிந்திருந்தமையால் அவருக்குப் பொதுஜன ஆதரவு குன்றியது. நான்கு வருஷமாக இரு கட்சிக்கிடையிலும் போர் நடந்தது. 1949 ம் ஆண்டு பொது உடமைக்கட்சி வென்றது. இப்போது சீனு முழுவதிலும் பொது உடமைக் கட்சி தன் ஆட்சியைப் பலப்படுத்திக் கொண்டு வருகின்றது. சாங்கே செக்குடைய தேசீயக் கட்சி போர்மோசாத் தீவையும் இன்னும் சில சிறு தீவுகளையுமே ஆண்டு வருகின்றது.

இனி என்னுடைய பீக்கிங் பிரயாணத்தைத் தொடர்ந்து கவனிக்குமிடத்து, சீனுவின் இயற்கை வளத்தை ஒருவாறு அறியலாம். எல்லைப் புறத்தானத்திலிருந்து 4 மணிநேரத்தில் கான்டன் நகரத்துக்கு வந்தோம். இது தென் சீனுவின் பிரதம நகரம். சிக்கியாங் நதியின் கரையிலுள்ளது. தென் சீனுவிலும் மத்திய சீனுவிலும் ஏராளமாக நெற்செய்கையுண்டு. கான்ரனுக்கு அடுத்த பெரிய நகரம் காங்கோ. இங்கே வரும் வழியில் மலைகளும் பள்ளத்தாக்குகளும் காட்சியளிக்கும். புகையிரதப்பாதையின் இரு மருங்கிலும் நீண்ட அகன்ற வயல்கள். நெல்லை விடச் சோழம், கரும்பு எள்ளு ஆகியவை விளைகின்றன. சமபூமியின் ஒரு பகுதியிலும் செய்கையில்லாமலில்லை. காங்கோ நகரம் யாங்ற்சே நதியின் வடகரையில் உள்ளது. இதுவே சீனுவின் ஆகப்பெரிய நதி. ஏறக்குறைய 3,000 மைல் நீளம். நாம் கடந்த இடத்தில் 2 மைல் அகலம். பெருங்கப்பல்கள் 600 மைல் உள்ளிருக்கும் காங்கோவுக்கு வரக்கூடும். இன்னும் மேலாகச் சுங்கிங் நகர் உள்ளது. அங்கும் சிறு கப்பல்கள் செல்லும். நாம் கடந்த அடுத்தநதி குவாங்கோ. இதை மஞ்சள் நதி என்றழைப்பார்கள். இவ்விரு நதிகளும் சீனுவுக்குச் செழிப்பை அளிக்கின்றன. ஆனுல் பெருகும் போது அளவற்ற சேதங்களும் உண்டாக்குவன. இரண்டாம் முறை நான் போனபோது யாங்ற்சே பெருக்கெடுத்து ஏறக்குறைய 10 லட்சம் ஏக்கரில் விளைவைச் சேதப்படுத்தியிருந்ததை ஆகாய விமானத்தில் திரும்பி வரும் பொழுது பார்த்தேன். சீனுவின் தலை நகர் பீக்கிங். இதன் சனத்தொகை 30 லட்சம். ஆனுல் ஆகப்பெரிய நகரம் சாங்கே. இங்கே 60 லட்சம் மக்களுண்டு.

இப்போது ஏழு ஆண்டுகளாகக் கொம்யூனிஸ்டு ஆட்சி சீனுவில் பலப்பட்டு வருகின்றது. இது உலகத்தின் சுதந்தரநாடுகளின் அரசியல் கொள்கைக்கு மாறுனது. அரசியல் விஷயங்களில் மக்கட் சுதந்திரத்தைப் பேணுதகொள்கை. ஆனுல் சீனரில் பெரும்பாலார் இவ்வாட்சிமுறைக்கு ஆதர வளிக்கின்றுரென்றுல் அதற்குப் பல நியாயங்களுண்டு. முதலாவது, சீனசரித்

( 18 ம் பக்கம் பார்க்க )

# காந்திஜியும் பெண்களும்

" விநாயகி " கொழும்பு

இவ் வுலகில் எத்தனையோ அவதார புருஷர்கள், மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், விஞ்ஞானிகள் தோன்றி மறைந்தார்கள். உலகம் அவர்களை மறக்க வில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியாராலேயே நினைக்கப்பட்டு வருகின்றார்கள். ஆனால், சாதி, மதம், நிறம், ஏழை—பிரபு, தொழிலாளி—முதலாளி, விவசாயி—விஞ்ஞானி, என்ற வேறுபாடின்றி எல்லோர் மனத்திலும் இருக்கும் உத்தம புருஷர் நம் பாபுஜீ. பாபுஜீ ஒரு கோடீஸ்வரனல்ல. ஆனால் கோடீஸ்வரரெல்லாம் அவருக்கு ஏவல் செய்யக் காத்துக் கொண்டிருந்தனர். பெரிய சர்வாதிகாரியல்ல. ஆனால் தேசம் முழுமையும் அவரின் சொல்லுக்குச் செவி சாய்த்தது.

அப்படிப்பட்ட காந்தி அண்ணலை ஒரு சிறு மத வெறிப் பாம்பு கவ்வி விட்டது. அவர் நாட்டிலே அவருடன் பழகிய ஒரு மராட்டியன் சுட்டுக் கொன்றான். 1948 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ந் திகதி இந்தப் பேரிடியை உலகிற்கு அறிவித்தது. உலக அன்னையின் கண்ணிலே ஓயாது செந்நீர் பெருகியது. இப்படி உலகெங்கணும் மகாத்மா எப்படிப் புகழடைந்தார்? அவரது பொருளா? புகழா? அல்லது தாய் நாட்டிற்குச் செய்த சேவையா? மகாத்மாவின் சேவையால் பல்லாயிரங் கிராமங்களும் பொன் கொழிக்கும் பூமியாக மாறவில்லை. கஞ்சிக்குத் தவிக்கும் ஏழை மக்கள் பணக்காரராக மாறவில்லை. வறுமை இந்தியாவை விட்டு ஓடித் தலை முழுகவும் இல்லை. அவர் மக்களின் மனதில் நிரந்தர இடத்தைப் பெறுவதற்குக் காரணமாயிருந்தவை அண்ணலின் இலட்சியமும், அவ்விலட்சியத்தை அடைய அவர் திறந்த வழிகளும் அதில் வழி நடக்க அவர் செய்த தியாகங்களும்தான்.

உலகிலுள்ள எல்லாச் சமுதாயத்தினருக்கும் வழி காட்டிய காந்தி மகான் நம் பெண் சமுதாயத்தினருக்கு என்ன கூறியிருக்கின்றார்? அவர் பெண்களுக்கு என்ன இலட்சியத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறியிருக்கிறார்? என்றெல்லாம் நாம் அறிய வேண்டாமா? ஒரு முறை காந்திஜி வட இந்தியாவில் இருந்த ஒரு பெயர் பெற்ற பெண்கள் சங்கத்திற்குச் சென்றிருந்தார். அங்கு கூடியிருந்த பெண்கள் பலர் பலப்பல கேள்விகளை அவரிடம் கேட்டனர். காந்திஜியும் தயங்காமல் சிரித்த முகத்துடன் பதில் அளித்து வந்தார். அப்பொழுது ஒரு சகோதரி எழுந்து நின்று, பாபுஜீ, பெண்களுக்குரிய தொழில் எது? இவ் வாண்களுக்குக் கீழ் அடங்கி எத்தனை காலம் நாம் வாழ்வது? அவர்கள் செய்யும் வேலையை நாம் செய்ய முடியாதா என்ன? என்று துணிந்து கேட்டார். காந்திஜி அப்பெண்ணின் தைரியத்தைப் பாராட்டிவிட்டு அச் சகோதரியின் கேள்விக்கு விடையளிக்கத் தொடங்கினார். அவர் பதிலின் சுருக்கம் இதுதான்.

"சத்தியாக்கிரக இயக்கத்தைக் கண்டு பிடித்ததன் மூலம் பெண்கள் இயக்கத்திற்கும் அடிகோலி விட்டதாக நான் பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு. ஆண்களுக்கு அளிக்கும் பயிற்சி போல் அல்லாது வேறு விதமான பயிற்சியைப் பெண்களுக்கு அளிக்க வேண்டுமென்றால் அது யாதென்று ஆண்களால் கண்டு பிடிக்க முடியாது. இன்னின்ன நிலைமையில் தாங்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை, கஷ்டப்படுகிறவர்கள் தான் அறிய முடியும். ஆகையால் பெண்களுக்குரிய தேவைகளைப் பெண்களே உணர்ந்து தாங்களே தீர்மானமான ஒரு முடிவிற்கு வரவேண்டும். ஆண்பிள்ளை ஏறியிருக்கும் கிளையை எட்ட முயலும் பெண், தான் தடுமாறி விழுவதுடன், ஆணையும் கீழே தள்ளி விடுகிறாள். பெண்களுக்குச் சரியான கல்வி போதிக்க வேண்டுமென்பதில் எனக்கு நம்பிக்கை உண்டுதான். ஆண்மகனைக் காப்பியடித்து அவனோடு பெண் போட்டியிடுவாளேயானால், உலக வளர்ச்சிக்காக அவளால் ஒன்றுமே செய்ய முடியாது; இதுவே எனது நம்பிக்கை. அவளுக்குப் போட்டியிடச் சக்தி உண்டு. ஆயினும் ஆணோடு போட்டியிடுவதனால், இயல்பாக அடையக் கூடிய மேன்மைகளை அவளால் அடைய முடியாது. அவனிடம் காணப்படும் குறையை நிரப்பிச் சரிப்படுத்துவதே பெண்ணுக்குரிய இயல்பான வேலை" என்று நம் காந்திஜி கூறுகின்றார்.

பெண்களைக் கூறுமிடத்து நாம் கஸ்தூரிபா அம்மையாரைப் பற்றிக் கூறாது விட முடியுமா? காந்திஜியின் வீட்டு அலுவல்கள் யாவற்றையும் அவர் மனைவி கஸ்தூரிபாவே கவனித்து வந்தார். உப்பில்லாமல் சமைத்த கீரை, ரொட்டி இப்படியான உணவு தான் காந்திஜி தினசரி உண்டார். கஸ்தூரிபா வெகு ஜாக்கிரதையுடன் சுத்தமாய், சரியான சமயத்திற்கு இவைகளையெல்லாம் தயாரித்து வைப்பது வழக்கம். இவர் பழைய காலத்துப் பெண்களைப் போல் தெய்வ பக்தியும், பதிபக்தியும் பூண்டவர். சில நல்ல ஆசார அனுஷ்டானங்களை வெகுவாய்ப் போற்றியவர். மஹான்களின் வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப்பெறுவது பெரும் பாக்கியம்தான். ஆனால் அப் பதவியின் பொறுப்பை வகிப்பதென்பது எளிதான காரியமன்று. மகாத்மாவுடன் எல்லாக் கொள்கைகளிலும் ஒத்துழைப்பது அன்னைக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. உதாரணமாக, "தோட்டி வேலை மிக இழிவானது, அதைச் செய்பவர் இழிந்த ஜாதியினராக இருப்பவர்" என்ற தப்பான கொள்கையை மகாத்மா காந்தி மிகவும் வெறுத்து வந்தார். தென் ஆபிரிக்காவில் இவருடைய இல்லத்தில் இவருடன் கூட இருந்தவர்களில் ஒருவர் ஹரிஜன குலத்தில் பிறந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர். இவர் காந்தியடிகளின் குமாஸ்தா. அந்தப் பிரதேசத்து வீடுகளில் மலஜலக் கூடம் கிடையாது. இரவில் படுக்கை அறைகளில் மலஜலச் சட்டிகள் வைப்பது வழக்கம். மகாத்மா அல்லது கஸ்தூரிபா தான் அச் சட்டிகளைச் சுத்தம் செய்வது வழக்கம். ஆனால் கஸ்தூரிபா அந்த ஹரிஜனக் குமாஸ்தாவின் சட்டியைச் சுத்தம் செய்ய மறுத்து விட்டார். "இம்மாதிரி முரண்டுகளுக்கு என் வீட்டில் இடமில்லை. உனக்கு இவ்வேலைகள் பிடிக்காவிட்டால் இந்த வீட்டை விட்டு வெளியே போய் விடு" என்று ஒரு நாள் காந்திஜி கடுமையாகக் கூறிவிட்டார். அதற்குக் கஸ்தூரிபா "எனக்குத் தாய் தந்தையரில்லை. உங்களை விட எனக்கு வேறு யார் இவ்வுலகில்?" என்று அழுது கொண்டே கேட்டாராம். அவருடைய அந்தப் பணிவான சொல், காந்தியடிகளின் மனசில் சுறுக் கென்று தைத்தது. அது முதல் காந்திஜி, கஸ்தூரிபாவை அம்மாதிரியான பணிகளைச் செய்யும்படித் தூண்டுவதில்லை. ஆனாலும் கஸ்தூரிபா தாமே மனமுவந்து அவ் வேலைகளைச் செய்வது சகஜமாய்விட்டது.

காந்திஜி கடின சித்தம் உடையவர் என்பது யாவரும் அறிந்ததே. எனினும் அவர் அன்புடையவர். ஆனால் வசப்

படுத்த முடியாதவர். அவரிடம் சகிப்புத் தன்மை உண்டு. எதிர்ப்புச் சக்தியை அவர் வெறுப்பதில்லை. உண்மையிலேயே அதை அவர் வளர்க்கிறார். ஜனங்கள் காந்திஜியை அதிகம் நம்புவதால் அவரை யாரும் எதிர்ப்பதே இல்லை. இதற்கு விதி விலக்காக ஆஸ்ரமத்தில் ஒரே ஒரு நபர் மட்டும் உண்டு. அவருக்கு மிக நெருங்கிய தொடர்புடையவரான, அவர் மனைவியே அந்த நபர். ஆஸ்ரமத்தில் அவரை "பா" அதாவது "தாய்" என்றே அழைப்பார்கள். மிகத் துடுக்கான சுபாவம் உடையவர்; பிரகாசமான கண்கள். கண்டிப்பான குரல். உறுதியான உதடுகள். ஆக்ஞை இடத்தக்க வயது முதிர்ச்சி. விரும்பினால் இனியவராக நடந்து கொள்வார். இல்லையேல் இரக்கமற்றவராகவும், பணிவற்றவராகவும் கூட நடப்பார். அங்கு சமையல் முதலியவற்றைக் கண்டிப்பான முறையில் அந்த அம்மையாரே மேற்பார்த்து வந்தார். காந்திஜிக்கும் கஸ்தூரி பாவுக்கும் மோதல் ஏற்படும் விஷயம் ஒன்றுண்டு. அப்போது காந்திஜி சற்றுப் பலவீனம் அடைந்திருப்பவர்போல் தோன்றும். நியாயம் என்னவோ பாவின் சார்பில்தான் இருக்கும். காந்தியின் ஆஸ்ரமத்திற்கு எதிர்பாராத நிலையில் அடிக்கடி பல விருந்தினர்கள் வருவார்கள். முன்னறிவிப்பின்றி இம்மாதிரியாக விருந்தினர்கள் வரும்போது கஸ்தூரிபாவிற்குக் கோபம் ஏற்படும். ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ள மாட்டார். இவ்வேளைகளில் காந்திஜி பணிவாகவும் தந்திரமாகவும் நடந்து கொள்வார். "பா" வுக்குச் சற்றுப் பயப்படுவார். ஒரு சமயம் அன்னையும் துணையாளரும் உணவுக்குப்பின் வேலைகளை முடித்துக் கொண்டு அடுக்களையை மூடினர். அன்னையார் களைப்புத் தீர அறையில் சிறிது நேரம் நித்திரை கொள்ளச் சென்றார். அந் நேரம் காந்திஜி வேகமாக அடுக்களையை அடைந்து வெளிக் கிளம்பத் தயாராய் இருந்த சமையற்கார வாலிபனிடம் ரகசியமாக அடுக்களையிலுள்ள அன்னையைத் தொந்தரவு செய்யாதபடி, ஒரு மணி நேரத்தில் வரவிருக்கும் மோதிலால் நேரு உட்பட பல முக்கிய விருந்தினர்கட்கு உணவு தயாரிக்கும்படி கூறினார்.

அன்னையின் அறையைப் பார்த்ததும் அவர் உதட்டில் விரலை வைத்து, "உஸ் அவளை எழுப்பாமல் செய். அடுப்பைப் பற்றவை; காய்கறியை நறுக்கு, சப்பாத்திக்கு மாவைப் பிசை! ஜாக்கிரதை! அன்னைக்குக் கோபமுண்டாகச் செய்யாதே" என்றார். அவர் பேச்சில் குற்றமற்ற சூழ்ச்சிக்காரரின் தொனிப்பு இருந்தது. ஒரு வேளை அன்னை திடீரென எழுந்து தம்மேல் எரிந்து விழுவாளோ என்ற பயமும் சிறிது இருந்தது. சமையற்கார வாலிபனும் அடுப்பை மூட்டிக் காய்கறிகளை நறுக்கி மாவைப் பிசைந்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒரு பித்தளைப் பாத்திரம் தடுமாறித் தரையில் விழுந்த சப்தத்தைக் கேட்ட அன்னை எழுந்து விட்டார். ஆஸ்ரமப் பூனைகள் அடுக்களையில் ஏதோ விஷமம் செய்வதாக எண்ணிச் சட்டென உட்புகுந்தார் அங்கு கண்ட காட்சி பிரமிப்பைக் கொடுத்தது. "நடப்பவை என்ன?" எனக் கடுமையான குரலில் கேட்டாள். அவன் மெதுவாக உண்மையான விபரத்தைக் கூறினான். "எனக்கேன் தெரிவிக்க வில்லை? அதிகப்படியான வேலையைக் கவனிக்க மாட்டேன் என்ற எண்ணமா?" என வினவினார். அன்று இரவு பிரார்த்தனைக்குப் பின் அனைவரும் சென்ற பின் அன்னை காந்திஜிக்கு முன் நின்று கொண்டு, "நானின்றி அவர்களை ஏன் வேலை செய்யச் சொன்னீர்கள்? நான் ஒரு சோம்பேறி என்பதாக உங்கள் அபிப்பிராயமா என்ன?" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டாள். "இம் மாதிரிச் சமயங்களில் உனக்கு நான் பயமில்லையா?" எனக் காந்திஜி சாதுர்யமாகப் பதிலிறுத்தார். "என்ன எனக்குப் பயமா?" எனக் கூறும் போதே அன்னை கடகடவென சிரித்து விட்டார். அதில் நம்பிக்கையின்மை தொனித்தது. இருந்த போதிலும் அது தான் உண்மை. ஒரு வேளை காந்திஜி யாருக்குமே பயப்படாதிருந்திருக்கலாம். ஆனால் அவர் யாருக்காவது பயப்பட்டார் என்றால் அது அவர் மனைவியான கஸ்தூரி அன்னை ஒருவருக்குத்தான் என்பது உண்மை.

காந்திஜி இப்படித் தன் ஆஸ்ரமத்திலேயே யாவருக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்கினார். பணிந்துபோக நேரிடும்போது பணிந்தும், எதிர்க்க நேரிடும்போது எதிர்த்தும் அவர் நாட்டிற்குச் சேவை செய்து வந்தார்.

சத்திய வடிவான அவர் இந்திய மக்களைச் சுதந்திரத்திற்கு அழைத்து வந்தார். அந்த யாத்திரை முடிந்ததும் அவர் இந்தியன் கையாலேயே உயிர் நீத்தார். அவருடைய பருவுடல் மறைந்து விட்டது. அவரை நாம் பார்க்க முடியாது. அவருடைய மென்மையான குரலைக் கேட்க முடியாது. நல்லுரைக்காக இனி அவரிடம் ஓட முடியாது. ஆனாலும் நம் உள்ளத்தில் அவருடைய நினைவை அழிக்க எவராலும் முடியாது. அவருடைய அறிவுரை என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி.

---

## நான் கண்ட சீனா

(16 ம் பக்கத் தொடர்ச்சி)

திரத்தில் சீனா முழுவதையும் ஒரு அரசாங்கத்துக்குட்படுத்திய காரணத்தால் அளவற்ற செல்வாக்கடைந்தனர். இரண்டாவதாக விவசாய பூமி முழுவதையும் பங்கீடுசெய்து விவசாயிகளுக்கே சொந்தமாக்கியமை. இதனால் பொருளுற்பத்தி பெருகி சனங்களின் வாழ்க்கைத்தரம் ஓரளவுக்குத் திருந்தியிருக்கின்றது. இனிச் சீனர் கட்டுப்பாட்டுக்கு அமையும் குணமுள்ளவர். நிலக்கரி, இரும்பு ஆகிய பொருட்களைக் கொண்டு தொழிற்சாலைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. துணி, பட்டுச் செய்யும் தொழிற்சாலைகள் முன்னமே இருந்தன. இப்போது மக்டன் நகரத்தில் யந்திர சாதனங்கள் செய்யும் சாலைகள் அநேகம் நிருமாணிக்கப்பட்டிருக்கின்றன. ஆகாய விமானங்கூட இப்போது சீனாவில் செய்கின்றார்கள். 60 இலட்சம் பேர் வசிக்கும் சாங்கே நகரம் ஒரு பெரிய தொழிற்சாலை நகரம். நாம் பிரதம அமைச்சர் சௌ என் லாயைச் சந்தித்தபோது அவர் விவசாய அபிவிருத்தியோடு தொழில் அபிவிருத்தியையும் சீன அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ள தென்று சொன்னார். அரசாங்க நிர்வாகத்தில் விசேஷப் பண்பொன்றை நான் குறிப்பிட வேண்டும். அதாவது நிர்வாகத்தில் ஈடுபடும் அதிகாரிகளும் ஊழியர்களும் நேர்மையுடனும் நடுவு நிலைமையுடனும் கடமையாற்றுதல். வியாபாரத்துறையிலும் நேர்மையைக் கைவிடாது மக்கள் ஒழுகுவர். இலஞ்சம் வாங்குதல், அல்லது வேலைக்காரர் சந்தோஷமாக ஏதும் பெறுதல் ஆகிய வழக்கங்கள் முற்றுமொழிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதற்கும் பிச்சை வாங்குதற்கும் வித்தியாசமில்லை என்ற மனப்பான்மை எல்லாரிடமும் பதியச் செய்திருக்கின்றார்கள். சாதி வித்தியாசமோ வகுப்பு வித்தியாசமோ சீனாவில் தற்போதில்லை. எல்லாரும் சமமென்ற கொள்கை நிலவுகின்றது. ஆனால் சீனாவில் சமய உணர்ச்சி குன்றி வருகின்றது. இதற்குக் காரணம் சீனரின் பூர்வீகத்தில் காணலாம். யாதாமொரு சமயமும் எக்காலத்திலும் வேரூன்றிய தில்லை. கிறிஸ்தவர்களும் முஸ்லீங்களுமே சமய அநுஷ்டானத்தில் ஈடுபடுகின்றனர். தற்காலச் சமுதாயம் சமயமின்றியே வளருகின்றது. வருங்காலத்தில் பொருளாதாரநிலை உயர இந்நிலை மாறக்கூடும்.

# தமிழ்ப் பெரியார் மறைவு

### திரு. பெரிசுந்தரம் அவர்கள் ஆற்றிய அரும்பணி

செனெற் சபையின் முன்னாள் உபதலைவரும், அரசாங்க சபையில் அமைச்சர் பதவி வகித்தவரும், இலங்கை இந்திய மக்களின் முது பெருந்தலைவருமான திரு. பெரி சுந்தரம் அவர்கள் பெப்ருவரி மாதம் 4 ந் திகதி காலையில் தமது இல்லத்தில் காலமானார். அவர் தேகவியோகமானபோது அவருக்கு வயது 66.

இலங்கையின் பழம் பெருந் தலைவர்கள் வரிசையில் வைக்கப்படவேண்டிய திரு. பெரி சுந்தரம் அவர்கள் தேகவியோகமடைந்த செய்திகேட்டதும், அவரது இல்லத்திற்கு, செனெட்டர்களும், அமைச்சர்களும் வழக்கறிஞர்களும், டாக்டர்களும், பல்வேறு தொழிற் சங்கங்களின் தலைவர்களும் தொழிலாளர்களும் அவருடைய நண்பர்களும் வந்து அன்னாரின் பூதவுடலுக்கு இறுதி வணக்கஞ் செலுத்திச்சென்றனர்.

காலஞ்சென்ற திரு. பெரி சுந்தரத்தின் இறுதியாத்திரை 5 ந் திகதி மாலை 5 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து ஆரம்பமானது. பிரதம நீதியரசர் திரு. ஹேம பஸ்நாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, பிரபல வழக்கறிஞர் திரு. ஆர். எல். பெரேரா, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ இராஜலிங்கம், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட அனேகர் சடலத்தை மயானத்திற்குத் தூக்கிச் சென்றனர்.

நிதி அமைச்சர் திரு. ஸ்டான்லி த சொய்சா, உள்நாட்டு அமைச்சரும், செனட்டருமான திரு. ஏ. பீ. ஜயசூரியா, செனட்டர்கள் எஸ். நடேசன், சேர். பராராஜசிங்கம், திரு. தோமஸ் அமரசூரியா, லேடி மொலமுரே, திரு. ஈ. டபிள்யூ. கன்னங்கரா, சபாநாயகர் ஜனுப் எச். எஸ். இஸ்மாயில், உபசபாநாயகர் திரு. தென்னக்கோன், முன்னாள் தபால் தகவல் அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை, முன்னாள் தலதாபன அமைச்சர் சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, முன்னாள் தொழில் அமைச்சர் டாக்டர் எம். சீ. எம். கலீல், முன்னாள் கைத்தொழில், வீடமைப்பு அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் உட்பட இலங்கையின் பிரமுகர்களெல்லோரும் திரு. பெரி சுந்தரத்தின் பூதவுடலுக்கு மரியாதை செலுத்தி இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டனர். ஈமக்கிரியைகள் இந்து சமயாசார முறைப்படி நடைபெற்றன.

#### வாழ்க்கைச் சுருக்கம்

திரு. பெரி சுந்தரம் மடுல்கலையில் நெல்லிமலை என்னும் தோட்டத்தில் திரு. பெரியண்ணன்—மீனுட்சியம்மையின் புதல்வராக 1890 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ந் திகதி இவ்வுலகில் தோன்றினார். இலங்கையில் கண்டி டிரினிட்டி கல்லூரியிலும் இங்கிலாந்தில் கேம்பிறிச்சுப் பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்று கலைத்துறையிலும், சட்டத்துறையிலும் பட்டம் பெற்று மீண்ட பெரி சுந்தரமவர்கள் 1916 ம் ஆண்டு இலங்கையின் உயர்தர நீதிமன்றத்தில் அப்புக்காத்தாக விசுவாசப் பிரமாணம் பெற்றார்.

அன்று முதல் அவர் வாழ்க்கை பொதுவாழ்வுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அவர் இலங்கைத் தேசீய காங்கிரஸைத் தாபித்து அதன் செயற்குழு அங்கத்தவராகக் கடமையாற்றினார். 1919 ம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் சேமாபிவிருத்தி லீகைத் தாபித்து அதன் செயலாளராகக் கடமையாற்றினார். இலங்கையில் முதன் முதல் ஆரம்பித்து வைக்கப்பட்ட தொழிலாளர் சங்கம் இதுவேயாகும்.

இவர் 1928 ம் ஆண்டு இலங்கைச் சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். திரு. பெரி. சுந்தரத்தின் பொதுவாழ்க்கை, அவரை 1931 ம் ஆண்டு அரசாங்க சபை அங்கத்தினராக ஹட்டன் தொகுதிக்குப் போட்டியின்றி தெரிவுசெய்யப்படக் கூடிய அளவுக்குக் கொண்டு வந்தது. அரசாங்க சபையில் நுழைந்த அவருக்கு தொழில், கைத்தொழில், வர்த்தக அமைச்சர் பதவிகிடைத்தது. இப்பதவியிலிருந்து கொண்டு அவர் பொதுவாக நாட்டிற்கும், சிறப்பாகத் தொழிலாளர்களுக்கும் செய்த சேவைகள் அளப்பரியன. அவர் அமைச்சராயிருக்கும் பொழுது தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டத்தை உருவாக்கி அமுலுக்குக் கொண்டுவந்தார். இலங்கைத் தெங்குப் பொருட் சபையை நிறுவி அதன் மனேஜராக விருந்து தெங்குப் பொருள் விருத்திக்கு வழிகோலினார். அமைச்சர் பதவியை விட்டு விலகிய பின்னர் அவரது கவனம் தொழிலாளர் நலவுரிமைகளிற் சென்றது. அவர் 1940 ம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸின் தலைவரானார். அதே காலத்தில் சிவில் சேவைப் பரீட்சையில் சட்ட பாடத்தின் பரீட்சகராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

1947 ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதும், செனெட் சபை நிறுவப்பட்டது. திரு. சுந்தரம் செனெட்டராகத் தெரிவு செய்யப்பட்டு, செனெட்டர்களால் உப தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். தான் தேக வியோகமாவதற்கு சில மாதங்களுக்கு முன்னர்தான் அன்னார் செனெட்டர் பதவியை விட்டு விலகினார்.

இலங்கை இந்தியர்களின் முதுபெருந் தலைவரும், அறிஞருமாக விளங்கிய இப்பெரியாரின் பிரிவு இலங்கைக்குப் பெரு நஷ்டமாகும்.

---

## கமக்காரருக்கு ஒரு நிறை பொங்கல்

(13 ம் பக்கத் தொடர்ச்சி)

#### பிரார்த்தனை

பழையகாலத்தில் பொங்கல் காலபோக வேளாண்மை இறுதியில் இருந்ததாகவும் காலபோக நெல்லையே அரிசியாக்கிப் பொங்கினார்கள் என்றும் அறியப்படுகிறது. ஆனல் இலங்கையிலே காலபோக வேளாண்மை புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் தொடங்குவதால், பொங்கலுக்குக் காலபோக நெல்லைப் பெரும்பாலும் உபயோகிக்க முடியாமற்போகின்றது. சிலவேளை மழை காலம் சிறிது சிறிதாக மாறிப் போகிறதாகவும் ஊகிக்கவேண்டியிருக்கிறது.

சொற்கலைப் புலவர்

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

( ஆசிரியமணி, பண்டிதர் ஜி. ஜே. ஆசிநாதன் )

" மறை மொழி வாயினன் மலிதவத் திறைவன்
நிறை சொற் கலைஞன் நிகரில் கேள்வியன் "

என்று கற்ருேரால் போற்றப்பட்ட **நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்** அவர்கள் 1875 ம் ஆண்டு ஆவணி மாதம் முப்பதாந் திகதி சைவ வேளாண் மரபில் பிறந்தவர். இவரது பிறப்புப் பெயர் வைத்தியலிங்கம் என்பது. பின்பு இவர் கத்தோலிக்க சமயத்திற் சேர்ந்து ஞானப்பிரகாசர் எனப் பெயரிடப்பட்டார். இவர் இளம் பராயத்திலேயே தமிழறிவு நிரம்பப்பெற்று விளங்கினுர். ஆங்கிலம் கற்று அரசினர் புகையிரதப் பகுதியில் உத்தியோகம் வகித்து வருகையில் உலக வாழ்க்கையை வெறுத்துச் சந்நியாசியாகிக் கத்தோலிக்க சமயக் குரவராகினுர்; நல்லூரைத் தமது தலைமை ஸ்தானமாகக் கொண்டு சுவாமிகள் தமது சீரிய தொண்டுகளைப் புரிந்து வந்ததினுல் அவர்கள் நல்லூர் சுவாமிகள் என அறியப்பட்டனர். சுமார் ஐம்பது வருட காலமாகச் சுவாமிகள் சிறந்த சமயத்தொண்டும், தமிழ்த் தொண்டும் செய்து கடந்த 1947 ம் ஆண்டு தை மாதம் 22 ந் திகதி உலகவாழ் வொருவினர்.

### பாஷா நிபுணர்

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் செய்த சேவையானது யாவரும் நன்கறிந்தது. சமயப்பணியில் ஒரு குரவர் எவ்வளவைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் திறமையாகவும், பூரணமாகவும் செய்து உச்ச நிலையை அடைந்து கத்தோலிக்க மக்களால் கண்ணியமிக்க குரவராக மதிக்கப்பட்டார். சுவாமிகள் சமயத்துறையில் மங்காப் புகழ்படைத்ததோடு மொழி ஆராய்ச்சியிலும் புகுந்து பெரிய மொழி நூலறிஞரானுர். சுவாமிகள் தமக்கு வாய்த்த ஆற்றலினுல் தமிழையும், தமிழ் இலக்கணங்களையும் நன்கு கற்று மொழியாராய்ச்சி செய்து அதன் மூலம் வேறநேக பாஷைகளையும் கற்று முற்றிப் பழுத்த பாஷா நிபுணரானுர். பல பாஷைகளில் பிழையின்றிப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் கூடியவராயிருந்தார். தமிழ் நாட்டின் பல பாஷா நிபுணர் என்ற தனிப் பெரும் பெயருக்கு உரிமையானவராயிருந்தவரில் சுவாமி ஞானப்பிரகாசரும் ஒருவர்.

சுவாமி ஞானப்பிரகாசருக்கு முன்னும் அவருடைய காலத்திற்ருனும் சுவாமிகளை விடப் பிற தேசபாஷைகளை அதிகமாய்க் கற்றறிந்த எவரும் தமிழ் நாட்டில் வாழ்ந்ததாகக் கூற முடியாது. ஆராய்ச்சி முறையில் பல பாஷைகளை அறிந்திருந்தவர்கள் ஜேர்மனி தேசத்திலேதான் வாழ்ந்திருந்தனர். அவர்களுக்கிணையாகச் சொல்லக்கூடிய வகையில் கீழைத் தேசத்தில் வாழ்ந்திருந்தவர் சுவாமி ஞானப்பிரகாசர் ஒருவரே எனலாம். ஜேர்மனிய பிரபல மொழி நிபுணர்களெல்லோரும் சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தனர். ஜேர்மனிய அரசாங்கமே சுவாமிகளை ஆசிய தேச பாஷைகளின் பேராசிரியராகக் கடமையாற்றுவதற்குப் பல்முறை கேட்டிருந்தது. சுவாமிகளின் ஞாபகசின்னமாக ஜேர்மனிய அரசாங்கம் அன்னவரின் உருவம் அமைந்த முத்திரைகளை வெளியிட்டிருந்தது.

சுவாமிகள் தமிழையும் சமஸ்கிருதத்தையும் ஆழமாய்க் கற்ற நுண்ணறிவினுல் மேலும் ஆரியதிராவிடக் கலப்பான பாஷைகளையும் அறிந்திருந்தார். தாம் அரசாங்க சேவையில் இருந்தபோது பேசக்கற்றுக்கொண்ட சிங்களப் பாஷையை ஆதாரமாகக் கொண்டு பாளி பாஷையையும், அதன் இனத் தொடர்பான தீபெத்திய, பர்மிய, கூர்க்க பாஷைகளையும் அறிந்து கொண்டார். தாம் வேதசாஸ்திரங் கற்கக் கற்றுக்கொண்ட லத்தீன் பாஷையின் துணையாகப் பல ஐரோப்பிய பாஷைகளைக் கற்றுக்கொண்டார்; போத்துக்கீசம், ஒல்லாந்தம், ஜேர்மனியம் முதலிய வழிப்பாஷைகளையும் அவற்றின் இனத் தொடர்பான வேறு பாஷைகளையும் அறிந்து கொண்டார். இப்படியாய் ஆரிய, திராவிட, ஐரோப்பிய பாஷைகளை அறிந்திருந்தவர் எகிப்திய, பாபிலோனிய, சீரிய, சுமேரிய பாஷைகளையும் அறிந்து ஆராய்ச்சி செய்து வந்தார்.

சுவாமிகள் தமது கடைசிக் காலத்தில் சீன, யப்பானிய மங்கோலிய பாஷைகளைச் சொல்லாராய்ச்சி மூலம் கற்றுவந்தார், சுவாமிகள் தமக்குத் தருணம் கிடைக்கும் போதெல்லாம் பல பாஷைகளுக்குமுரிய புத்தகங்களையெல்லாம் விரித்து வைத்து ஒவ்வொரு பாஷைகளுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து ஒப்பிட்டுத் தொடர்பு காணுவர். அத்தொடர்புகளைத் தமது ஆராய்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொள்ளுவர். கண்ட முடிவுகளை அறிவாளிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் சொல்லிக்காட்டி மகிழ்வார். பல பத்திரிகைகளுக்கும் எழுதிப் பலருமறியச் செய்வார். சுவாமிகள் பாஷா நிபுணராய் விளங்கினுரென்பதற்கு அவருடைய புத்தக நிலையம் திறம்பாத சாட்சியாகும். அவருடைய புத்தக அறையிலே பல பாஷைப் புத்தகங்களும் பொலிந்துகொண்டிருக்கும். இத்துணைப் பாஷைப் புத்தகங்களையும் சுவாமிகள் ஆராய்வாய்க் கற்றறிந்தார் என்பதற்கு அப்புத்தகங்களில் தாம் அவதானித்த சுட்டுகள், மேற்கோள்கள், இவற்றிற்குக் கீழ் கோடிட்டிருப்பதும், புறக்குறிப் பெழுதியிருப்பதும், வேறு புத்தகத் தொடர்புகளைக் குறித்திருப்பதும் மாருத சான்ருகும்.

### மொழி ஆராய்ச்சியாளர்

உலகின் பல தேசங்களிலுமிருந்து பற்பல பாஷைகளிலும் வெளிவரும் பத்திரிகைகளும், மற்றும் வெளியீடுகள் கடிதங்களும் சுவாமிகளுக்கு வந்து குவிந்த வண்ணமாயிருக்கும். சுவாமிகள் இவற்றை ஆர்வத்தோடும் ஆராய்வோடும் வாசிப்பார்; சிற்சிலபோது அவ்வப் பாஷைகளிலேயே பதிலும் எழுதி விடுவார். சுவாமிகள் இத்துணைப் பாஷைகளையும் எப்படிக் கற்றறிந்தார் என்று எவரும் அதிசயத்துடன் வினவக்கூடும். "ஏதாவதொரு செழிப்பான பழைய பாஷையின் வளர்ச்சி விரிவு முறையைக் கண்டறிந்த எவரும் எந்தப் புதுப் பாஷையையும் வெகு சுலபமாய்க் கற்றறியலாம்" என்பதுதான் சுவாமியவர்களின் மொழியாராய்ச்சியின் பிரமாண விதியாகும். பழம் பெருமைமிக்க கன்னித் தமிழை ஆராய்வாகக் கற்று இதன் உற்பத்தி, வளர்ச்சி, செறிவு இவற்றை அவதானித்ததின் பயனுகவே மற்றும் அநேக பாஷைகளையும் வெகு சுலபமாகவும் தீவிரமாகவும் கற்றுணர்ந்தார்.

"பற்பல பாஷைகளும் அவற்றின் ஆதியுற்பத்தியில் (மூலத்தில்) நெருங்கிய தொடர்புடையனவாயிருக்கின்றன" என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்டியவர்களில் சுவாமிகள் தனிச்சிறப்புடையவர்.

உற்பத்தி மூலங்கள் (தாதுக்கள்) வழிகாட்டிச் செல்ல சுவாமிகள் வளம் பொருந்திய பல பாஷைகளை அறிந்திருந்தது வியப்புக்குரியதல்ல. "எந்தப் புதுப் பாஷையையும் நான் இரண்டு மாதத்துள் சரிவரப் படித்தறியக் கூடும்" என்று சுவாமிகள் பிரமாணம் செய்து சொல்லிவந்ததைப் பலர் கேட்டிருக்கலாம்.

உலகில் வழங்கிவந்த பல பாஷைகளையும் ஒப்பு நோக்கிப் பார்த்துத் தமிழ்ப் பாஷையே உலகின் மறு பாஷைகளுக்கு முதன்மையானது—தாய்மையானது—என்று ஆராய்ச்சி மூலம் நிச்சயப்படுத்திய முதல்வர் சுவாமிகளே. அத்துடன் தமிழ்ப் பாஷையின் அடிப்படைகளைத் துருவி அறிந்து அவற்றை மறு பாஷைகளோடு ஒப்புநோக்கி முன் எவரும் காட்டத் துணியாத—ஒரு மொழிக்கொள்கையை — அதாவது தமிழ்ப் பாஷையின் செறிவு விரிவை எடுத்துக் காட்டினுர்.

தமிழ்ப் பாஷைச் சொற்கள் எல்லாம் கூட்டங் கூட்டமாய் இயைகின்றன என்றும், தமிழ்ப் பாஷைச் சொற்களெல்லாம் ஒரு சில சொல்லடிகளிலிருந்து உண்டாயின என்றும் ஆராய்ச்சி முறையில் விளக்கிக் காட்டினுர். இன்னும் அச் சொல்லடிகளெல்லாம் அ, இ, உ, எ என்னும், சுட்டுக்களிலிருந்தே உண்டாகிச் சில குறிக்கப்பட்ட விதிகளினுல் விருத்தி யடைந்துள்ளன என்றும் காட்டினுர்.

சுவாமியவர்களின் இக்கொள்கைக்கு அரிய சாதனங்களாயுள்ளன சுவாமியவர்கள் எழுதிய "தமிழ் அமைப்புற்ற வரலாறு", "தமிழ்ச் சொற்பிறப்பாராய்ச்சி", "தமிழ் ஒப்பியல் அகராதி" என்னும் நூல்களாம். தமிழ் அமைப்புற்ற வரலாறு என்னும் நூலில் சுவாமிகள் தமது கொள்கையின் முழு விளக்கத்தையும் எங்ஙனம் அக் கொள்கையைக் கண்டு பிடித்தார் என்பதையும் விளக்கிக் காட்டியுள்ளார்.

சொற் பிறப்பு ஒப்பியல் அகராதியானது தமிழுக்குப் புதுமையான நூல். இது இருபது பாகங்களைக்கொண்டது. இதுவரை ஆறு பாகங்களே அச்சாகி வெளிவந்துள்ளன. மற்றைய பாகங்கள் கையெழுத்துப் பிரதிகளாயுள்ளன.

சுவாமிகளின் தமிழாராய்ச்சித் திறனை அறிந்திருந்த இந்திய திருப்பனந்தாள் மடாதிபதி அவர்கள் ஒப்பியல் அகராதி வேலையைத் தொடர்ந்து செய்வதற்குதவியாகப் பெரும் பணம் உதவினர். இலங்கை அரசினரும் இதற்காக வருடா வருடம் பண உதவி புரிந்து வந்தனர்.

சுவாமிகளின் மொழி ஆராய்ச்சித்திறனை உணர்ந்து சில ஆண்டுகளின் முன் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றத்தார் சுவாமிகளுக்குச் "சொற்கலைப்புலவர்"எனப்பட்டம் வழங்கினர்.

சுவாமிகளின் தமிழாராய்ச்சியை நன்கறிந்த யோகி சுந்தானந்த பாரதி அவர்கள் "தமிழே உலகத் தாய்மொழி என்று பறையடித்தோதிய பன்மொழிப் பண்டிதன்" என்று சுவாமிகளைப் போற்றியுள்ளார்.

### சரித்திர ஆராய்ச்சி

சுவாமிகள் மொழியாராய்ச்சியுடன் சரித்திர ஆராய்ச்சியினும் புகுந்து உழைத்தார். முன்னுளில் மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையிலுள்ள மாறுபாடுகளை எடுத்துக்காட்டித் தகுதி காண்பித்து "யாழ்ப்பாண வைபவ விமரிசனம்" என்ற நூலை வெளிப்படுத்தினுர். வேறு மிருவருடன் சேர்ந்து "யாழ்ப்பாண வைபவகௌமுதி" என்ற சரித்திரக் கைநூலையும் ஆக்கினுர்.

யாழ்ப்பாண அரசியல், சமய சரிதைகளை அறிவதற்காக இந்தியாவில் போர்த்துக்கீச நாடாகிய கோவைக்குச் சென்று சரித்திர ஆராய்ச்சி செய்தார்; சரித்திர ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினுர். "யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சி", "போர்த்துக்கீச ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணச் சரிதை" முதலியன சுவாமிகள் எழுதிய பிற சரித்திர நூல்களாம்.

"யாழ்ப்பாண அரசர்கள்," "பண்டைய இந்திய சரிதையும் ஆண்டு வரிசையும்" "தமிழரின் சாதியுற்பத்தி" என்பன அவர் ஆங்கிலத்தில் எழுதிய சரித்திர நூல்களாம். இடப்பெயர் சம்பந்தமாகச் சுவாமி அவர்கள் செய்த ஆராய்ச்சி மிகவும் போற்றப்படுதற்குரியது.

பிரபல புதைபொருள் ஆராய்ச்சியாளரான வண. ஹெராஸ் சுவாமியார் சுவாமி ஞானப்பிரகாசரை நேரில் சந்தித்து சரித்திர ஆராய்வில் சுவாமிகளின் உதவியைப் பெற்றனர்.

---

## சுவாமி ஞானப்பிரகாசரின் பத்தாண்டு நிறைவு ஞாபகமாகப் பாடியது

**(K. T. ஞானப்பிரகாசம்)**

### விருத்தம்

கலைக்கடற் தளத்தைக்கண்டு கரையிலா நிதியம்அள்ளி
அலைக்கட லுலகுக்கீந்த தன்றியும் அழிவில்லாத
தலைத்தவ உடையுந்தாங்கித் தருமமே உருவாய்நின்ற
மலைச்சுடர் விளக்கேஞானப் பிரகாச மணியேவாழி!

* * *

மண்ணினுள் மறைந்துபத்து வருடங்கள் கடந்ததேனும்
கண்ணினுள் ஆன்றோர்ஞானக் கருத்தினுள் கரையில்லாத
எண்ணினுள் தூயதான எட்டினுள் நின்றுலாவும்
அண்ணலே! புண்யஞானப் பிரகாச அடிகாள்வாழி!

* * *

பற்பல பாஷைதேர்ந்த பண்டிதமணியே என்பார்
சொற்கலைப் புலவரென்பார் மாபெருஞ் சுவாமி யென்பார்
பொற்பமை எங்கள்சின்னச் சவேரியார் என்பார்போற்றி
எப்படிப் புகழ்ந்திட்டாலும் எழுத்தினுக் கெட்டாதென்பார்.

* * *

சுத்தமாந் தமிழ்மணக்குஞ் சுந்தரநல்லூர் வாழ்ந்து
சத்திய வித்தைநாட்டித் தபசெபத் தண்ணீர்பாய்ச்சிப்
பத்தியாம் பயிரைப்பேணிப் பகலிர வாகக்காத்த
உத்தம அடிகாள்! நும்சீர் உலகுள மட்டும்ஓங்கும்.

* * *

அவப்பொழு தாக்காதென்றும் அலகைக்கும் அநீதம்ஆர்ந்த
பவப்பெரு மாயையான உலகுக்கும் பாழுடற்கும்
சவுக்கடி கொடுத்துஞானச் சத்தியத் தீபம்ஏற்றித்
தவக்குடி லமைத்துவாழ்ந்த தந்தையை மறக்கலாமோ!

* * *

ஆக்கிய கோயிலெல்லாம் அவர்புகழ் அணிந்துபாடும்
நோக்கிய திசைகள்தோறும் நுண்பெரு நூல்கள்பாடும்
தேக்கிய அறங்கள்பாடும் திருமறை தினமும்பாடும்
பாக்கிய! நாமும்பாடிப் பணிந்தனம்! பணிந்தனம்மே!

# சீனா

உலகின் புராதன நாடுகளில் ஒன்றான சீனாவுக்கும் நமது இலங்கை நாட்டிற்கும் மிகப் பழம் பெருங்காலத் தொட்டே நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன.

பாஹியன் என்ற சீன யாத்திரீகன் ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கை வந்து சென்றமையைச் சரித்திரம் சாற்றுகிறது. இவன் தரை மார்க்கமாகப் பாரத நாட்டுக்குவந்து, சில காலம் அங்கு தங்கியிருந்த பின்னர் இலங்கைக்குவந்து சேர்ந்தான். இங்கு அவன் பலகாலம் தங்கியிருந்து பௌத்த நூல்களைக் கற்று வந்ததோடு புத்தரின் புனித தந்தத்தையும் தரிசித்துச் சென்றதாகச் சரித்திராசிரியர்கள் கூறுவர். பாஹியன் நிறுவிய இத் தொடர்புகள் சமீபகாலத்தில் மேலும் பலமடைந்திருக்கின்றன என்று சொல்லலாம்.

சீனா உலகின் மிகப் பெரும் நாடுகளிலொன்று. அதன் பரப்பு சற்றேறக்குறைய 4314097 மைல் கொண்டது. உலக ஜனத் தொகையில் நாலிலொரு பங்கினர், அதாவது சுமார் 60 கோடி மக்கள் இங்கு வசிக்கின்றனர்.

சீனாவின் இன்றைய அங்கீகாரம் பெற்ற பேர் சீன மக்கள் குடியரசு என்பதாகும். ஆதிகாலத்தில் சீனா "டாசுங்-ஹுவாமின்-குவோ" என்று சீன மக்களால் அழைக்கப்பட்டது. இன்றும் சீனாவில் இப்பெயர் அவ்வப்போது வழங்கப்படுகிறது. முன்னர் சீனாவை "சின்" "வமிசத்தினர் அரசாண்டனர். அதனாலேயே சீனா என்ற பெயர் தோன்றலாயிற்று.

### புராதன நாகரீகம்

சீனா உலக நாகரீகத்திற்குச் செய்த சேவை கொஞ்ச நஞ்சமல்ல. பட்டும், காகிதமும், வெடிமருந்தும் சீனர்களாலேயே கண்டு பிடிக்கப்பட்டன. மூன்றும் மூன்றுவித முக்கியத்துவம் கொண்ட கண்டுபிடிப்புகள். மனிதனின் சுகவாழ்வுக்குப் பட்டுடை பயன்பட்டது. கல்வியறிவின் வளர்ச்சிக்குக் காகிதம் பயன்பட்டது. வெம்போரில் வெற்றிகாணுதற்கும், விழாக்கால வாணவேடிக்கைக்கும் வெடிமருந்து பயன்பட்டது. தேயிலையைக் கண்டுபிடித்தவர்களும் சீனர்களே. இன்று உலகின் எல்லாப் பகுதிகளிலும் இப்பானம் மக்களால் விரும்பி அருந்தப்படுகிறது. மேற்கூறிய கண்டு பிடிப்புகளிலிருந்து உலக நாகரீக வளர்ச்சியில் சீனாவுக்குரிய பெரும் பங்கு நன்கு உணரப்படும். பல்லாயிரக்கணக்கான வருடங்களின் முன்பு அவர்கள் கண்டு பிடித்த மேற்படி பொருட்கள் இன்று உலகத் தேவைகளாகி விட்டன. மனித குலத்துக்கு இன்றியமையாத மகத்தான பொருட்களாக அவைகள் விளங்குகின்றன.

சீனா பல பெரியார்களையும் உலகத்திற்குத்தந்திருக்கிறது. அவர்களில் மிகப்பெரியவர் கன்பூஷியஸ் என்பவராகும். இவர் மகாஞானி. ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களின் முன்னர், அதாவது ஏறக்குறைய பகவான் புத்தர் காலத்தை அடுத்து இவர் சீனமண்ணில் தோன்றினார். இவரது போதனைகள் அமைதியான நல்வாழ்வுக்கு வழிகாட்டுவன. ஆகவே அவை சீன மக்களின் வாழ்விலே ஊறிப்போய் விட்டன.

உலக அதிசயங்களில் ஒன்றான சீனத்துப் பெருஞ் சுவரைப் பற்றிக் கேள்விப்பட்டிராதவர்கள் இவ்வுலகில் யாருமில்லை எனலாம். இச் சுவர் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களின் முன்னர் கட்டி முடிக்கப்பட்டது. இன்றும் இச்சுவர் சீனத்தின் வட பகுதியில் காணப்படுகின்றது. மங்கோலியப்படை எடுப்புகளைத்தடுத்து நிறுத்தவே இச்சுவர் கட்டப்பட்டதென்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இச்சுவர் 1,400 மைல் நீளமும், பல இடங்களில் இரண்டு சாதாரண வண்டிகள் தாராளமாகப் போகக்கூடிய அகலத்தையும் கொண்டதாகும். இதன்காரணமாக சுவரின் உச்சியில் பெருந்திரளான மக்கள் ஏறிச்சென்று பார்க்கக்கூடியதாயிருக்கிறது.

சீனர்கள் பெரும்பாலும் பௌத்த மதத்தை அனுஷ்டிக்கின்றனர். ஆனால் இவர்களது பௌத்தத்திற்கும் இலங்கை பௌத்தத்திற்கும் சில வேற்றுமைகளுண்டு. ஆயினும் ஒற்றுமைகள் அதிகமாக உள்ளன. பௌத்தத்தைத் தவிர இஸ்லாம் கிறிஸ்தவம் என்னும் மதங்களும் கன்பூஷியஸ் தத்துவமும் இங்கு மிகவும் பரவியுள்ளன. ஆயினும் சீனர்கள் மதத்தைவிட இனத்தையே முக்கியமாகக் கருதுவர். மதவெறி என்பது இந்நாட்டில் மருந்துக்கும் கிடையாதெனக் கூறுகின்றனர்.

### சீனாவின் வீழ்ச்சி

பண்டைக் காலத்தில் பெரும் புகழோடும் செல்வாக்கோடும் விளங்கிய சீனா கடந்த சில நூற்றாண்டுகளில் மிக கீழ் நிலையை அடைந்திருந்தது. முழு ஆசியாவிலும் தன் செல்வாக்கைப் பரப்பி வந்த ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் சீனாவுள்ளும் புகுந்ததே இதற்குக் காரணம். இதர ஆசிய தேசங்களில் போலவே இங்கும் ஐரோப்பியர்கள் வியாபார நோக்குடனேயே வந்தார்கள். தம் துணிகளையும் இரும்பு உருக்குப் பொருட்களையும் விற்பதற்கும், தம் மூலதனத்தை முடக்கிப் பெரும் இலாபம் சம்பாதிப்பதற்கும் சீனா வாய்ப்பான தேசமென அவர்கள் கண்டனர்.

1839 ம் ஆண்டில் பிரிட்டன் சீனத்தின் வாசலுக்கு வந்தது. இந்திய அபினியைச் சீனத்தில் விற்றுப் பெரும் பொருள் திரட்ட பிரிட்டிஷ் அபின் வியாபாரிகள் ஆவலுற்றனர். எனவே சட்ட விரோதமாகச் சீனமண்ணில் அபின் வியாபாரத்தை ஆரம்பித்தனர். சீன அரசாங்கம் இதனைப் பலமாக ஆட்சேபித்தது. ஆனால் பிரிட்டிஷார் இதற்குச் செவிசாய்க்கவில்லை. எனவே சீன அரசாங்க அதிகாரி ஒருவர் ஒரு பிரிட்டிஷ் வியாபாரியைத் தண்டிக்கும் நிலை ஏற்பட்டது.

இதனைச் சாக்காகக் கொண்டு பிரிட்டிஷார் சீனாமீது ஓர் கொடுந் தாக்குதலை நடத்தினர். அபின் யுத்தம் (1839—1842) என அழைக்கப்படும் இப்போரில் சீனா தோற்றது. துப்பாக்கி வென்றது. இப்போரின் பயனாக ஹாங்கொங் தீவு பிரிட்டிஷார் வசமாயிற்று. 1856 ல் பிரான்சும் சீனாமீது போர் தொடுத்தது. இதன் பயனாக ஆறு சீனத் துறைமுகங்களை சீனா பிரான்சுக்குக் கையளிக்கும் நிலை ஏற்பட்டது. சீனாவின் துயர் இத்துடன் ஒழியவில்லை. 1894 ல் ஜப்பானின் தாக்குதல் ஏற்பட்டது. இதன் பயனாக போர்மோசாத்தீவு ஜப்பான் வசமாயிற்று. போதாதற்கு ஐக்கிய அமெரிக்காவும் சீனாவில் தோன்றித் தனது செல்வாக்கைப் பரப்பத் தொடங்கியது.

இவற்றின் பலனாக சீனாவில் நிலவிய முடியாட்சி பெயரளவில் தான் இருந்ததொழிய உண்மை ஆதிக்கம் அன்னியர் வசமாயிற்று. பெயரளவில் சுதந்திரமாகவும் வாஸ்தவத்தில் ஐரோப்பிய தேசங்களின் கைப்பாவையாகவும் சீனா விளங்கலாயிற்று.

இந்நிலை சீன மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்திற்று. சுதந்திரதாகம் வீறிட்டெழுந்தது. இதன் விளைவு "பொக்சர் கலகம்" என்னும் சீன சுதந்திரப்போராக 1900 ம் ஆண்டில் உருவெடுத்தது. ஆனால் இங்கும் சீனா தோல்வியையே கண்டது.

### சன் யாட் சேன்

இந்தச் சூழ்நிலையில்தான் நவசீனத்தின் பிதாவான சன்-யாட்-சேன் சீனதேசத்து அரசியல் வானில் தோன்றினார். இவரால் அமைக்கப்பட்ட கட்சி கொமிண்டாங்கட்சியாகும். சீனாவினுள்ளே முடியரசைத்தகர்த்து குடியரசைத் தாபிப்பதும், அன்னிய ஆதிக்கத்தை அடியோடகற்றுவதும் இக் கட்சியின் ஆரம்ப கொள்கையாகவிளங்கியது. இதில் வெற்றி பெறுதற்கு இக் கட்சி நீண்டகாலம் பெரிய போராட்டம் ஒன்றை நடத்த வேண்டி ஏற்பட்டது. குடியரசுக்கொள்கையை ஏற்றுக்கொள்ளாத முடியரசுவாதிகள் கொமிண்டாங் கட்சியை எதிர்த்தனர். இதனால் சீனாவில் உள்நாட்டுக் கலகம் தோன்றியது. இக்கலகம் நீண்டகாலமாக நடைபெற்று முடிவில் 1927 ம் ஆண்டில் சீன தேசம் முழுவதும் மக்களின் போராதரவைப் பெற்ற கொமிண்டாங் கட்சியின் தேசீய அரசாங்கத்தின் கீழ்வந்துற்றது.

### உள்நாட்டுப் போர்

சீனாவின் மாபெருந் தலைவர் சன்-யாட்-சேன் 1925 ல் காலமாகினார். இதன் பயனாகக் கட்சியின் தலைமை சியாங்-கே-ஷேக் என்ற போர் வீரரின் வசமாயிற்று. இவர் சன்-யாட்-சேன் போல ராஜதந்திர நிபுணத்துவம் பெருமைகாரணமாக கட்சியினுள்ளே பொதுவுடமைவாதிகள், தேசீய வாதிகள் என்ற வேற்றுமைதோன்ற இடமளித்துவிட்டார். இவ் வேற்றுமைகள் நாள்தோறும் வளர்ந்து கடைசியில் பெரும் பிளவுகள் ஏற்பட்டன. கொமிண்டாங்கட்சி தேசீய வாதிகள் வசமாகிவிடப் பொதுவுடமை வாதிகள் தம்மைச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் தனித்தியங்கும் ஒரு பெரும் அரசியல் கட்சியாக அமைத்துவிட்டனர். இதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம், முதலாம் போராட்டங்கள் பல நாட்டில் ஏற்பட்டன. இப்போராட்டங்கள் நாளடைவில் பெரியதோர் உள்நாட்டுப் போராக விஸ்வரூபம் கொண்டுவிட்டது. இவ்வுள்நாட்டுப் போரில் கொமிண்டாங் கட்சியை ஷியாங்-கே-ஷேக்கும், கம்யூனிஸ்ட் கட்சியை மாசே-துங்கும் வழிநடத்தினர்.

இவ்வாறு சீனா சீரழிவுற்றுவருகையில் ஜப்பான் ஒரு புறம் சீனாவைத் தாக்கி முழுச் சீனத்தையும் கைப்பற்ற முனைந்து நின்றது. சியாங்-கே-ஷேக்கின், சீன அரசாங்கம் இது பற்றி சர்வதேச சபைக்கு முறையிட்டது. ஆனால் கிடைத்த பலன் மிக அற்பமே.

இந்நிலை நீண்டகாலம் நீடித்துவருகையில் 1939 ம் ஆண்டில் இரண்டாம் உலகயுத்தம் மூண்டது. இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், சீனா மீது ஜப்பான் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. இப்படிப்பட்ட நேரத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உள்நாட்டுப்போரை நிறுத்தி, கொமிண்டாங்குடன் உறவு கொண்டாட விரும்பியது. இதன்பயனாகப் பொது எதிரியான ஜப்பானை முறியடிக்க முழுச்சீனமும் திரண்டெழுந்தது.

சீனப் பிரதமர் ஸ்ரீ சௌ என் லாய் இலங்கைப் பாராளுமன்றக் கட்டடத்தில் செனெட்டர்களையும் பிரதிநிதிகளையும் பார்த்துச் சொற்பொழிவாற்றுகிறார்.



**புதிய குடியரசு**

1945 ம் ஆண்டில் ஜப்பானிய எகாதிபத்திய வாதிகள் சர்வ நாசம் அடைந்ததும் கொமிண்டாங் கம்யூனிஸ்ட் தகராறு மீண்டும் முன்னணிக்குவந்து பெரியதோர் உள்நாட்டுப்போர் சீன மண்ணில் முழுமூச்சுடன் ஆரம்பித்தது. இருகட்சியினரும் மறுகட்சியினரை அடியோடு தொலைத்து ஸ்திரமான அரசாங்கமொன்றை நிறுவும் இறுதிப் போராட்டத்தைத் தொடங்கினர். 1949 ம் ஆண்டுவரை நீடித்த இந்த யுத்தத்தில் பொதுவுடமை வாதிகள் வெற்றிவாகை சூட சீன மக்கள் குடியரசு நிறுவப்படலாயிற்று. ஷியாங்-கே-ஷேக் நாட்டை விட்டு போர்மோசாத் தீவுக்கு ஓட, மாசேதுங் சீன ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இப்புது சீனக் குடியரசின் முப்பெருந்தலைவர்கள் என அன்புடன் அழைக்கப்படுவர்கள் மாசேதுங், சௌ-என்-லாய், சூ-டே- என்பவர்களாவர். முதல்வர் ஜனாதிபதி, மற்றவர் பிரதமர், பின்னவர் தளபதி

**பிரதமர் சௌ-என்-லாய்**

இவர்களில் சௌ-என்-லாய் சமீபத்தில் இலங்கைக்கு விஜயஞ் செய்தார். உலகத்தின் மிகச்சிறந்த ராஜதந்திரிகளில் ஒருவராய் விளங்கும் சௌ-என்-லாய் 59 வயது நிரம்பப்பெற்றவர். பணக்காரக்குடும்பத்திலே பிறந்து பல வகைக் கல்விகளையும் பெற்று நாட்டின் சுதந்திரப் போருக்காகச் சிறுவயதிலிருந்தே உழைத்த இவர் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியில் தமது வாலிப வயதிலேயே சேர்ந்து விட்டார். சௌ வெளி நாடுகள் பலவற்றுக்கும் விஜயஞ் செய்துள்ளவர். தமது கொள்கைகளுக்காகப் பலதடவை சிறைவாசம் அனுபவித்தவர். இவர் தமது எதிர்கால மனைவியான டெங்யிங்காட் என்ற இளம் யுவதியைச் சிறை வீட்டிலேயே முதலில் சந்தித்துப் பழகினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு தடவை சியாங்கேஷேக் இவர் தலைக்கு 80,000 டொலர் விலை விதித்தார். உயிருடன் பிடித்து வந்தாலும் அல்லது தலையைக் கொண்டுவந்தாலும் இப்பெரும் பரிசு வழங்கப்படும் என சீன எங்கும் அறிவிக்கப்பட்டது.

ஆனல் புரட்சி வேலைகளில் மிகவும் திறமை பெற்ற இவர் தமது தலையைக்காப்பாற்றிக் கொண்டதோடு, கொமிண்டாங் அரசாங்கத்துக்கும் 80,000 டொலரை மீதப்படுத்தினர் !

இவரது இலங்கை விஜயத்தின் மூலம் பல்லாயிர வருடங்களாக சீனத்துக்கும் இலங்கைக்கும் நிலவிவந்த தொடர்புகள் மேலும் பலமடைந்திருக்கின்றன என்று கூறுதல் மிகையாகாது. இலங்கைக்கும் சீனவுக்கும் நிலவும் நட்புறவு நீடூழிவாழ்க !

சீனப் பிரதமர் சிகிரியாக் குன்றின் வனப்பைக் கண்டு களித்துவிட்டு இறங்கிவரும் காட்சி.



# கன்பூஷியஸின் மணி மொழிகள்

பிறநாட்டுச் சமுதாய சிற்பிகளை தமிழுலகிற்கு எடுத்துக்காட்டிய பெருமை பழுத்த அறிவும் மொழிபெயர்ப்புத் திறனும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற **திரு. வெ. சாமிநாதசர்மா** அவர்களுக்கேயுரியது. இப்பெரியார் கன்பூஷியஸின் மணிமொழிகள் சிலவற்றை மொழிபெயர்த்துள்ளார். அவற்றை ஈண்டெடுத்துக் காட்டு கின்றோம்.

தனி மனிதனாகட்டும், சமுதாயமாகட்டும், அரசாங்கமாகட்டும் தன்தன்கடமைகளைச் செய்து கொண்டு போகவேண்டுமென்று மகான்கள் வற்புறுத்துகின்றார்களாதலினால் இவர்கள் ஒரு சமயம் தனிமனிதனை மட்டும் உயர்த்திக்கொடுக்கும் குருமார்களாகவும், மற்றொரு சமயம் சமுதாய சீர்திருத்தவாதிகளாகவும், பிறிதொரு சமயம் அரசியல் பண்டிதர்களாகவும் மாறிமாறித் தோற்றமளிக்கிறார்கள்; இதனால் முரண்பாடுகள் நிறைந்தவர்களாகவும் எண்ணப்படுகிறார்கள். உண்மையில் இவர்கள் எல்லாமுமாக இருக்கிறார்கள். எல்லோருடைய நலன்தான் இவர்களுடைய குறிக்கோள்.

இத்தகைய மகான்களில் ஒருவன்தான் **கன்பூஷியஸ்.** சீனர்கள் போற்றும் ஞானப் பண்டிதன். இவன், கிறிஸ்து மகான் அவதரிப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகள் முந்தி அவதரித்தவன். இவன் அவதரிப்பதற்குச் சுமார் இருபது நூற்றாண்டுகளுக்கு முந்தியிருந்தே சீன நாகரிகத்தில் நிறைவுற்றிருந்தது. சீலமே பெரிதுடைய பிரசைகள், கட்டுக்கோப்பான சமுதாயம், பண்பட்ட அரசாங்கம் எல்லாம் அங்கிருந்தன. ஆனால் கி. மு. ஆறுவது நூற்றாண்டில் இவையாவும் நிலை குலைந்துநின்றன. இங்ஙனம் நிலைகுலைந்து நின்றவைகளை ஒரு நிலப்படுத்தவே கன்பூஷியஸ் தோன்றினான்.

சீனாவில் மட்டுமல்ல, நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கிய இந்தியாவிலும் கிரீஸிலும் கூட, இந்த ஆறுவது நூற்றாண்டில் ஏதோ ஒரு வகையான குழப்பம் ஏற்பட்டிருந்தது.

இந்தக் குழப்பத்திலிருந்து தெளிவுகாண, இந்தியாவில் புத்தர் பிரானும், கிரீஸில் ஸாக்ரட்டீஸ் மகானும் முறையே தோன்றினர். கன்பூஷியஸ், புத்தர், ஸாக்ரட்டீஸ் ஆகிய மூவரும் சமகாலத்தவரே.

கன்பூஷியஸ் என்பது ஐரோப்பியர்கள் வழங்கிய பெயர்; சீனர்கள், **குங்-புத்-ஸே** என்றுதான் அழைப்பார்கள். ஞானியும் அரச தந்திரியுமான குங் என்று இதற்கு அர்த்தம்.

கன்பூஷியஸின் உபதேசங்களிற் சிலவற்றைக் கீழே தருகிறோம்:

1. "மனதைக் கடமையில் செலுத்து. சீலத்தைக் கடைப்பிடி. தயைக்குக் கட்டுப்படு. மேலான கலைகளில் மனச்சாந்தி பெறு".
2. "மனத்துக்கண் மாசிலனாயிருந்து நீ பேசுவாயாகில், கண்ணியமாகவும் நிதானமாகவும் காரியங்களைச் செய்வாயாகில் நாகரிகமில்லாத இடங்களில் கூட நன்மதிப்புப் பெறுவாய்"
3. "புகழைப் பொருட்படுத்தாதே; புகழ்பெறுவதற்குத் தகுதியுடையவனாக உன்னைச் செய்துகொள்".
4. "சீலமற்றவனை நண்பனாகக் கொள்ளாதே"
5. "நாம் யாரிடத்தில் பழகினாலும் அவரிடத்தில் காணப்பெறும் நற்பண்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும்; கெட்டவற்றை விலக்கிவிடவேண்டும்".
6. "சீலம் எப்பொழுதும் தனித்து நிற்பதில்லை. அதற்கு நண்பர்கள் நிறைய உண்டு".
7. "ஆள்கிறவர்கள் நன்னடக்கை யுள்ளவர்களாயிருக்கும் பட்சத்தில், அவர்கள் விடுக்கிற உத்திரவுகளுக்கு எல்லோரும் கீழ்ப்படிகிறார்கள்".
8. "சீலபுருஷர்கள் ஒரு இராச்சியத்தில் தொடர்ந்து ஆட்சி புரிவார்களானால், அந்த இராச்சியத்தில் மாணதண்டனை விதிக்கப்படவேண்டிய அவசியமே ஏற்படாது".
9. "அரசனாயிருப்பது கடினம். மந்திரியாயிருப்பது சுலபமல்ல".
10. "முற்காலத்தில் மனிதர்கள், தங்கள் அபிவிருத்திக்காகப் படித்தார்கள்; இப்பொழுதோ மற்றவர்கள் நம்மைப் பாராட்ட வேண்டுமென்பதற்காகப் படிக்கிறார்கள்".
11. "தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றும் சொல்வதுதான் அறிவு".
12. "சிறிய விஷயங்களில் பொறுமை காட்டா விட்டால் பெரிய காரியங்கள் கெட்டுப்போகின்றன".

---

## வியாபாரிமூலை ஜனசமூக நிலையம் கலைமணிவாசிகசாலை

வருடாந்த மகாசபைக் கூட்டம் சனிக்கிழமை வியாபாரிமூலை வீரபத்திரர் ஆலயமண்டபத்தில் சங்கத்தலைவர் ஸ்ரீ. தி. வரத கணபதிப்பிள்ளை வைத்தியர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. வருடாந்த வரவு செலவுக் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை
தலைவர்: ஸ்ரீ. மு. இரத்தினசபாபதி
உபதலைவர்: ஸ்ரீ தி. வரத கணபதிப்பிள்ளை
காரியதரிசி: ஸ்ரீ மு. சு. கதிர்காமத்தம்பி
உபகாரியதரிசி: ஸ்ரீ க. ஆனந்தநடராசா
தனாதிகாரி: ஸ்ரீ. நா. கணபதிப்பிள்ளை
உபதனாதிகாரி: ஸ்ரீ சி. முருகுப்பிள்ளை

நிர்வாகசபை அங்கத்தவர்: திரு. சு. சிவபாக்கியம்பிள்ளை, திரு. வே. சிவக்கொழுந்து, திரு. வே. ந. செந்திவேற்பிள்ளை, திரு. வே. க. கந்தையா, திரு. நா.ம. பரஞ்சோதி, திரு. வெ. கிருஷ்ணதாஸ், திரு. தி. பாலேந்திரன், திரு. க. இரத்தின வடிவேல், திரு. அ. சோமாஸ்கந்தர்.

கணக்குப் பரிசோதகர்: திரு. ஆ. சி. கணபதிப்பிள்ளை,

திருவாளர்கள்: வே. சிவக்கொழுந்து ஆசிரியர், பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை ஆசிரியர், வே. தா. சி. சிவகுருநாதன் ஆசிரியர் கடமைகள் பற்றி பேசினர்.

காரியதரிசியின் நன்றியுரையோடும் தேவார பாராயணத்தோடும் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

# பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை

## ஆராய்ச்சியினால் அரும்பெரும் உண்மை கண்டறிந்த பெரியார்

செல்வ. யோகநாதன், யாழ்ப்பாணம்

பிறநாட்டு நல்லறிஞர்கள் சாத்திரங்கள் தமிழ்
மொழியில்பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில்
இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை
வணக்கம் செய்தல்வேண்டும்.

என்பது புரட்சிக் கவிஞன் பாரதியின் வாக்கு. பாரதி கூறிய படியே பழம் பெருமை பேசாது பழைய ஏட்டுப் பிரதிகளையெல்லாம் ஆராய்ந்து அவைகளைத் திறமாக வெளியிட்டு வெளிநாட்டார் கூடத் தமிழ் மொழியின் பெருமையைப்பற்றி அறியும் படி செய்த அருந்தமிழ் ஆராய்ச்சி மன்னன்தான் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை. தமிழே தமது மூச்சாகக் கொண்டுவாழ்ந்த வையாபுரிப்பிள்ளை யவர்களைப் பற்றி நாம் அதிகமாகக் கூறினால் அது "பூக்கடைக்கு விளம்பரம்" வைத்ததுபோல ஆகிவிடும். தமிழகத்திலே தலைசிறந்த ஆராய்ச்சி நிபுணனாகவிளங்கிய வையாபுரிப்பிள்ளை யவர்களின்வாழ்க்கையை இனிநோக்குவோம்.

**பிறப்பும் வளர்ப்பும்.**—பிள்ளையவர்களின் குடும்பம் பரம்பரை பரம்பரையாகத் தமிழென்னும் அமிழ்தக்கடலிலே திளைத்து வந்த காரணத்தினாலே மக்களிடையே மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தது. கற்றாரையெல்லாம் காமுற்று வாழ்ந்த வையாபுரிப்பிள்ளையவர்கள் திருநெல்வேலியிலே சிறப்புடன் வாழ்வு நடத்திவந்த சரவணப் பெருமாள் பிள்ளையென்னும் உத்தமருக்கு மகனாக 1888 ம் ஆண்டு ஒக்ற்ரோபர் மாதம் 13 ந் திகதியிலே திருவவதாரம் செய்தார். இளவயதிலே பிள்ளையவர்கள் கல்வியென்னும் கடலிலே வீழ்ந்து ஆங்கே அரிய பெரிய முத்துக்கள்போன்ற அருமையான விடயங்களையெல்லாம் எடுத்துக்கொண்டார். சைவமும், தமிழும் நன்றாக வளர்ச்சி பெற்றுவந்த அக்காலத்திலேதான் பிள்ளையவர்களின் படிப்பும் நடந்துவந்ததாகையால் அச்சூழ் நிலையே பிள்ளையவர்களின் தமிழார்வமும் ஓங்க வழிசெய்தது. அதன் பின்னர் பிள்ளையவர்களின் படிப்பு ஆங்கிலக் கலாசாலை யொன்றிலே தொடர்ந்து நடைபெற்றுவந்தது. இளவயதிலே பிள்ளையவர்கள் பாம்பன் குமரகுருதாசர் என்ற பெரியாரிடத்தும் அதன்பின்னர் தமிழ் கூறும் நன்னகராம் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பண்டிதர் சுவாமிநாதனிடத்தும் முறையாகத் தமிழ் பயின்றார். கலாசாலைப் படிப்பு முடிந்து சர்வகலாசாலைக்குப் படிக்கச்சென்ற பிள்ளையவர்களுக்கு சுவாமி வேதாச்சலம் என்று கூறப்படும் மலையடிகளாரே தமிழ் போதித்துவந்தார். பிள்ளையவர்களின் திறமை மறைமலையடிகளின் போதனையினாலே மென்மேலும் சிறப்புற்று விளங்கியது. இன்று தமிழகத்திலே சிறப்புற்று விளங்குகின்ற பிரபல அறிஞர்களெல்லாம் பிள்ளையவர்களின் கலாசாலை மாணவர்களே. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை முதலாய மிகச் சிறந்த கவிஞர்களெல்லாம் பிள்ளையவர்களின் இணைபிரியாத நண்பர்களாய் விளங்கி அவரின் சேவைக்கு உதவி புரிந்து தமிழ் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்கள். கல்லூரியிலே சட்டமும் பொருளாதாரமும் கற்றுத் தேர்ச்சிகொண்ட பிள்ளையவர்கள் திருவனந்தபுரத்திலே தமது வக்கீல் தொழிலைத் திறம்பட நடத்தி வாழ்ந்தார். வக்கீல் தொழிலை இவர் நடத்தி வந்தாலும் இவர் எண்ணமெல்லாம் தமிழை வளர்க்க வேண்டும் என்ற குறிக்கோளிலேயே லயித்திருந்தது. இவரது இந்தத் தமிழார்வமே இவரை ஆராய்ச்சித் துறையிலே ஈடுபடுத்தியது.

**தொண்டாற்றல்.**—வையாபுரிப் பிள்ளையைப்பற்றி யெண்ணும் போதெல்லாம் "நூதனப் பேரகராதி" யே நம்கண்முன்பு காட்சியளிக்கும். பிள்ளையவர்களின் திறமைக்கு "நூதனப்பேரகராதி" யே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த "நூதனப் பேரகராதி" பிள்ளையவர்கள் சென்னை சர்வகலாசாலையில் அங்கம் வகித்துவந்தபோதே இவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பல தொகுதிகளாக வெளிவந்தது. தமிழின் வளர்ச்சிக்காக இரவு பகல் என்றுபாராது "மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது கண் துஞ்சாது" இடைவிடாது செல்லரித்துக் கிடந்த ஏடுகளையும், பிரதிகளை ஒப்பிட்டுப்பார்த்து சரி பிழை பார்ப்பதிலும், பழைய நூல்களைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதிலுமேயே தன் வாழ்நாளில் பெரும் பகுதியைப் பிள்ளையவர்கள் செலவிட்டார்கள். தமது இடைவிடாத ஆராய்ச்சியின் மூலமாகப் பிள்ளையவர்கள் ஏறக்குறைய நாற்பது நூல்களைப் பல அறிஞர்களின் துணை கொண்டு பதிப்பித்து வெளியிட்டார். ஒருவரும் அறியாதுகிடந்த ஒப்பற்ற அறிவுக்களஞ்சியங்களையெல்லாம் மிகச் சிறந்த முறையிலே வெளியிட்டு வந்த பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை எத்தனையோ இடைஞ்சல்களுக்கு மத்தியிலே ஏறத்தாழ பதினைந்து நூல்கள் மட்டிலே எழுதி வெளியிட்டார். இந்நூல்களைப் போற்றாத அறிஞர்களே தமிழ் கூறும்நல்லுலகத்திலே இல்லையெனலாம்.

**வியத்தகு வாழ்வு.**—பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்க்க எண்ணினர். தமிழிலும், வடமொழியிலும், மலையாள மொழியிலும், கன்னடத்திலும் தெலுங்கிலும், ஜெர்மன் மொழியிலும், பிரான்சிய, ஆங்கில மொழிகளிலும் தேர்ச்சி பெற்று டன்மொழிப் புலவராக விளங்கிய பிள்ளையவர்களின் வாழ்வு மிகவும் உத்தமமானது. தன்னடக்கம், அமைதி, இடாம்பீக வெறுப்பு, எடுத்த செயலை வெற்றிகரமாக முடித்து வைக்கும் திடமான உள்ளம், நேர்மைத்திறன் இவையே பிள்ளையவர்களின் சிறந்த குணங்களாக விளங்கிவந்தன. எத்தகைய கஷ்டம் பொருந்திய வேலையில் தாம் இறங்கியிருந்தாலும் அதை செய்து முடிக்க வரும் இடர்களை யெல்லாம் களைந்தெறியும் பிள்ளையவர்களின் உரம் பொருந்திய செய்கையை யாராவது மறுத்துக்கூற முடியுமா? தமிழன்னையின் புகழுக்காக, தமிழகத்தின் நலனுக்காக, தமிழர்தம் உயர்வுக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணம் செய்த அரும் பெரும் அறிஞராம் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைப் போன்றவரை இனி நாம் எப்போது காண்போம்?

**இறுதி.**—செல்லரித்த ஏடுகளைக் காணும் தோறும் தம் கண்ணீர் மழையால் அவற்றைக் கழுவிச் சுத்தமாக்கிய

(29 ம் பக்கம் பார்க்க)

நாடோடி இசைச்சித்திரம்—3

# மழைக் காவியம்

அருள் செல்வநாயகம்

(இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளது.)

உழுதுண்டு வாழ்பவர்களின் பிறப்பிடம் கிழக்கிலங்கை. பாய்ந்தோடும் பெரும் நதிகள் கிழக்கு இலங்கையின் வயல் வெளிகளைப் பொன்கொழிக்கும் பூமியாகச் செய்துகொண்டிருக்கின்றன. பச்சைப் பசேலென்ற வயல் வெளிகள் மைல் கணக்கில் கிழக்கிலே பரந்துகிடக்கின்றன.

உழவர்கள் உழைப்பாளிகள் மூன்றுமாத உழைப்பினுக்கு ஒன்பது மாத ஓய்வுகொள்ளும் மக்கள் கிழக்குவாசிகள். உல்லாசமாக ஓய்வு காலத்தைக் கழிப்பதென்றால் வயலிலே விளைவு பெருக வேண்டும். அப்படிப் பெருகாவிட்டால் அந்த ஒன்பது மாத ஓய்வும் அவர்களுக்குத் துன்பம் நிறைந்ததாகவே இருக்கும்.

உழவர்கள் உல்லாசமாக வாழ அவர்களுக்கு மழைவேண்டும். மழை இல்லாவிட்டால் வயல் வெளியிலே பசுமையைக் காண முடியாது. பசுமை மறைந்தால் உழவர்களுக்கு வாழ்வுதான் ஏது.

மழையை நம்பித்தான் உழவர்கள் வேளாண்மை விதைப்பதில் ஈடுபடுகிறார்கள். ஆனால் ஒருக்கால் காலக்கோளாறினால் பருவ மழை தவறினால், மழையை அருளும்படி இறைவனை வேண்டுவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கமேது. இறைவனை நம்பித்தான் உழவர்களின் சகலமும் இருக்கிறது.

ஓர் தடவை கிழக்கிலே மழைபெய்யவில்லை. பருவமழை பெய்யத்தவறிவிட்டது. அதனால் மழையை நம்பி விதைத்த வேளாண்மைப் பயிர்கள் வாடலாயின. குழந்தைகளைப்போலப் பேணி வளர்த்த வேளாண்மை கருகிச் சாம்பலாவதை உழவர்கள் பொறுப்பார்களா! ஆகவே மழையை அருளும்படி கிழக்கிலங்கையின் குலதெய்வமான கண்ணகியை வேண்டினார்கள்.

கண்ணகி ஆலயங்கள் மேலும் உழவர்கள் பெரும்பூசை போட்டு மழையை அருளும்படி வேண்டினார்கள். அந்த வகையிலே தம்பிலுவில் என்னும் ஊரில் உள்ள கண்ணகி ஆலயத்தினிலும் மழைக்காகப் பெரிய பூசை நடந்துகொண்டது.

கண்ணகி கோயில் அர்ச்சகரான கண்ணப்பன் மக்கள்படுந் துயரத்தைக் கண்டு வருந்தினார். வேளாண்மை கருகுவதைக் கண்டு பதறினார். ஆகவே உழவர்களுக்காக அவர் தேவியை வேண்டலானார்.

பச்சைக்களியினால் ஓர் பானை செய்து அதைக் கோயிலின்முன் வைத்து நெருப்புமூட்டினார். பானையினுள் பொங்கலுக்காக பால் பழம் அரிசி என்பவைகளைப் போட்டார். தீ கொழுந்துவிட்டு எரியலாயிற்று. அதைக் காணவும் அர்ச்சகரான கண்ணப்பர் ஆவேசத்தினால் உந்தப்பட்டு மக்கள் குறையைக் காவியத்தினால் தேவிக்கு எடுத்துச் சொல்லலானார். காவியத்தினுக்கு இசை வரம்பு எழுகிறது :—

தந்தனத நாதனத நாதனத நானு
தனனுத நாதந்த நாதந்த நானு
தந்தனத நாதனத நாதனத நானு
தனனுத நாதந்த நாதந்த நானு

கண்ணப்பனார் தமிழர் கண்ட குலதெய்வங்களை யெல்லாம் அழைக்கிறார்! அத்தனை குலதெய்வங்களையும் மழையை அருளும்படி வேண்டுகிறார். வேண்டுதலின் பயனை விநாயகரின்மேல் சிறப்பாகச் சுமத்தி மழை வெள்ளத்தினுக்கு வேண்டுகிறார். இந்த வகையாகக் கண்ணப்பனார் கண்ணகிதேவியின் மேல் 14 காவியங்களைப் பாடினார். கண்டியில் இராசசிங்கன் ஆணை செலுத்திய காலத்திலே பாடப்பெற்ற இந்தக் காவியங்கள் இன்று கிழக்கு இலங்கையில் சிரஞ்சீவியாகிவிட்டன. மழை வளம் குறைந்த நாட்களில் வெட்டவெளியில் நின்று கண்ணப்பனின் பெயரைச் சொல்லி, உழவர்கள் மழைக்காவியங்களைப் பாடுவார்கள். காவியங்களின் மகிமையோ அல்லது உழவர்களின் நம்பிக்கையோ காவியம் இசைத்தவுடனே வானம் இருண்டு மழைபொழியவே செய்கிறது. இத்தகைய சக்தியைக் கொண்ட கண்ணப்பனின் காவியங்கள் இதோ :

அரிய புவிமகளும் அலைகடலி லுறைபவனும்
அரவுதனை அணிபவனும் மலையரசன் மகளுமையும்
பெரிய தவமுனியும் இருசிகனும் மலரயனும்
உலகுசெறி கலைமகளும் ஊர்வசியு மிந்திரனும்
பெரியவருள் அனுதினமும் உனது பதமலரை
தெண்டனிட் டடிபணியவே மனமிரங்கி
விரிவுசெறி குளமதுகள் நிறையமழை பொழியவருள்
மேவிவளர் ஐங்கர விக்கினேஸ் வரனே.

தாயே! கடல் நீரானது ஆவியாக எழுந்து ஆகாயத்திலே சென்று மழையாகப் பெய்தால்தான், குளங்களிலும் ஆறுகளிலும் நீர்ததும்பும் அதனைக் கொண்டுதான் வேளாண்மைக்கு நீர்பாய்ச்சமுடியும்.

சோதிடத்தைப் பார்த்தோம்; மழைபெய்வதற்கான அறிகுறியுண்டு. ஆனால் மழைபெய்யவில்லை. கொடிய வெயில்தான் எறிக்கிறது. கொடியவெயிலானது அமைதி காணவும், நாங்கள் எங்களது பணியைச் செய்யவும் மழை வேண்டும் தாயே! ஆகவே மழையை அருளும் கண்ணகியே!

ஆழமுறுகடலின் நீர்வானமது வருஷித்து
அகிலமுறு ஆறு குளம் நிறைய மழைபொழிய
சோளது குணக்கிட ராசியது மேவியே
கொடிய வெயிலேயல்லாமல் மழைபொழியு தில்லையம்மா
நாளது தெரிந்து மறை வேதியர் மொழிதுலங்க
நாங்கள் படுந்துயரகல தாங்கரிய வெள்ளம்
தாளமுறு வெங்குள மேகங்கள் நிறைய வுன்கிருபை
தந்துதவவேணும் தம்பிலுவில் தங்கும் மாதாவே

தாயே! உன் கிருபைதான் வேண்டும். நீ மனம் வைக்காவிட்டால் மழையே பெய்யாது. தாயே சோதிடத்தைக் கணித்துப் பார்த்தோம். இடபம் மிதுனம் கற்கடக சிங்கராசிகள் வெள்ளியிலே மேவியுள்ளன. கேசரியோக முற்றிருக்கிறது. குரு சந்திரன் யோகம் பெற்றிருக்கிறது. இத்தனை மழைவெள்ளத்தினுக்குத்தான். ஆனால் உலகமாதாவாகிய நீ இல்லாவிடில்

மழை பெய்யாதே! இரங்கு மாதாவே! உன் இரங்குதலினுல் வாடிய பயிர் விளையவும், மழை கொட்டவும் முடியுமென் கிருர்.

வில்லிடப மிதுனமொடு கற்கடக சிங்கராசிகள்
மேவியுறவாய் வெள்ளி மேவு நாளதினில்
நல்ல மதியான அனுகேசரி யோகமுற்று
நன்மைபெறு குருசந்திரன் ஆனதின்பின்பு
சொல்லரிய விடமுற்ற நேரமதில் முகில்கள்
சொரிகின்ற சோலை மழையெனவேபெய்து
நெல்விளைவு பெறவுனது திருமனமிரங்கி
நிமிசத்தில் மழையுதவு மலரழகமயிலே

தாயே! மழையில்லாமல் உழவர்கள் மட்டுமா துன்பப்படுகிருர் கள். உழவர்களின் மனைவிமக்களுந்தான் தாயே! பெண்களின் கூந்தல்கள் அழகு குறைந்துவிட்டன. உளருகின்றன தனங்கள் சோர்ந்துவிட்டன. வல்லிக்கொடிபோன்ற இடையானது துவண்டு விட்டது. கொடிய வெயிலினுல் நெற்றியிலே எழுதிய திலக மானது வியர்வையினுல் அழிகின்றது. இந்தக் கோலமானது நிவிர்த்தியாக வேண்டுமென்ருல் மழைபொழிய வேண்டும் தாயே! உலக மனத்தையும் உன்னுள்ளேகொண்ட நீங்கள் எண்ணினுல் ஒரு நாழிகைப் பொழுதிலே உதவுமுடியும். வணிக ருக்கு மகளாகப் பிறந்து கோவலர்க்கு மனைவியாகி, மதுரை எரித்துக் கற்பின் கடவுளாகிய தேவியே! தம்பிலுவில் என்னும் ஊரில் குடிகொண்ட மாதாவே இரங்கும்—

மலரடி சமதுகுலைய வளருமிரு முலைகுலைய
வடிவுறு மின்னிடையது துவழமதி நுதலிலே
வியர்வை திலக மெழுதிய தழிய வெயிலினிய புழுகெழுக
திருமேனி கருகவெளி வரவேணுமேதான்
உலகம் முழுதும் பெற்றதாயல்லவோ மழைவெள்ளம்
ஒரு நாழிகைப் பொழுதினில் உதவவொண்ணுதோ
குலதிலக வணிகர்குல வனிதையே தம்பிலுவில்
குடிகொண்ட பத்தினிக் கோதைமாதாவே.

தாயே! நீ நினைத்தால் ஆகாததுதானேது! மக்களுக்காக நீ எத்தனையோ தியாகங்களெல்லாம் செய்தாய். ஆயர் சேரியிலே வளர்ந்தாய். செம்புமாவின் கனியாக இருந்தாய். தம்பிலுவில் ஊரில் வந்துறைந்துள்ளாய். இப்பகூட ஆற்றங்கரையோரமாகத் தானேயிருக்கிருய். அப்படியெல்லாம் இருக்க நீ எப்பதான் மழைபொழிவதென்றெண்ணியிருக்கிருய். மழைவெள்ளத்தை அருளாது வாழாது இருந்தால், உலகமக்களாகிய நாங்கள் தவிர்க்க முடியாத இன்னல்களுறுவோம். எங்களை இன்னலி லிருந்து காக்க மழைவெள்ளத்தை அருள்தாயே!

செப்புமீதலைகடலில் ஆகமுன் னிருந்தாய்
இட்டமுடன் ஆயர் சேரியில் வளர்ந்தாய்,
சொப்புமாவில் கனியதாக முன்னிருந்தாய்,
சோகநகர் தம்பிலுவில் ஊர்தனிலுறைந்தாய்
இப்பவெளி உரக்க ஆற்றிடை இருந்தாய்
எப்பம்மா மழைபொழிவதென்று நீ இருக்காய்
தப்பினுல் உலகமுறுவார் துயர்கண்டால்
தற்பராபரனுதவு சக்திகண்ணகையே.

கண்ணகி அம்மையே! தண்ணீர் இல்லாமலே வயல் வெளியி லுள்ள இளங்கதிர்கள் எழுந்துநிற்க முடியாமல் துவண்டு சாகின்றன. அதனைக் காணக் காண உழவர்கள் கண்ணீர் சிந்துகிருர்கள். அவ்வாருக அவர்கள் படுந்துயரத்தை நீ காண வில்லையா! கண்டுதானே இருக்கிருய். நீ மட்டும் மனம்வைத்தால் மூன்று நாழிகைப் பொழுதிலே மழையை அருளமுடியும்! ஆகவே எங்களுக்காக இரங்குதாயே!

தண்ணீரில்லாமல் காவிகள் இளங்கதிர்கள்
தலைசோர வயலினுன் சனமது தவிக்க
கண்ணீரினுல் மூழ்கி நினைவு துயரன்றியவர்
கண்கலக்கப்படும் கவலை நீயறியாயோ
மண்ணனதில் நுரைதங்கி நதியோடிவர
மூன்று நாழிகைதனில் ஓர் மழையருள வேண்டும்.
பெண்ணீர்மையானதொரு காரணச் செல்வியே
பேசுதம்பிலு விலுறைந்த பெண்ணரசியே.

தாயே! நாங்கள் பிழைகள் செய்திருக்கலாம். அப்படிச்செய் தாலும் உன் அடியவர்களின் பிழையை நீயன்றே பொறுக்க வேண்டும். பொறுமையின் இருப்பிடமானதாயே. மனதிரங்கி இப்பொழுதே சிறந்ததொரு மழையை அருளும். மழை வெள் ளம் கண்டவுடன் நெற்கதிர்கள் மலரும். அக்கதிர்களில் வண்டுகள் ஆனந்தமாக ரீங்காரம் இசைத்துக்கொண்டு வந்து உட்காரும். தினமும் வண்டின் ரீங்காரம் சூழ்ந்த தம்பிலு விலில் தானே நீயும் குடிகொண்டிருக்கிருய். ஆகவே உன் அடியவர்கள் வேண்டுகிருர்கள் இரங்கம்மா இரங்கு—

எந்தவிதமான பிழை செய்தாலும் நீ பொறுத்து
ஏழையடியார்க்காய் மனமதிரங்கி
நொந்தகண்ணறவே இப்பதாரும் மழைவெள்ளம்
நூதனமதாகவே நீ அருளல் வேண்டும்
கொந்தளகபந்தி செறிமடவார்கள் நீரோடை
கொண்டாடு தனில் வாவி செறி நின்ருடு மலரில்
தந்தன தனவென்று வண்டிசைகள் பாடவரு
தம்பிலுவில் ஊர்தழையவந்த மாதாவே.

கண்ணகி அம்மையே! நீ மட்டும் கருணை வைப்பாயெனில் உலகிலே நடக்கமுடியாத காரியமெல்லாம் நடைபெறும். திசை தெரியாது கடலிலே அலைந்த கப்பல் கடற்கரையை வந்தடையும். பாடையிலே வைத்து சுடலைக்கு எடுத்துச்சென்ற பிணம்கூட உயிர்பெற்றெழும். உவர் தரையிலே பதரை விளைத்தாலும் விளைந்து பயன்தருவாய். பேசாத ஊமையன்கூட சிரித்துக் கனைத்துப் பேசுவான். குருடனும் கட்பார்வைபெற்று நடப்பான். நதிக்குள்ளேகூட முத்துக்கள் விளையும். இதுமட்டுமா இன்னும் எத்தனையோ புதுமைகளெல்லாம் நடைபெறும் அப்படியிருக்க உன் அடியவர்களான உழவர்களுக்காக உன்னுல் மழையை அருளமுடியாதா? முடியும் தாயே முடியும். உழவர்களின் சோர்ந்த முகத்தையாதல் பார்த்து இரங்கு தேவி! தம்பிலுவில் ஊர்தழைக்க இரங்கு கண்ணகி மாதாவே.

கப்பல் திசை கெட்டது கரைக்குள் அடையாதோ
கட்டைதனில் வைத்த பிணம் மற்றுயிர்கொள்ளாதோ
உப்பளமதிற் பதர் விளைக்க விளையாதோ
உத்தரவு ஊமையன் உரைக்க அறியானே
செப்பு பிறவிக்குருடு இப்பதெளியாதோ
சிப்பிவளர் முத்துக்கள் நதிக்குள் விளையாதோ
செப்பமுடன் உன்கிருபை வைத்திடுவையாகில்
சீர்மேவு தம்பிலுவில் சேரும் மாதாவே.

தாயே! உன் பெருமை இவைமட்டுமோ! இந்த உலகத் தையே கெற்பமாக உன் வயிற்றிலே வைத்திருந்தாய். அப்படி யிருக்க உன் சனங்களுக்காக இரங்கமுடியாதோ? எங்களது வேண்டுகோள் அற்பமானது என்றெண்ணுமல் இரங்கும். உழவர்களுக்கு இரங்காவிட்டாலும் உன் தொண்டனுன எனக் காதல் இரங்கி மழையை அருளும் தாயே.

கெற்பமாய் உலகமுழுவதுந் தவமளித்தாய்
கேளுடைய பால்முனைகள் சிறுகவைத்தாய்
கெற்பமாகிய பயிர்கள் வாடுதலை நீ கண்டு

நின்றழுதபேர் மகிழ இன்றுமழை தாராய்
அற்பமாய் என்றெனை நீ நினைத்தாலும்
அடியனுன் பாடலுக்காயினுமிரங்கி
சொற்பமாய் மழைவெள்ளம் நீ அருளல் வேண்டும்
சொல்லரிய தம்பிலுவில் வல்ல பத்தினியே.

என்ன உருக்கமான வேண்டுகோளை விடுத்தும் இன்னும் உன் மனம் குளிரவில்லையா? கடல் கடைந்தபோது அமுதத்துடன் பிறந்தவளே! மதுரையை முனிந்து எரித்துச் சாம்பலாக்கிய வளே! அடவியிலே தனி விடுதியமைத்து நின்றவளே! உனது பெருமைதானென்ன! நாகமணியை ஒரு நாசினில் அணிந்து, மலையரசனுக்கு மகளாகப் பிறந்த தேவி! திடுதிடுவென இப் பொழுது மழையை அருளும் தாயே.

கடல்கடைய அலைகடலில் அமுதொடு பிறந்தாய்
கருதரிய வழுதிநகர் மதுரையை முனிந்தாய்
அடவிதனில் மருதடியில் விடுதிவிடவந்தாய்
அரகரா உனதருமை உடலிடையில் நொந்தாய்
விடவரவனின்மணியை ஒரு தரிசினி லணிந்தாய்
மிதுலைதனில் மலையரசன் மகளென வளர்ந்தாய்
திடுதிடுவென மழை உதவு சடுதியிலெழுப்பாய்
சீருலவு தம்பிலுவில் சேருமாதாவே.

தேவியே! பத்தினித் தெய்வமே! உன் பெருமைதான் எத்தகையது. உன்னால் ஆகாததுதானேது! எட்டுத்திக்கிலும் உனது ஜெய பேரிகை யன்றோ ஒலித்துக்கொண்டிருக்கிறது.! அப்படியிருக்க எங்களில் பராமுகமா! நீ மட்டும் கடைக்கண் நோக்குவாயானுல் மதலையை ஈனுத மலடிகூட அழகான குழந்தை பெற்றிருப்பாள். இனிப் பயன் கிடைக்காது என்று விடுதலையான வயல்வெளிகூட விளைந்து பயன்கொடுக்குமே! பட்டமரம்கூடத் தளிர்த்து வளரத் தொடங்குமே! முதுமையைத் தாண்டிய கிழவன்மார்கூட இளமையுற்று வாலிபர்களாகத் துலங்கு வார்களே! இப்படியெல்லாம் நடக்கும் உனது கிருபையினுல் உலகத்தை நாள்முழுதும் காத்து மகிழும் மாதாவே! உன் குழந்தைகளான நாங்கள் மழைக்காக வருந்துகிறோம். துயர் உறுகிறோம். தீர்க்க வேண்டியது உன் கடமை தானே தாயே!

அட்டகச முனது போர்த்திட்டமதகலாதோ
அழகான முழுமலடி மதலை ஈனுளோ
விட்ட கோடைமழை இப்ப சொரியாதோ
பட்டமரமானது தழைத்து வளராதோ
பழமைதெரி கிழவன் மாரிளமை உறுவாரே
திட்டமுடன் உன்கிருபை வைத்திடுவையானுல்
சீர்மேவு தம்பிலுவில் உறையும் மாதாவே

கற்பு நெறிக்காரிகையே! எங்களது வேண்டுகோளினைக் கேட்டும் வாளாவிருக்கிறுய்? நாங்கள் செய்த அபராதந்தானென்ன? எங்கள் குலமங்கையர்கள் கற்பு நெறி தவறினுர்களா! இல்லையே! எங்கள் மாந்தரின் கற்பு நெறியின் பொருட்டுத்தானே நீ தம்பிலுவில் வந்துறைந்தாய். கொடிய வெயில்எறித்துக் கொண்டிருக்கிறது. அதன் கொடுமையைத் தாங்கமுடியவில்லை. இப்படிச் செய்யவேண்டுமென்று உனக்கு மனம் வந்ததா தாயே! குற்றம் குறையிருந்தாலும் பொறுத்து மழை வெள்ளத்தை அருளும் கற்பு நெறி மாதாவே.

கற்பு நெறி தவருத நீடுபயில் மங்கையர்கள்
கானவெயில் மூடுபனி காவணமிருப்ப
எப்ப நீ தம்பிலுவில் வந்துறைந்தாய்
இன்னமொன்றிலையோ என்ன நினைவம்மா
வெப்பு வெயில் கானலது பகலெல்லாம் வீச
வீழ்பனிகளால் முழுதும் மேனியை நனைக்க
இப்படி உனக்குவரம் வந்ததேனம்மா
வெப்பமுடன் மழைதந்தருள்புரிய வேண்டும்.

தாயே! பானுலவுதான் பொய்த்திடினும் நீங்கள் சொன்ன மொழி என்றுமே தவறியதில்லையே. காதல் மொழிதானும் பொய்தானும் கற்பு நெறி என்றுமே பொய்த்ததில்லையே. அப்படியாகப் பொய்த்தகால மோர்போதுமில்லையே. யாருக்குத் தான் இரங்க மறுத்தாலும் உனது அடியவனுன அர்ச்சகன் கண்ணப்பனுக்காயினும் நீ இரங்கவேண்டும். நிட்சுபாகமாக இரங்க வேண்டும் தாயே! மோக நகர் தம்பிலுவில் உறைந்த தாயே இரங்கு அம்மா! இரங்கும்.

சோதிமதி பானுலவு பொய்த்திடினு மேலோர்கள்
சொன்னமொழி தவருத சூதறிவினுலே
காதலுறு மொழிதானுமே பொய்த்திடினுமுங்கள்
கற்புநெறி பொய்த்த தொரு காலமதுண்டோ
காதலடியார்கள் பணிவிடு—காரனுன்னுடைய
**கட்டாடி கண்ணப்பனுக்காயினு** மனமிரங்கி
மோதுகுளிர் தாரமழை நீயருளல் வேண்டும்
மோகநகர் தம்பிலுவினுறை மாதாவே.

உருக்கமுடன் கண்ணப்பன் காவியங்களைப் பாடி இறுதிக் கட்டத்தினுக்கு வந்தான். அந்த வேளை கோயிலின் முன்னர் இருந்த பொங்கற்பானை பொங்கிவழிந்தது. அதற்கேற்ப கொடிய வெயில் மறையவும் மேகத்தாலே இடியேற்றம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து வானம் இருண்டது. மழை பொழிய அறிகுறிகள் தோன்றின. தேவி இரங்கிவிட்டாள் என்று கண்ணப்பன் பெருமைப்பட்டான். அந்தப் பெருமை சிரஞ்சீவியாக மழை கொட்டத் தொடங்கியது. அதனைக் கண்ணுற்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்த கண்ணப்பன் வாழி பாடிக் காவியத்தினை முடிக்கிருன்.

மாது வளர் தம்பிலுவில் ஊர்வாழி
வரிசை செறி வணிகர்குல மாதுமையும் வாழி
நீதிசெறி கண்டிநகர் ராசசிங்கன் வாழி
நீலமயில் ஏறுகதிர் வேல் முருகன் வாழி
வேதமுடன் ஐந்தெழுத் தோதுவோர் வாழி
வெண்ணீறு சிவசமயமும் வாழி
பாதிமதி சூடுபரன் பாதமலர் மறவாழி
பாடிநகர் வாழ் கதிர்காமமும் வாழியவே.

---

## பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை

(26 ம் பக்கத் தொடர்ச்சி)

தாமோதரனுரும், தமிழ்த் தாத்தா என அழைக்கப்படும் அரும் பெரும் பெரியாராகிய சாமிநாதையரும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களுக்கு ஆராய்ச்சித் துறையிலே சிறந்த வழி காட்டிகளாக அமைந்தனர். இவர்களின் வழியிலே சென்று உண்மைகள் பல கண்ட உத்தமன் வையாபுரிப்பிள்ளை தமிழகமே கதறியழுது கண்ணீர் வடிக்கும்படி செய்து பதினேழாம் திகதி பெப்ருவரி மாதம் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தி ஆறும் ஆண்டு இறைவன் திருவடி சேர்ந்தார். அவர் இறந்து வருகிற பதினேழாந் திகதியோடு ஒரு வருடம் பூர்த்தியாகிறது. சிறந்த ஆராய்ச்சியாளனுகவும், பல பெயர்களிலே மறைந்து நின்று சிறு கதை எழுத்தாளனுகவும், விளங்கி வாழ்ந்த பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் புகழ் என்றென்றுமே இவ்வுலகிலே சிரஞ்சீவியாய் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை. வாழ்க தமிழகம்!

வாழ்க ஆராய்ச்சி மன்னன் வையாபுரிப்பிள்ளை!

# பொய்யும் மெய்யும்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

பொய், மெய், என்னும் இரு சொற்களினுடைய வரலாற்றை நாம் ஆராயுங்கால், நம் தமிழ் முன்னோர் இவற்றை எத்துணை நுட்பமான கருத்தமைய ஆக்கிவைத்துப்போயினர் எனக் கண்டு வியற்புறலாகும். இவ்விரு சொற்களும் ஒரு தொடரில் நிற்கும்போது முறையே உண்மையல்லாதது, உண்மையானது எனும் இரு அர்த்தத்தையும் தரும். இவ்வர்த்தங்கள் மனத்திற் றரிக்கப்படும் இரு எண்ணங்களையேயன்றிச் சடமான பொருள்களைக் குறிப்பனவல்ல. ஆதலால், உலகில் வழங்கும் பன்னூறு மொழிகளினுடைய தோற்றத்தையும் ஆராய்ந்துள்ளோரனைவருக்கும் ஒப்ப முடிந்தபடி, சொற்களெல்லாம் முன்பு ஐம்புலங்களுக்கு விடயமான சடப்பொருள்களையோ, செயல்களையோ குறித்து, அப்பால் படிப்படியாக நினைவுருவமான அர்த்தங்களைக்கொண்டன என்றிருக்கின்றமையால் "பொய்", "மெய்" எனும் இரு சொற்களும் ஆதியிற் கொண்டிருந்த சடசம்பந்தமான அர்த்தங்கள் யாவை, அவ்வர்த்தங்கள் எவ்வாறு காலச் செலவில் மேற்குறித்த இரு எண்ணங்களைச் சுட்டுவனவாயின என ஆராய்வாம்.

"பொய்" எனும் சொல்லிற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி ஐந்தாவதாகத் தரும் அர்த்தம் "உட்டுளை" என்பது. ஆருவது "மரப்பொந்து". ஆயின், இச்சொற்குத் துளையுடைமை அல்லது கிடங்காய்ப் பொள்ளலாயிருத்தலே முதல் அர்த்தம் என்பது இதனோடு அடியொத்த பிற சொற்களை வைத்து ஒப்பு நோக்குங்கால் தெளிவாகும். பொள்ளுதல் போழ்தல் (துளைத்தல்) பொளி (துளை), பொய்கை (போழ்ந்து எடுத்த அல்லது இயற்கையிற் கிடங்காயுள்ள நீர்நிலை), போந்து பொறை என்பனவற்றிற்கு முதற்கண் பொருந்திய அர்த்தம், உட்டுளையின் விகற்பங்களே. இவ்வாறே "பொய்" க்குப் பெயராகிய "பொக்க" த்தை அதற்கினமான பொக்கு, பொக்கணை, பொக்குள் ஆதியவற்றோடு நோக்கும்போது அது ஆதியில் துளை, கிடங்கு எனும் அர்த்தத்தையே கொண்டது எனல் வெளிப்படும். போழலுக்கு (போழ்ந்தது) இனமாகிய "புரை" யைப் பற்றியும் இதனைச் சொல்ல வேண்டும். இதற்கு முதலர்த்தம் உட்டுளை எனத் தமிழகராதி உள்ளபடி காட்டுகின்றது. அதில் ஐந்தாவது அர்த்தமே பொய். புரைக்கு உள்ள ஆதியர்த்தத்தை, இன்றைக்கும் பெண்கள் தம் குழந்தைகளின் சுவாசக் குழலில் யாதாவது உணவுப்பொருள் தடக்கும்போது "புரைக்கேறிவிட்டது" என்று சொல்லுவதிற் கேட்கலாம். பழந் தமிழிலிருந்து எழுந்ததாகிய சிங்களத்தில் நமது புரைச்சொல் "பொய்" என்னும் அர்த்தத்தில் மட்டும் "பொறு" என வழங்குகின்றது. மறு பால், "பொய்" ச் சொல், தனது ஆதியர்த்தத்தில், யாழ்ப்பாணத்திலே கட்டு வேலைக்காரருட் பயிலுவதைக் கேட்கலாம். அன்னோர் சாந்திட்டு அடுக்கும் கற்களுக்கிடையில் நீக்கல் அல்லது வெளிப்புத் தோன்றுமிடத்து அதனைப் "பொய்ப்பு" என்பர். பொய்ப்பு=நீக்கல், ஓட்டை, "பொய்" என்பதற்கு அசத்தியம் எனும் அர்த்தமல்ல; உட்டுளை எனும் அர்த்தமே தலையானது என்பது. சொற்கள் ஆதியில் பஞ்சபுலன்களுக்கு விடயமான சடப் பொருள்களையும் செயல்களையுமே சுட்டின என மொழிநூல்வல்லோர் அறுதியிட்டிருக்கும் முறையை நோக்கும்போதும் நன்றாகத் துணியப்படும்.

பொள்ளுதல் அல்லது போழ்தல் எனும் வினையினின்று "பொய்" எவ்வாறு படிப்படியாய் மருவி வந்தது என்பதைப் "பொய்" எனுஞ் சொல் தெலுங்கிற் "பொல்லு" எனவும் கன்னடத்தில் "புலிஹூ லி" எனவும் இருத்தலிற் காணலாம். ஒரு வேளை தெலுங்குப் "பொல்லு" பொறலு (புரஸ்) எனும் உருவத்தின் திரிபாயின், அது "பொய்" எனும் உருவத்துக்கு நேரே பிறப்பிடமாகாது. எப்படியிருப்பினும், பொள்ளினின்று பிறந்து போழ் என நின்ற உருவம் "பொய்" யாயினமை ஒலித்திருப்புக் கட்டளைகளுக்கு முழுதும் பொருத்தமான ஒரு வரலாறே என்பதில் மயக்கம் இன்று. ளகரமும் ழகரமும் தம்முள் மயங்குதல் பெரு வழக்கு "பழம்" பயன் என வந்தாற்போல, ழகரம் யகரமாவதும் திராவிட மொழிகளிற் பயிலுவதொன்று. இனிப் "பொய்" க்கு இருந்த உட்டுளை அல்லது ஓட்டையெனும் ஆத்தத்திலிருந்து அசத்தியம் எனும் அர்த்தம் உண்டானது எவ்வாறு ? நாம், இங்கு எல்லா மொழிகளிலும் வழங்கும் பொருட் டிரிபுமுறையைச் சற்றே நோக்குவோமாயின், இதை எளிதிற்றெரிந்துகொள்ளலாம்.

பொருட்டிரிபிற் "சார்புபற்றி விரிதல்" என்னும் துறையை எனது சொற் பிறப்பு ஒப்பிய "லகராதி" யின் ஆரம்ப பாகம் பின்வருமாறு விளக்குகின்றது. "சிறப்பியல்பு சுட்டு எழுந்த பெயர்கள் அப்பால், அது அது குறிக்கும் பொருளோடு சார்பு பூண்ட வேறு பொருள்களுக்கும் பொருந்துவனவாயின. உதாரணம் எழுகின்ற சிறப்பியல்பு பற்றிச் சூரியன் பெயராக வந்த எல் எனுஞ் சொல், சார்புபற்றிச் சூரிய வெளிச்சத்திற்கும் பெயராயிற்று. இவ் எல் என்னும் உருவம் எல்லு எனவும் நின்று, சூரிய வெளிச்சம் நிலைபெறும் காலமாகிய நாளுக்குப் பெயராயிற்று. அச்சொல்லினின்று வந்து எல்லை எனும் உருவம் வெளிச்சக் காலத்தின் முடிவாகிய வரம்பைச் சுட்டிற்று. அப்பால் எல்லை என்னுஞ் சொல் உறுதிப்பாட்டின் பொருட்டு வேளை எனவும், வேலி எனவும் இரு உருவங்கள் தாங்கி முறையே வரையறுத்த காலமாகிய நேரத்தையும், இடத்தையும் வரையறுக்குந் தடையாகிய பதில் ஆதியவற்றையும் குறித்தது. இனி, மதிலின் பெயராகவந்த வேலிச் சொல் அம்மதிலால் உறுங்காவலையும், அக்காவலினுள் அடங்கிய ஊர் ஆதியவற்றையும் முறைமையிற் சுட்டுவதாயிற்று. சார்புபற்றி விரிதலாலேதான் ஆதியிற் சடப் பொருள்களுக்கு மட்டும் பெயராயிருந்த சொற்கள், பின் சித்துப் பொருள்களுக்கும் அவற்றின் குணம் ஆதியவற்றுக்கும் பெயராயினமையைக் குறித்துக்கொள்க."

இம்முறையிற் கண்டிப்பான ஒரு பொருள் முழுதுங் கண்டிப்பாயிராமல், எகதேசம் வெளிப்போ, நீக்கலோ, துளையோ கொண்டதாயிருப்பின் அதற்குப் "பொய்யுள்ளது" என்ற குறிப்புச் சிறப்பியல்பு சுட்டி எழுவதாகும். பொய்யுள்ள சிறப்பியல்பை நோக்கிப் பொளி, பொய்கை, பொக்கை, பொக்கணை, பொந்து ஆதிய வேறு வேறு பொருள்கள் பெயர் அடைந்தன. அப்பால் எண்ணங்களின் நிரையில் பொருத்தமும் அதனாற் பெறப்படும் உறுதிப்பாடு மில்லாமல் ஓட்டையோ, நீக்கலோ கொண்ட கூற்றுக்கும் அப் "பொய்" ச் சொல் பெயராயிற்று. பொருத்தமில்லாமல் நிற்பதே பொய் என்பது "பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும்" என்ற பழமொழியிலும் தோற்றுவதைக் காண்க. ஆங்கிலத்தில்

(Your statement cannot hold water) "உண் கூற்றுத் தண்ணீர் கொள்ளாதது" என்று சொல்லுவது இல்லிக் குடத்தின் ஒப்புமையை நோக்கியாம். நீ சொல்லுவது தண்ணீர் இல்லாத ஓட்டைக்குடம் போலாம் என்றபடி. இவ்வாறு, அசத்தியம் எனும் அர்த்தத்தில், "பொய்" என்பது, முழுதும் பொருந்தி உறுதியாய் நிலை பெருமல் நீக்கல் அல்லது ஓட்டை கொண்டது என்று பொருள்படுவதை நுனித்துக்காண்க.

இதற்கு மாருக, "மெய்" எனும் சொல் நன்ருய்ப பொருந்தி நிற்றலைக் குறிக்கும். முன் காட்டிய மொழி நூல் வல்லுநர் முடிபின்படி, சடப்பொருளான உடம்பு அல்லது உடலையே "மெய்" எனும் பெயரீடு முதலிற் குறித்ததாக வேண்டும். அப்பால், எண்ணங்களின் நிரையிலுள்ள சத்தியம் எனும் அர்த்தம் அதற்குச் சார்புபற்றி வந்ததாக வேண்டும். உடக்குதல்=பொருந்துதல். உடம்பு=பொருந்தி நிற்பது. உடலும் அது. இனி, "மெய்" எனும் சொல் ஒன்ருய் "உடக்கிய" உடலுக்கு எவ்வாறு பெயராயிற்று? இவ்வினவுக்கு விடை சொல்லுமுன், "மெய்" என்னும் அச்சொல்லின் வரலாற்றை எடுத்தோதுதல் வேண்டப்படும்.

சொற்பிறப்பு நூலின்படி, தமிழிற் பலசொற்களுக்கு ஸ்வர பேதம் உண்டு. தொல்காப்பியர் தம் காலத்துக் கவனத்திற்கு உரியனவாய் நின்ற சில பேதங்களைக் குறிப்பிட்டிருக்கின்ருர். (எழுத்ததிகாரம், 141, 184 உரை). வீரசோழியம் சந்திப்படலம் 4 ஐயும் காண்க. இவற்றைத் தவிரப் பலவினைச் சொற்களின் அடியைத் தொடர்ந்து வருகின்ற ஒற்று இரட்டலும் இரட்டலுற்றலும் அச்சொற்களின் ஸ்வரபேதத்தாலேயே என இன்றைக்கு ஆராய்ந்து அறியப்பட்டிருக்கிறது. உதாரணம், அரிதல், அரித்தல். இவற்றுள் முன்னதில் ஆகாரம் எடுத்தும் பின்னதில் இகரம் படுத்தும் உச்சரிக்கப்படும். ஒருகால் ஒற்றுக்களை இரட்டியாது எழுதி ஸ்வரபேதம் ஒன்ருலேயே அர்த்த வேறுபாடு விளக்கப்பட்டது எனத் தோன்றும் (தமிழ் அமைப்புற்ற வரலாறு பக். 27 காண்க). இனி, படுத்து உச்சரிக்கப்படும் ஓர் அடிச் சொல்லின் தலையுயிர் கெட்டு வருதல் சிறு பான்மை தமிழில் உண்டு. வடமொழியில் பெரும்பான்மை டகர ரகர லகரங்களோடு தொடங்கும் சொற்கள், தமிழில் உயிரோடு தொடங்கி அவ்வுயிருக்குப் பின்வந்த உயிர்மெய்யில் படுத்த லோசை கொண்டிருந்தனவாம். உதாரணம், தமிழ் இடங்காரம், வடமொழியில் டமருகம்; இதில், தலை இகரம் கெட்டது. தமிழ் இறங்கு (தல்), வடமொழி (ஒஜீ) செல்லுதல்; இதிலும், தலை இகரம் கெட்டது. தமிழ்அறு(த்தல்). வடமொழி (லூ), வெட்டுதல் தறித்தல். இதில் அகரங் கெட்டது.

இவ்விதியின்படியே அமை(த்தல்) எனும் தமிழ் சொல்லில் ஈற்றுயிர் மெய் படுத்தலோசை கொண்டதாகவே தலையுயிர் கெட்டு "மை" என நின்று பின் "மெய்" ஆகி, அமைத்தது எனும் பொருள் கொண்டது எனத் தோன்றும். "அமை" எனும் சொல்லின் தலையுயிர் கெட்ட வளவில் எஞ்சிய பாகம் "மை" என்ற மட்டில் நில்லாது, "மெய்" என வருவது எங்ஙனமெனில், ஒரு சொல்லில் கெட்ட உயிருக்கு ஈடாக அதன் எஞ்சிய பாகத்து உயிர் நீளுதல் ஒலித்திரிபு விதிகளால் வேண்டப்படும். இங்ஙனமே இடைகழி (இடைக்கட்டு, வாயில்), எனும் தமிழ்ச் சொல் வடமொழியில் தலையுயிர் கெட்டு வந்தவிடத்து (ஹெயீ) என நிற்பது காண்க. உள்ளபடி "அமை"ச் சொல்லின் தலை யுயிர் கெட்டவுருவம் "மே" என நிற்றலே தகுதி. ஆயின், சொல்லுதற் கெளிதாகும் பொருட்டு "மே" என்பது "மெய்" என வந்தது போலும், பரவை வழக்கில் உடம்பைக் குறிக்கும் "மேல்" என்னுஞ் சொல் "மெய்" என்ற ஒரு ஆதியுருவத்தின் யகரம் லகரமாய் மாறிய திரிபாயும் இருக்கலாம். "மேல்" எனும் நாடோடிச் சொல் இலக்கியங்களில் "மேனி" என வரும். இச் சொல்லில் லகரம் தனக்கினமான ணகரமாகி இகரக்கடைநிலை பெற்றதுபோலும். ஆதலால் "மேய்" என நின்றது தான் "மெய்" என வந்திட்டது. என நாம் கொள்ளினும் கொள்ளலாம். இவ்வாற்ருலும் "மெய்" எனும் உருவத்துக்கு "அமை" என்பதே அடியெனல் உறுதி.

அமைத்தது நன்ருய்ப் பொருத்தியது எனும் அர்த்தமுள்ள "மெய்" எனுஞ் சொல் உடம்புக்கு எத்துணை ஏற்புடையது என்பதை அவ்வுடம்பு எனும் சொல்லே போல அதற்குப் பரியாயமான வேறு சொற்களும் காட்டுகின்றன. இவற்றுள் "யாக்கை" என்பது "யா" எனும் அடியாயுள்ளது. "யா" எனும் அடியோ இயை-த்தல் எனும் சொல்லின் விகாரமாம். இங்கும் தலை யுயிர் கெட்டு அக்கேட்டிற்கு ஈடாக "யை" யானது "யா" என வந்ததைக் குறித்துக்கொள்க. இயைத்தது (நன்ருய்ப் பொருந்தியது) "யாக்கை" யானது போலவே, அமைத்தது (நன்ருய்ப் பொருந்தியது) "மெய்" யாயிற்று எனக் கண்டு இன்புறுக. உடம்பின் மற்ருெரு நாமம் "புணர்வு." புணர்தல் எனும் சொல் பொல்லுதல் பொருத்துதல் எனும் சொற்களோடு அடி யொற்றுமை கொண்டிருத்தலால் "புணர்வு" என்பது பொருத்தியது. இயைத்தது, அமைத்தது, என அர்த்தம்கொண்டு "மெய்" எனும் சொல்லோடு ஒற்றுமை பூண்டிருத்தலைக் காண்க. உடம்புக்கு வேருெரு பரியாயம் "பூட்சி". இது புணர்வோடு ஒற்றுமை கொண்டிருத்தல் பார்த்தவுடன் தெற்றெனத் தெளிவாகும். "புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய்" என்ற தேவாரச் சொற்ருெடரில் "புணர்த்ததே" (நன்ருய்ப் பொருத்தியதே). "பூட்சி" என்று தொனித்தல் காண்க. இங்ஙனம் யாக்கை ஆதிய சொற்களையொத்த அடிப்பொருள் கொண்டதே "மெய்" எனுஞ் சொல். ஆதலால் உடம்பு எனும் அர்த்தந்தான் அதற்கு ஆதியர்த்தமாதல் வேண்டும் என்பது மீண்டும் ஒருகால் வலியுறுத்தப்படும்.

இனி உடம்பு எனும் அர்த்தம் படைத்த "மெய்ச்" சொல்லிற்கு உண்மை எனும் அர்த்தம் முன் எடுத்துக் காட்டிய "சார்புபற்றி விரிதல்" எனும் பொருட்டிரிபு முறையாலே உண்டாயிற்று என்க. (1) நன்ருய்ப் பொருத்தியது மெய்=உடம்பு=யாக்கை=புணர்வு=பூட்சி. இதுதான் சிறப்பியல்பு சுட்டிய அர்த்தம். (2) உடம்பின் விசேடபாகமாய் ஒருசார் கருதப்பட்ட மார்பு. (3) உயிரெழுத்துக்கு உடம்புபோல நிற்கும் ஒற்றெழுத்து. (4) உடம்போடு சேர்ந்ததாகிய உணர்ச்சி. (5) உடம்போடு நெருங்கிய உறவு கொண்டதாகிய ஆன்மா, (6) உடம்பைப் போலும் பொருத்தமுள்ளதாகிய உண்மை என்று இப்படியே தமிழகராதி ஒழுங்குமாறிக் காட்டிய அர்த்தங்கள். ஒன்றையொன்று தொடர்ந்து விரியும்.

பொய் பொருத்தமற்றது, நீக்கல் உள்ளது, எனவும், மெய் பொருத்தமானது, நன்ருய் அமைக்கப்பட்டது எனவும் வரையறுத்த இவை இரண்டு அத்தியாத்தும பூர்வமான எண்ணங்களுக்கும் ஏற்ற சொற்களை அமைத்து வைத்த நம்முன்னேரது புத்தித் திறமையை எவ்வாறு புகழ்ந்து முடிப்போம்!

(செந்தமிழ்).

# ஆறுமுக நாவலர்

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

வேதாகமோக்த சைவசித்தாந்தப் பிரவர்த்தகரும், சிவாகம விற்பன்னரும், திருநெறித் தமிழாகிய தேவார திருவாசகங்களின் உண்மைப் பொருளுணர்த்தும் பொருளுணர்ந்தவரும், இலக்கண விலக்கியக் கடலை நிலைகண்டுணர்ந்தவரும் சிவனடி யாரைச் சிவனென மதிக்கும் மெய்யடியாரும், தமிழ்நாடெங்கும் நல்லறிவுச் சுடர் கொளுத்தி மெய்யறிவை ஊட்டிய சைவாசாரியாரும், நிருவாண தீக்ஷிதரும், நைட்டிகப் பிரமசரிய வொழுக்கத்திற் றவுருதவரும், சைவப் பிரசங்க மென்னும் விடாமழையைப் பொழியுந் திருவாயை யுடையவரும், காலந் தோறுஞ் சிவனடியாருக்குத் திருவமுது கொடுக்குஞ் சைவப்பிரபுவும், சிவஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல் என்னும் ஞானயாகஞ் செய்தவருமாகிய **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்** சித்திரபானு வருடம் மார்கழி மாதம் ஐந்தாம் திகதி புதன்கிழமை நல்லூரிலே கந்தப்பிள்ளைக்கு அருந்தவப் புதல்வராகப் பிறந்து, சீரிய வாழ்க்கை நடாத்தி, சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டாற்றி, “பிரமாதிவருஷம் கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி சுக்கிரவாரத் திரவு பத்து நாழிகையாகிய புண்ணிய காலத்திலே ஸ்ரீ சிதம்பரசபாநாயகருடைய குஞ்சித பாதத்தின் கீழ்ப் பிறந் திறவாப் பேரானந்தப் பெருவாழ்வாகிய பரிபூரண திசையையடைந்தனர். அவரது பிரிவால் தமிழ் நாடு தன் சிரமிழந்தது ; நாமகளும் தன் மாங்கிலியமிழந்தாள் ; யாழ்ப்பாணம் தன் அங்கமனைத்தினும் பங்கம் பெற்றது ; பொதியமலை சாய்ந்தது ; திராவிட சாகரம் வற்றியது ; வேதமாகிய போதனைசமுத்திரம் வறண்டது. கொடை மேகங்கள் யாவும் ஓட்டையெடுத்தன. ஸ்ரீ குமாரசுவாமி இறந்ததால் தமிழ் நாடு தன் கரமிழந்தது; ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் இறக்கத் தமிழ்நாடு தன் சிரமிழந்தது” இவ்வாறு **இலங்கை நேசன்** என்னும் பத்திரிகைஅக்காலத்திற் பிரலாபித்தது என வெள்ளவத்தை **மு. இராமலிங்கம்** அவர்கள் தாம் **நாவலர் நினைவு மலரு**க்கெழுதிய “**நாவலர் இறந்தபின் நடந்தவை**” என்ற கட்டுரையிற் காட்டியுள்ளார்.

நாவலர் பெருமான் தோன்றி நூற்றாண்டு நிறைவுற்றதெனினும், அப்பெருந்தகையின் நூல்களும் ஆங்காங்குஎழுதிய கட்டுரைகளும் இன்னும் வெளிவராதிருக்கின்றன. நாவலர் அவர்களின் வரலாற்றை எழுதற்கியைந்த ஆற்றலும் பண்பும் உரிமையுமுடையவர் **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** அவர்களாவர். நாவலர் நெறி நின்றொழுகும் பண்டிதமணி அவர்கள் அண்மையில் எழுதிய கட்டுரையொன்றினை ஈண்டுப் பிரசுரிக்கின்றோம். (ப—ர்)

**1.** (அ) சித்தார்த்தரான கௌதமர் பிம்பிசார மன்னனின் வேள்விச் சாலையுட் பிரவேசிக்கின்றார். ஒரு தீக்ஷிதர் நீண்டதொரு கத்தியைக் கூர்செய்து, யாழ்த்தந்தியை வருடுவது போல், அக்கத்தியின் கூரை விரலால் வருடிக் கூர்பார்க்கின்றார். மரணசாதனம் செய்யப்பட்ட ஆட்டு மந்தைகள் சாலையை நோக்கி வருகின்றன. வேதங்கள் கோஷிக்கின்றன. வேள்வித்தீ எழு நாவையும் ஆகாயத்தை அளாவ நீட்டுகின்றது. கௌதமரைக் கண்டதும் காந்தத்தைக் கண்ட இரும்புபோலே பிம்பிசாரன் எழுந்து நிற்கின்றான். “கொலையும் புலையுந்தவிர்க” என்று கௌதமர் உபதேசிக்கின்றார்.

தலையாய தீக்ஷிதர் ஒருவர் வேதவாக்குக்களை எடுத்துக் காட்டி, “ஓ கௌதம! இந்த ஆடுகள் சுவர்க்கத்தை அடையும். அவைகளை ஆங்கு அடைவிக்கும் புண்ணிய விசேஷத்தால், மன்னனுக்குங் குடிகளுக்கும் க்ஷேமம் உண்டாகும். வேதத்தை நிந்திக்காதே” என்று ஆக்ஷேபிக்கின்றார்.

கௌதமர் நம்பவில்லை. பிம்பிசாரன் கௌதமர் பக்கந் திரும்பினான். வேள்வி தடுக்கப்பட்டது.

(ஆ) 1867 ம் ஆண்டிலே புண்ணியஸ்தலமாகிய சிதம்பரத்திலே, தில்லைவாழந்தணர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளுகிற தீக்ஷிதர்கள் ஆடுகள் வெட்டி ஒரு வேள்வி செய்ய முயன்றார்கள். நாவலர் அவர்கள் தமது வித்தியாசாலையில் ஒரு மகாநாடு கூட்டித், தீக்ஷிதர்களின் வேள்வி முயற்சி அடாது என்று தடுத்தார்கள். தீக்ஷிதர்கள் வேத வாக்குக்களை எடுத்துக் காட்டி வாதித்தார்கள்.

நாவலர் அவர்கள்,

“ஆம் வேதத்தில் வேள்வி விதிக்கப்பட்டது. இதிற் கொல்லப்படும் உயிர்களுக்கு மேற்கதி சித்திக்கும். அதனால் வேள்வி செய்தோருக்கும் உலகுக்கும் நன்மை விளையும். வேத வேள்வி மேம்பட்டது என்பதிற் சந்தேகமேயில்லை. வேத வாக்குக்கள் பொய்யாதனவைகள். அப்படிப்பட்ட பரிசுத்த வேள்வியைச் செய்தற்கு நீங்கள் யார்? “மந்திர விதியின் மரபுளிவழா அந்தணர் வேள்வி ஓர்க்குமமே ஒருமுகம்” என்பது திருமுருகாற்றுப்படை. வேள்வி, வேதந் தெரிந்த அந்தணர் செய்வது. “புன்மையாம் பசுத்தடிந்து புரையில் வேள்வி ஆற்றித், தொன்மைபோல் எழுப்புமாறு”ம் அவர்கள் வல்லவர்கள்.

வேள்வியை விதித்த வேதம், உங்கள் போன்றவர்கள் வேள்வி செய்யலாமென்று விதிக்கவில்லை ; தடுக்கின்றது. பதிதர்களான நீங்கள் செய்யும் வேள்வி உயிர்க்கொலையாய், உலகுக்குக் கேடாகும்” என்று போதித்துத் தீக்ஷிதர்களின் வேள்வி முயற்சியைத் தடுத்தார்கள். உலகுக் கஞ்சித் தீக்ஷிதர்கள் ஆத்திரத்துடன் அம் முயற்சியைக் கைவிட்டார்கள். நாவலர் அவர்கள் வேதத்தையோ, வேத வேள்வியையோ, அது செய்தற்கு அதிகாரம் படைத்த அந்தணர்களையோ நிந்திக்கவில்லை. அதீக்ஷிதர்களை நிந்தித்தார். அவர்கள் கையால் விபூதி வாங்க மறுத்தார்.

2. (அ) 1868 ம் ஆண்டு ஆனி உத்தர தரிசன தினத்திலே சிதம்பரத்திலே ஆயிரக்கால் மண்டபத்திலே ஒரு மகா கூட்டம். தமிழைச் சூத்திர பாஷை என்று எண்ணுபவர்களும், தமிழ் செய்த சம்பந்தராகிய சைவநாயன்மார்களையும் அவர்கள் அருளிய திருமுறைகளையும் பூசிக்கக் கூசுபவர்களும், சிவதீக்ஷை இல்லாத போதும் தீக்ஷிதர்கள் என்று வழங்கப்படுபவர்களுமான தில்லை வாழ் பிராமணர்களால் அந்த மகா கூட்டம் கூட்டப்பட்டது.

புதிய திருமுறைகள் செய்த இராமலிங்க சாமியாரையும் அவர் சீடரையும் பிராமணர்கள் வரவேற்று மகிழ்ந்தார்கள்.

இராமலிங்கரின் முதற்சீடர் வீராசாமி முதலியார். அவர் “வீராசாமி நற்றவக் கொழுந்து” என்று புதிய திருமுறையிலே புகழப்பட்டவர். நாவலரைக் கிறிஸ்தவர் என்று இகழ்ந்து பன்னிரண்டு திவ்யப் பிரபந்தம் அருளியவர். அம்மட்டோ! சி. வை. தாமோதரம்பிள்ளையைக் கண்டபடி தூற்றியவர்.

அந்த மகாநுபாவர். உள்ளிட்ட பலர் அந்த மகாநாட்டில் நாவலரை வாயில் வந்தபடி தூஷித்தார்கள்; அடிக்க வேண்டும் என்றும் ஆர்ப்பரித்தார்கள். இராமலிங்கர் "நாவலர்" என்ற வார்த்தையை எடுத்துக்கொண்டு, நாவால் அவர் தூற்றுபவர் என்று அர்த்தம் விரித்து, இன்னும் பலவேறு கருத்துக்களுங் கூறினார். அப்பொழுது காசி வாசி ஈசான சிவாச்சாரிய சுவாமிகளின் பாட்டனார் எழுந்து, இராமலிங்கரை நோக்கித், தாங்கள் விரிக்குங் கருத்திலே தானே, "நாவலர்" என்ற பட்டத்தைத் திருவாவடுதுறை யாதீனம் வழங்கியது என்று ஒரு கேள்வி கேட்டார்; அவ்வளவில் இராமலிங்கர் பேச்சு நின்றது.

அடுத்தநாளே நாவலர் அவர்கள் மஞ்சக்குப்பக் கோட்டிலே ஒரு மானநட்ட வழக்கு இராமலிங்கர்மீது தொடுத்தார்கள். அப்பால் நடந்ததை நாவலர் அவர்கள் வாக்காலேயே அறியுங்கள்.

"சுக்கில ௵ ஆனி உத்தர தரிசன தினத்திலே சிதம்பரத்துப் பேரம்பலத்திலே, வெகு சனக்கூட்டத்திலே, சைவப்பிரசாரகரை அவதூறாகப் பேசிய இராமலிங்கபிள்ளை, அடுத்த மார்கழித் திருவாதிரைத் தரிசன தினத்திலே, மஞ்சக்குப்பக் கோட்டிலே, வெகுசனக் கூட்டத்திலே, நியாயாதிபதி எதிரே தாஞ் சைவப் பிரசாரகரை அவதூறாக ஒரு சிறிதும் பேசவில்லையென்று மறுத்து, எல்லாராலும் நகைக்கப்பட்டது அவ்வழக்குப் புத்தகம் பேசும்".

இது நாவலர் அவர்கள் எழுத்து.

இராமலிங்கர் அழிவழக்குச் செய்ததும், நாவலர் அவர்கள் இனி அவர்மேல் தமக்கு வழக்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். இராமலிங்கரை அளந்துவிட்டார்கள்.

"விழித்த கண் வேல்கொண் டெறிய
அழித்திமைப்பின் ஓட்டன்றோ வன்க ணவர்க்கு".

அஞ்சி இமைக்கிறவர்களோடு கூட மகாவீரர்கள் யுத்தந் தொடுப்பதில்லை. தொடுப்பது வடு. சொன்னதைச் சொல்லவில்லை என்பவர்களுக்குத் தெய்வம் எது!

(ஆ) ஒரு முறை சிவகாமி அம்மையாரின் சொத்தை அபகரித்து அநுபவிக்கும் ஒரு தனவந்தரை, நாவலர் அவர்கள் தம் முன்னிலைக்கு வரக்கூடாதென்று ஏசி விட்டார்கள். அந்தத் தனவந்தர் வழக்குத் தொடர்ந்தார். நீதிபதி நாவலர் அவர்கள் ஏசியிருக்க மாட்டார்கள் என்ற கருத்தில் வழக்காளியைக் கேள்வி கேட்டார். உடனே நாவலர் அவர்கள் கோபங்கொண்டு, தாம் அவரை ஏசியது உண்மையென்றும், இப்பொழுதுஞ் சிவ சொத்தை அபகரிக்கும் அவரைத் தாம் ஏசுவார் என்றும் உரத்த குரலிற் கூறி, எழு ரூபா குற்றங் கொடுத்தார்கள்.

**3.** "சனங்கள் கோயிலுக்கு வெளியே பொங்கிப் படைத்தலினாலே தமக்கு அல்லது தம்முடைய சுற்றத்தாருக்கு அரிசி வரவு குறைகிறதென்று மானிப்பாய் "ஒரு சைவன்" என்பவர் பதைக்கிறார் போலும்! பண்டாரங்கள், சனங்களுடைய அரிசியை வாங்கி நிவேதனத்துக்கும் அச்சனங்களுடைய பசிக்கும் உபயோகப்படுத்தாது வீடு சேர்ப்பது சிவாகம சம்மதமோ! சனங்கள், சுவாமி சந்நிதானத்திலே தாங்களே சுசியோடு பொங்கி, மந்திரத் தோடாவது மந்திரமில்லாமல் "பிள்ளையாரே இதை ஏற்றுக்கொள்ளும்" என்றாவது, தாங்களே பத்தியோடு நிவேதித்துத், தாங்களுந் தங்கள் குழந்தைகளும் புசித்துப் பசித்துவந்த பிறருக்குங்கொடுத்து வீடு சேர்வது சிவாகம சம்மதமோ! சிவாகமம் வல்லவர்கள் வாய்திறக்கட்டும்! கோயிலிலே சுவாமியைத் தீண்டிப் பூசைசெய்ய உரிமையில்லாத சாதியார்கள், சுவாமி சந்நிதானத்திலே தங்கள் தங்களுக்கு விதித்த இடங்களிலே பாவனையாக அருச்சனைசெய்து நிவேதிக்கலாமென்பது சிவாகம விதி. அதிபாதகமாகிய தேவத் திரவியாபகார முதலிய பல பாதகமுஞ் செய்கிற போலிச்சைவர்கள், அதிபாதகத்திற் ருழ்ந்த அதிபாதக துல்லியத்திற்ருழ்ந்த மகாபாதகத்திற்ருழ்ந்த மகாபாதக துல்லியத்திற்ருழ்ந்த உபபாதகத்திற்ருழ்ந்த உபபாதக துல்லியத்துள் ஒன்ருகிய புலாலுண்டல் செய்யுஞ் சூத்திரரில் உயர்ந்தவர்களாமோ! கெட்டி! கெட்டி!

"ஓகோ! இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள கிறீஸ்து சமய குருமார் சைவ சமய குருமார் என்னும் இரு சமய குருமாருடைய கருத்தும் தத்தஞ் சமய பத்தியை வளர்த்தலினிடத்தன்று, தத்தம் வயிறு வளர்த்தலினிடத்ததே யாம்".

இவை நாவலர் அவர்கள் கூற்றுக்கள். நாவலர் அவர்கள் மானிப்பாய் தொடக்கம் சிதம்பரம் பரியந்தம் சுவாமியைப் பூசிப்பவர்களைக் காணவில்லை.

நாம் தமிழிலே பூசிப்பதா இங்கிலீசிலே பூசிப்பதா என்று விவாதிக்கின்ருேம்.

நோய்வாய்ப்பட்டிருக்கிறவன் எவ்வித மருந்தும் பெற முடியவில்லை. ஆனல் அவன் சுற்றத்தார்கள் தமிழ் வைத்தியமா இங்கிலீஷ் வைத்தியமா சிறந்தது என்று தருக்கிக்கின்ருர்கள். எப்படியிருக்கிறது தருக்கம்!

ஆரியர் தமிழர் என்ற வார்த்தைகள் சாதிகுறித்தவைகள் அல்லவென்ற உண்மை இப்பொழுது வெளிவருகின்றது. நாவலர் அவர்களுக்கு ஆரியம் தமிழ் இரு கண்கள், நமது பாஷையில் நாம் பூசிக்கவேண்டுமானல், ஆரியம் ஆருடைய பாஷை!

4. "சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்தினுஞ் சாதி அதிகமெனக்கொள்வது சுருதி யுத்தி அநுபவ மூன்றுக்கும் முழுமையும் விரோதம். உலகத்துச் சாதி பேதம்போலச் சற்சமயமாகிய சைவ சமயத்தினும் முதற் சாதி இரண்டாஞ்சாதி மூன்ருஞ்சாதி நாலாஞ்சாதி நீசச்சாதியெனச் சமய நடைபற்றி ஐந்து சாதி கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்கு பாத முறைப்படி வழுவற நடந்து சிவானந்தப் பெரும் பேறுபெற்ற சீவன்முத்தர் சிவமேயாவர். இனிச் சிவஞானிகள் முதற்சாதி; சிவயோகிகள் இரண்டாஞ்சாதி; சிவக்கிரியாவான்கள் மூன்ருஞ்சாதி; சிவசரியாவான்கள் நாலாஞ் சாதி; இந் இந்நெறிகளில் வாராதவர்களும், இவர்களையும் இவர்கள் சாத்திர முதலியவற்றையும் நிந்திப்பவர்களும், இந்நெறிகளிலே முறை பிறழ்ந்து நடக்கின்றவர்களும், இந்த நடைகளைவிட்ட பதிதர்களும், சதாசூதகிகளாகிய பஞ்சமசாதி. சிவசரியை கிரியை முதலியவைகளினலே பொருள் தேடி உடம்பை வளர்ப்பவர்களும், அப்பொருளைப் பாசத்தாருக்குக் கொடுத்து இன்புறுவோர்களும், கோயிலதிகாரிகளாய்த் தேவத் திரவியத்தைப் புசிப்பவர்களும், விருத்திப் பொருட்டு ஆசாரியாபிஷேக முதலியன செய்துடையோர்களும், விருத்திப் பொருட்டுச் சிவவேடந்தரித்தவர்களும், விருத்திப் பொருட்டுத் துறவறம்பூண்டோர்களும் சிவஞான நூல்களைச் சொல்லிப் பொருள் வாங்கி வயிறு வளர்ப்பவர்களும், பிறரும் பதிதர்களுள் அடங்குவார்கள்.

இங்கே சொல்லிய முறையன்றி, சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளிய குருலிங்க சங்கம மென்னும் மூன்றினிடத்தும், ஆசையும், பணியும், வழிபாடும், கொடையும், அடிமைத்திறமும் உரிமையுமுடையவர்கள் எந்தக் கருமஞ் செய்தாலும் முதற்சாதியெனக் கொள்ளப்படுவார்கள். அத்துவ சுத்தி செய்யப்பட்டுச் சிவஞான நூல்களாகிய சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஓதி அவைகளின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து உயிரிலே சிவாசன மூர்த்தி முதலியன நியசித்து அபிடேகம் பண்ணப்பட்டவரே சற்குரு. தேகாதிப் பிரபஞ்சத்தை விடுத்துச் சிவசம்பந்த முற்றவரே சங்கமம். சிவஞானிகள் பாவனையுற்றதே சிவலிங்கம்.

யாவரும் தமக்கு மேன்மேற் சமயிகளைத் தரிசித்து வணங்கிப் பணி செய்தலும், கீழ்க் கீழ்ச் சமயிகளை நோக்கி இவர்கள் இவ்வளவில் வந்தார்களே என்று இரங்கி விதித்தன சொல்லி விலக்கியன ஒழிவித்தலுமே நீதி. இப்படி யன்றி ஒருவருக்கொருவர் கலாம் விளைத்தல் நீதி கேடு",

என்கின்றார் நாவலர் அவர்கள்.

நமது சமயம் வைதிக சைவம். வைதிகம் வேத நெறி. சைவம் சிவநெறி. அஃதாவது அருள்நெறி. வேத நெறியின் வழிவருவது சைவநெறி.

வேதநெறி உலகநெறி, சைவநெறி சத்திநிபாதநெறி. சத்தினி பாதர்கள் சாதியாற் பாதிக்கப்படாதவர்கள். ஒரு சூத்திரன் சத்திநிபாதன் ஆனால், அவனிடம் ஒரு பிராமணன் பாடங் கேட்கலாம்.

சத்திநிபாதன் அல்லாத ஒரு சூத்திரனிடம் பிராமணன் பாடங் கேட்கக் கூடாது ; அந்தச் சூத்திரனிடம் சூத்திரப் புத்தியிருக்கும். அது பிராமணனைப் பாதிக்கும்.

நமக்குப் பிறவியிலே சாதிப் புத்தி இருக்கிறது. சிலரை நம்மிற் குறைந்தவர்களென்று இகழுகிறோம் ; சிலரை நம்மில் உயர்ந்தவர்கள் என்று எரிச்சற் படுகிறோம். இந்தப் புத்தி போக வேண்டும். போகாதவரை சாவதானமாயிருக்க வேண்டும். எப்படியிருக்க வேண்டுமென்பதை வைதிகங் காட்டும். வைதிக கர்மங்கள் சாதியாற் சம்பவிக்கும் உபாதிகளைப் போக்கிவிடும். உபாதிகள் போனதன்மேல் வைதிகன் சைவன் ஆகின்றான். அஃதாவது சத்திநிபாதன் ஆகின்றான். அவனுக்குச் சாதியில்லை. அவன் இனிச் சமயச் சாதிமான். சரியைச்சாதி, கிரியைச்சாதி. யோகச்சாதி, ஞானச்சாதி என்று சமயச்சாதி வகுக்கப்படும்.

சைவனல்லாதவன்—உலக நடைப்பட்டவன். சாதியைத் தள்ளுவது, கசம்பிடித்தவன் தனக்கு அந்த நோயில்லை என்பதை ஒக்கும்.

5. (அ) இப்பொழுது வேதாகமங்களைத் தமக்குப் பிரமாணங்கள் என்று எவர்கள் சொல்லுகின்றார்களோ அவர்களை வேதாகமங்கள் அங்கீகரிப்பதில்லை. அவர்கள் அகம் புற ஒழுங்கங்களிற் றவறியவர்கள் ; அவர்களுக்கு ஆலயங்களில் இடமில்லை. புறச்சமயத்தவர்களை ஆலயங்களுள் வரவேற்கின்றார்கள் அவர்கள்.

(ஆ) சிவனை வழிபடுகின்றவர்களும், விபூதி தரிப்பவர்களும் ஒழுக்கம் உள்ளவர்களுமான பஞ்சமர்கள், ஒழுக்கங்கெட்ட பிராமணர்களிலும், புறச் சமயத்தவர்களிலும் மேலானவர்கள் என்பது நாவலர் அவர்களுக்கும் சாத்திரங்களுக்கும் ஒத்த கருத்து.

(இ) "சிவன் எனும் மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடின் அவனுடன் உறைக
அவனுடன் கலந்து பேசுக வவனோ டருகிருந்
துண்ணுக என்னும்
உவமையில் சுருதிப் பொருடனை நம்பா
ஊமரோ டுடன்பயில் கொடியோன்
இவன்எனக் கழித்தால் ஐயனே கதிவே
றெனக்கிலை கலைசையாண்ட கையே",

இப்பாடல் சிவஞானபோதபாடியம் அருளிய சிவஞான சுவாமிகள் பாடியது.

(ஈ) ஆலயங்கள் புனிதத் தானங்கள். யார் யார் எந்தெந்தத் தானத்தில் நின்று இறைவனை வழிபட்டுப் புனிதமடைய வேண்டுமென்பதனை வேதாகமங்கள் எடுத்துச் சொல்லும். அவைகள் எடுத்தோதும் மேன்மைகொள் சைவநீதியைப் பொருள் செய்யாமல், தத்தங்கருத்துக்களை வேதாகமங்களிற் கட்டி நடத்த முயல்வது எத்துணைப் பெருந்துரோகம் !

பஞ்சமர்களில் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள், ஒழுக்கங்கெட்டவர்கள் சஞ்சரிக்கும் இடங்களை அணுக, அவர்களைத் தீண்ட முயல்வதன் கருத்தென்னையோ !

6. (அ) "நல்லது. சனங்களுடைய நன்மையின் பொருட்டுக் கவர்ணருக்கு விண்ணப்பங் கொடுத்து உதயதாரகையினாலே தூஷிக்கப்பட்ட பிரபுக்கள் எவரெவர் ? அவரவருடைய இயற்கை எப்படிப்பட்டது ?"

பெஞ்சமீன் சந்தியாகுப் பிள்ளை இவர் டிஸ்திறிக் கோட்டுப் பிறக்கிராசி ; கொழும்பு அக்கடமியிலே படித்துத் தெளிந்தவர் ; பரம்பரைச் செல்வர் ; வெகு சுற்றத் தொடர்புடையவர் ; கரையூர் மணியகாரருடைய குமாரர். கச்சேரி இயண்டார் முதலியாராயிருந்த பெருஞ் செல்வராகிய ஆசீர்வாத முதலியாருடைய மருமகன் ; தமிழிலே இலக்கியம் இலக்கணம் வைத்தியம் யந்திர சாத்திரம் மந்திர சாத்திரம் முதலிய பலவும் படித்தறிந்து மிக மரியாதைபெற்று வாழ்ந்த கதிர்காமப் புலவருடைய வமிசத்தவர் ; கரையூர்க் கலக வழக்கிலே அநீதியாகத் துன்பம் அநுபவித்த ஏழைகள் பக்கம் நின்று அதிதைரியத்தோடு வாதித்த மகா தயாளு".

2. இனி மற்றொருவருடைய கேள்வியொன்றுண்டு. அதற்குத் துவைனந்துரையும் கமிஷனர்களும் யாது செய்வார்கள் ! கேள்வி யாருடைய கேள்வியோ ! யாழ்ப்பாணக் கத்தோலிக்க பாதுகாவலனுடைய கேள்வி. அந்தக் கேள்வி என்னையோ ! தமக்குக் கொடுக்கப்பட்ட துவிபாஷகர் சனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரர் அல்லர் என்பதை நன்றாக அறிந்த கமிஷனர்மார் தம்முடைய றிப்போட்டில் அதனைக் குறித்துப் பேசாது விட்டதேனோ ? என்றதுதான் அந்தக் கேள்வி. அடடா ! இந்தக் கேள்வி கோடி பொன் பெறுமே !"

இவை நாவலர் அவர்கள் எழுத்து.

(ஆ) குணநாடிக் குற்றமும் நாடி நடுநிலை பேசும் நாவலர் அவர்கள்,

இன்றைய பாரதத்தில் பொது நன்மைக்கே தம்மை அர்ப்பணம் செய்தவர்கள்பற்றியும், சமயப் போர்வையினுள்ளே இஷ்ட போகங்களில் ஈடுபட்டு வாழ்பவர்கள்பற்றியும் என்ன சொல்வார்களோ !

"அடிமையானவன், தன்னிடத்தே தன்னாயகன் ஒப்பித்த பொருளை, அவன் கருத்தறிந்து, அக்கருத்தின்படியே, செலவு செய்தல் வேண்டுமன்றோ...அந்நாயகன் கருத்துக்கு மாறாகச் சேமித்து வைத்துக்கொண்டாலும், தன்னிச்சைப்படி செலவு செய்து அழித்தாலும், அவனாலே தண்டிக்கப்படுவானன்றோ. ஆன்மாக்களெல்லாம் சகலலோக நாயகராகிய கடவுளுக்கு மீளா வடிமைகள். தமக்குத் திருத்தொண்டுசெய்து பிழைக்கும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இவ்வருமையாகிய மனித சரீரத்தைக் கொடுத்தருளினவர் அக்கடவுளே. மனிதர்களிடத்துள்ள பொருளெல்லாம் அவர் கொடுத்தருளிய பொருளே. பொருள் கொடுத்தருளிய கடவுளுடைய திருவுள்ளக் கருத்து யாது ?.... ....................கடவுளுடைய திருவுள்ளக் கருத்துக்கு மாறாக வீண்செலவு செய்வோரும் உலோபத்தினாலே சேமித்து வைப்போரும், அக்கடவுளாலே தண்டிக்கப்படுவர்",

என்பது நாவலர் அவர்கள் நான்காம் பாலபாடம். "தருமம் என்றொரு பொருள் உளது" என்று மனிதர்களை எச்சரிக்கை செய்கின்றது கந்தபுராணம்.

இனி இவ்வளவும் அமையும். சிந்தித்துச் செப்புங்கள் ; காமஞ் செப்பாது கண்டது மொழியுங்கள்.

இனியும் இங்கே நாவலர் அவர்களுக்கு இடமுண்டா ?

# மகாத்மா

**ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் எழுதியது**

" மகாத்மா " என்ற பதம் அதிகமான துஷ்பிரயோகத்திற் காளாகியிருக்கிறது. ஆனால் இந்தப் பதத்திற்குச் சரியான, ஆழ்ந்த பொருள் உண்டு; இதற்குப் பூர்விக சரித்திரமும் உண்டு. இந்திய மனோதத்துவ சாஸ்திரத்தில் உபயோகிக்கப் பெறும் சில பரிபாஷைகளைப்போல் இந்த மகாத்மா என்கிற பதமும் ஏதோ கூடார்த்தமாகத்தான் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்குக் காரணம், தத்துவ சாஸ்திரத்தைப்பற்றிப் பரம்பரையாக வந்துகொண்டிருக்கும் எண்ணங்களைப்பற்றியும் கிறிஸ்தவ மத சம்பிரதாயங்களைப் பற்றியும் நமக்கேற்பட்டுள்ள அறியாமைதான். இந்த அறியாமையினால் தான் ஆத்மா வேறே, கடவுள் சக்தி வேறேயென்றும், சத்தான வாழ்க்கை வேறே, சாதாரண வாழ்க்கை வேறேயென்றும் பாகுபடுத்திக் கொள்ள முடியாதவர்களாயிருக்கிறோம். மற்றும், மனிதன் ஒவ்வொருவனிடத்திலும் வீற்றிருக்கிற புருஷ சக்தி இருக்கிறதே அதனைத் தவருக உணர்ந்து கொண்டுவிடுகிறோம். ஒரு மனிதனிடத்தில் அந்தச் சக்தியின் மூலமாக வெளியாகும் திறமைகளைப் பார்த்து, அவனைத் தெய்வ அவதார மென்று அழைக்கத் தொடங்குகிறோம். தெய்வ சக்தி அவனிடத்தில் பிரகாசிக்கிறது என்று சொல்கிறோமில்லை. இப்படிப்பட்ட மனோபாவங்களை வைத்துக்கொண்டுதான், நாம் " **மகாத்மா** " அல்லது " **பெரிய ஆத்மா** " வென்று அழைக்கிறோம். " கடவுளோடு கலந்தவர் " அல்லது " அமானுஷ்யர் " என்ற அர்த்தத்தில் சொல்கிறோமில்லை.

புத்த மதக் கிரந்தங்களில் " மகாத்மா " வுக்கும் " அல்பாத்மா " வுக்குமுள்ள வித்தியாசங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் இந்த ஆத்மாக்கள் " **கல்யாண ஆத்மா** " (நல்ல ஆத்மா) வென்றும், " பாபாத்மா " வென்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த " அல்பாத்ம " வை " **அநாத்மா** " வென்று அழைப்பதுண்டு. இந்த " அல்பாத்மா " வைப்பற்றிச் சொல்கிறபோதுதான், இன்ன மனிதன் இன்னார் என்றும் சுட்டிக் காட்டிச் சொல்கிறோம். இந்த " அல்பாத்மா " தாழ்ந்த இச்சைகளையுடையது. துக்கம் நிறைந்தது; இதனை " அல்பதுக்க விஹாரி " என்று சொல்வார்கள். இஃது உருவம், மனோசக்தி, குணம், முன்னறிகிற சக்தி முதலியவற்றில் வளர்ச்சியடையாமல் இருக்கிறது. இதற்கு நோய், மரணம் முதலியன உண்டு. மற்றோர் ஆத்மாவாகிய " மகாத்மா " வோ, எல்லா வரம்புகளையும் கடந்தது. பூரண வளர்ச்சியும், சீலமும், சித்த சுத்தியும், வருங்கால மறியும் ஆற்றலும், கட்டுப்பாடற்ற தன்மையும் உடையவர்களே " மகாத்மா " க்கள். இதனை புத்த கிரந்தங்கள், " பாவிதகாயம், சீலம், சித்தம், பிரக்ஞை, அப்பரிக்த மகாத்மா, அப்ரமாண விஹாரி " என்று வருணிக்கின்றன.

" அல்பாத்மா "வுக்கும் " மகாத்மா " வுக்கு முள்ள வித்தியாசம் பதிக்கும் பசுவுக்குமுள்ள வித்தியாசம்போன்றது. இந்த வேறுபாடுகளைப்பற்றி சீனக் கிரந்தங்களும் கிறிஸ்தவக் கிரந்தங்களும் விவரித்துக் கூறுகின்றன.

" மகாத்மா " என்ற பதத்தில் " மகா " என்றால் பெரிய என்று அர்த்தம். ஆத்மா வென்பது மனிதனிடத்திலேயுள்ள புருஷசக்தியை அதாவது கடவுள் சக்தியைக் குறிப்பிடுகிறது. இது தான் உண்மையான மனிதன். இந்த மனிதனை அறியவே நம் முன்னோர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். " தத்வமசி " என்ற உபநிஷதவாக்கியம் இதனையே குறிப்பிடுகிறது.

" மகாத்மா " வென்று சொன்னால் அது சீவன் முக்தனையே குறிக்கிறது. " மகாத்மா " வென்ற பதத்தின் சரித்திரத்தைப் பற்றிச் சொல்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம். ஒரு மகான் என்ற அர்த்தத்திலேயே காந்தியடிகளை எல்லாரும் " **மகாத்மா** " வென்று அழைக்கிறார்கள். அவருடைய தன்னலமற்ற தன்மை முதலிய சுபாவங்களினால் அவருக்கு இந்தப் பெயர் ஒருவாறு பொருந்தலாம். ஆனால் எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கேனும் இந்த " **மகாத்மா** " பட்டத்தை வழங்கலாமா வென்பதைப் பற்றி நாம் இங்கு ஆராயவிரும்பவில்லை. ஏனென்றால் அஃது அப்படி வழங்குவது—அந்தத் தனிப்பட்ட நபருக்கும் கடவுளுக்கும் உள்ள ரகசிய விஷயமாகும்.

---

## வயாவிளான்—பலாலி நெசவு நிலையக் கட்டிடத் திறப்புவிழா

மாஜி செனட்டரும் பிரபல சிலோன் தியேட்டேஸ் லிமிடெட் டைரக்டருமான உயர் திரு. சேர். சிற்றம்பலம் A. கார்டினர் அவர்களும் அவரது பாரியாரும் இம்மாதம் 27 ந் திகதி, ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் சண்முகம் விளையாட்டு முன்றிலில் இருந்து பலாலி—வயாவிளான் கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. சி. இராமலிங்கம் ஆசிரியர் அவர்களாலும் மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி. வ. இராசநாயகம் ஆசிரியை அவர்களாலும் வரவேற்கப்பட்டு ஊர்வலமாக வந்தனர்.

நெசவு நிலையத்தை அடைந்ததும் தலைவரின் வேண்டுகோளின்படி உயர்திரு சேர் சிற்றம்பலம் A. கார்டினர் அவர்கள் நெசவு நிலையக் கட்டிடத்தைத் திறந்து வைத்து நெசவு நிலைய வளர்ச்சி பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

விழாவுக்கு வடபெரும்பாகக் குடிசைக் கைத்தொழில் அதிபர் உயர்திரு V. N. செல்வரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் V. K. சுப்பிரமணியம் (S.R.O.) J. S. பெரடரிக் (R.D.O.) சி. சுவாமிநாதன் B.A., J.P. செனட்டர் P. நாகலிங்கம், V. இராசநாயகம் J.P. (மயிலிட்டிக் கிராமச் சங்கத் தலைவர்) முதலியோரும் திருமதிகள் லட்சுமி தேவி சரவணமுத்து (வடபகுதிச் சேமநலச் சங்கக் காரியதரிசி) அழகம்மா சுந்தரம்பிள்ளை (மயிலிட்டி தெற்கு மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி) முதலியோரும் விழாவிற் பேச்சாளராகப் பங்குபற்றினர்.

உயர்திருவாளர்கள் வடபெரும்பாக அதிபர் M. ஸ்ரீகாந்தா வயாவிளான் தோலகட்டி றோஸரி ஆச்சிரமத் தலைவர் வண சுவாமி தோமஸ், அதிவண மேற்றிராணியார் டாக்டர் J. எமிலியானஸ்பிள்ளை O.M.I., D.O., B.Sc., வழக்கறிஞர் சாம் ஏ. சபாபதி, க. சிவலிங்கம், வண சுவாமி A. S. சிங்கராயர், S. J. V. செல்வநாயகம், Q.C., M,P., V. K. நடராசா, முதலியவர்களின் வாழ்த்துக்கடிதங்கள் வாசிக்கப்பட்டன.



பெப்ருவரி மாதம் 13 ந் திகதி இலங்கைக்கு வருகை புரிந்த கம்போடிய இளவரசரான நொரோடம் சிகனுக் அவர் களையும், அவரது குமாரியையும் திருமதி பண்டாரநாயக்கா இரத்மலானை விமான நிலையத்தில் வரவேற்கும் காட்சி. பூச்செண்டைக் கையிலேந்தி இருப்பவர் இளவரசியாவர்.

# கம்போடிய இளவரசரின் இலங்கை விஜயம்

இலங்கையில் நடைபெறும் ஜயந்தி விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க கம்போடிய இளவரசர் நொரோடம் சிகனுக், இளவரசி நொரோடம் சொரூயா றியாங்சேயுடனும், பிரதம மந்திரி சன்யுண், அவருடைய மனைவி மற்றும் பிரமுகர்கள் பலருடனும் பெப்ரவரி மாதம் 13 ந் திகதி மாலை 5 மணிக்கு விசேஷ விமானமொன்றில் இரத்மலானை விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்.

கௌரவ உள்நாட்டு விவகார மந்திரி அவர்கள், கௌரவ தல ஆட்சி, கலாசார மந்திரி அவர்கள், கௌரவ போக்குவரத்து பொதுவேலை மந்திரி அவர்கள் ஆகியோர் விமானத்தில் வைத்து இளவரசரையும் அவருடைய கோஷ்டியினரையும் சந்தித்து வரவேற்றனர். பின்னர் இளவரசரும் இளவரசியும், மந்திரிமார்கள் மூவரும் இளவசரரின் கோஷ்டியாரும் பின்தொடர விமானத்திலிருந்து இறங்கும்போது மங்கல பேரிகை முழங்கியது. இளவரசரும் இளவரசியும் விமானத்தை விட்டிறங்கியதும் 21 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. பின்னர் பிரதம மந்திரி அவர்களும் திருமதி பண்டாரநாயக்கா அவர்களும் இளவரசரையும் இளவரசியையும் வரவேற்றனர். அதன் பின் பிரதமரின் புதல்வர் இளவரசருக்கு மலர்மாலை சூட்டினர். பிரதமரின் புதல்வி இளவரசிக்கு ஒரு பூச்செண்டை வழங்கினர்.

அடுத்தபடியாக மகாதேசாதிபதி அவர்களின் பிரதிநிதி, பாதுகாப்பு வெளிநாட்டு விவகாரமந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசி, தலஆட்சி, கலாசார மந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசி, உள்நாட்டு விவகார மந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசி, கடற்படை, தரைப்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகள், பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி, சிவில் விமானப் போக்குவரத்து அதிபதி, கலாசார அதிபதி ஆகியோரை உள்நாட்டு விவகார மந்திரி அவர்கள் இளவரசருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

அதன் பின்னர் இளவரசர் இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டார். இராணுவ "பாண்டு" வாத்தியக் கோஷ்டி கம்போடியாவினதும் இலங்கையினதும் தேசியக் கீதங்களை வாசித்தது.

விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில் வீற்றிருந்த பௌத்த குருமார் "பிரித்" ஓதினர். இளவசரர் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தார்.

இது முடிந்ததும் மந்திரி சபை அங்கத்தவர்கள், பிரதம நீதியரசர், செனட் சபைத் தலைவர், சபாநாயகர், உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு ஸ்தானிகர்கள் முதலானோர் இளவரசருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டனர்.

### இளவரசரின் சொற்பொழிவு

ஊர்வலம் ஆரம்பமாவதற்குமுன் இரத்மலானை விமான நிலையத்தில் பேசிய இளவரசர் நொருடம் சிகனுக் கூறியதாவது :-

“புத்த ஜயந்தி கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும்படி விடுக்கப்பட்ட அழைப்பை கம்போடிய அரசாங்கம் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டது. மாட்சிமை தங்கிய மன்னர் அவர்களதும் கம்போடிய அரசாங்கத்தினதும் கம்போடிய மக்களதும் பிரதிநிதி என்ற முறையில் இத்தூது கோஷ்டிக்குத் தலைமை வகிக்கும் கௌரவம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இத்தூது கோஷ்டியில், விசேஷமாக எமது பிரதம மந்திரி திரு. சன்யுண் அவர்களைப் போன்ற பிரமுகர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

“சரித்திரப்புகழ் பெற்றதும் எமது மதமான புத்தமதத்தைப் பேணி வளர்த்து வந்ததுமான உங்கள் நாட்டு மண்ணில் காலெடுத்து வைத்ததும் கம்போடிய நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

“சமயம், கலை, கலாசாரம், நாகரீகம் ஆகிய எல்லாத்துறைகளிலும் பல நூற்றுண்டு காலமாக எங்களுக்கிடையிலுள்ள தொடர்பு வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது. எமது மதம் பொதுவாயிருப்பதால் நடு நிலைமை பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றில் நாம் நம்பிக்கை கொண்டு வந்தோம். இதன் மூலம் உலகில் சமாதானமும் நல்லுறவும் பெருக உழைப்போமாக. நாம் இந்நாட்டில் இருக்கும்போது இந்நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அறியமுடியும். இதனுலே நம்மிடையேயுள்ள நட்பும் நல்லுறவும் மேன்மேலும் வளரும் என்பதே என் கருத்து”.

### ஊர்வலம்

இளவரசரின் சொற்பொழிவுக்குப் பின் ஊர் வலம் ஆரம்பமாயிற்று. வெண்ணிற உடை தரித்த பொலிஸார் மோட்டார் சைக்கிள்களில் முன் செல்ல, இளவரசர் திறந்த காரில் நின்ற வண்ணம் வாழ்த்தியபடியே சென்றுர். விமான நிலையத்திலிருந்து இராணி மாளிகைவரை அலங்கரிக்கப்பட்ட பாதையின் இருமருங்கிலும் சனங்கள் கூடி நின்று ஆரவாரம் செய்தனர். ஊர்வலம் இராணிமாளிகையை வந்தடைந்ததும் மகாதேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலக்கா அவர்கள் இளவரசரையும் கோஷ்டியினரையும் வரவேற்றுர்.

### காலியில் வரவேற்பு

கம்போடிய இளவரசர் நொரூேடம் சிகனுக், பெப்ருவரிமாதம் 14 ந் திகதி காலியில் நடைபெற்ற புத்தஜயந்திக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டவர்களில் முக்கியஸ்தராவார்.

இளவரசரும் அவருடைய கோஷ்டியினரும் அன்று காலை இராணி மாளிகையிலிருந்து காலிக்குப் புறப்பட்டுச் சென்றனர். காலி நகரை அடைந்ததும் காலித் தொகுதியின் அங்கத்தவரும் கல்வி மந்திரியுமான திரு. டபிள்யு. தகநாயக்கா அவர்களும் காலி மேயர் ஜனுப் ஏ. ஆர். எம். தாஸிம் அவர்களும் காலியின் அரசாங்க மாகாண அதிபரும் இளவரசரையும் கோஷ்டியினரையும் வரவேற்றனர். இங்கிருந்து இவர்கள் காலி நகரமண்டபத்துக் கழைத்துச் செல்லப்பட்டனர். நகர மண்டபத்தில் அவர்களுக்கு ஒரு பொது வரவேற்பளிக்கப்பட்டது.

அன்று பிற்பகல், காலியில் புத்த ஜயந்தி ஞாபகார்த்தமாகக் கட்டப்படும் “பௌத்த மந்திரம்” என்ற கட்டடத்துக்கு கம்போடிய இளவரசர் நொரூேடம் சிகனுக் அத்திவாரக்கல் நாட்டினுர். அத்துடன் அவர் காலி பௌத்த இளைஞர் சங்கக் கட்டடநிதிக்கு 1,000 ரூபாய் நன்கொடையும் அளித்தார்.

புத்த ஜயந்திக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கம்போடிய இளவரசர் பௌத்தக் கொடியை ஏற்றிவைத்தார். கலாசார அமைச்சர் திரு. ஜயவீர குருப்பு இலங்கைக் கொடியை ஏற்றி வைத்தார்.

### கொழும்பு மாநகரசபை அளித்த வரவேற்பு

இளவரசர் நொரூேடம் சிகனுக் அவர்களையும் கோஷ்டியினரையும் பெப்ருவரி மாதம் 15 ந் திகதி கொழும்பு மாநகரசபையில் வரவேற்றுப் பேசிய கொழும்பு மேயர் திரு. வி. ஏ. சுகததாச கூறியதாவது :—

“இளவரசர் சிகனுக் புத்த ஜயந்திக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள இலங்கைக்கு விஜயஞ் செய்திருப்பது இலங்கைக்கு ஒரு பெரும் கௌரவமாகும். இவ்விஜயம் இலங்கை மக்களுக்கு முக்கியமானதாகும். தம் நாட்டுக்கு அரிய சேவை செய்துள்ள இளவரசரை அந்நாட்டு மக்கள் பெரிதும் மதிக்கின்றனர் என்பது கடந்த தேர்தல்களில் அவரது கட்சிக்குக் கிடைத்த மகத்தான வெற்றியிலிருந்து புலப்படுகின்றது.”

ஈற்றில் இருநாடுகளுக்குமிடையிலுள்ள சரித்திரத் தொடர்புகளைப் பற்றியும் மேயர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வரவேற்புப்பத்திரத்தை மேயர் இளவரசருக்கு வழங்கினுர். இப்பத்திரம் ஒரு வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டிருந்தது.

வரவேற்புக்குப் பதிலளிக்கையில் இளவரசர் நொரூேடம் சிகனுக் கூறியதாவது :—

“நிலப்பரப்பில் மும்மடங்கு பெரியதாக இருப்பினும் இலங்கையின் குடிசனத் தொகையில் அரைவாசியை மட்டுமே கொண்ட கம்போடியா, உலக சமாதானத்துக்காகப் பல்வேறு நாடுகளுக்கிடையே சிறந்த நல்லெண்ணத்தை உண்டுபண்ண உங்கள் நாடு செய்யும் முயற்சிகளுக்கு சிறிதளவே உதவமுடியும். ஆனுல் சர்வ தேசப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் சிறிய நாடுகளுக்குள்ள ஆர்வத்தில் அவற்றின் சக்தியும் சேர்ந்திருக்கிறது.

கம்போடியாவின் தலைநகரான நொம்பென் மக்களின் சார்பாக இளவரசர் கொழும்பு நகர மக்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு கொழும்பு நகர மக்கள் சுபீட்சத்தோடு நீடூழி வாழவேண்டும் என வாழ்த்தினுர்.

பின்னர் மேயர் அவர்கள் மாநகரசபை அங்கத்தவர்களையும் அவர்களுடைய மனைவிமாரையும் இளவரசருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

### கண்டியில் வரவேற்பு

பெப்ருவரி மாதம் 16 ந் திகதி சனிக்கிழமை யன்று இளவரசர் நொரூேடம் தம் கோஷ்டியினருடன் இலங்கையின் புராதனத் தலைநகரான கண்டிக்குப் பிரயாணமானுர். போகும் வழியில் அவர் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு விஜயஞ் செய்தார்.

கண்டிக்குப் போய்ச் சேர்ந்ததும் இளவரசர் மல்வத்தை, அஸ்கிரியா ஆகிய இருபிரிவுகளுக்கும் அவற்றின் மகாநாயக்க தேரர்களுக்கும் தமது மரியாதையைச் செலுத்து முகமாக அவ்வப்பிரிவுகளுக்கு விஜயஞ் செய்தார். இவ்விரு ஆலயங்களிலும், இளவரசர் புத்த பெருமான் சிலைகளுக்கு மலர் இட்டு வணங்கினுர்.

மகாநாயக்க தேரர்கள் “பிரித்” ஓதி இளவரசரை ஆசீர்வதித்தனர்.



கம்போடிய இளவரசர் (நொரோடம்) சிகனுக் அவர்கள் இலங்கை வந்தபொழுது இரத்மலானையில் மந்திரிகளால் வரவேற்கப்படுகிறார்.

கண்டி நகர மண்டபத்தில் நடைபெறற ஒரு மகத்தான வரஷேற்பு உபசாரத்தின் போது கண்டி நகர மேயர் திரு. ஈ. எல். சேனநாயக்கா அவர்கள் இளவரசரையும் அவருடைய கோஷ்டியினரையும் வரவேற்றுப் பேசுகையில் கூறிதாவது :—

"நம் நகருக்கு நீங்கள் விஜயஞ் செய்துள்ளதானது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது. பௌத்த மதம் இவ்விரு நாடுகளையும் இணைத்துக்கொண்டிருக்கிறது. இவ்விரு நாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை மேலும் ஸ்திரமடையச் செய்ய உங்கள் விஜயம் உதவும் என்பதில் சந்தேகமில்லை."

இளவரசர் இதற்குப்பதிலளிக்கையிற்கூறியதாவது :— "நீங்கள் எங்களுக் களித்த இம்மகத்தான வரவேற்புக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன், சிறந்த பௌத்த தலமான இந் நகருக்கு மீண்டும் விஜயஞ் செய்யதது எனக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கின்றது. முதன் முதலாக 1946 ம் ஆண்டில் எங்கள் நாட்டு வழக்கப்படி யாத்திரை செய்யும் மார்க்கத்தில் இங்கு வந்தேன். வணக்கத்துக்குரிய குருமாராகிய உங்களைப்பற்றிய ஞாபகம் இன்னும் இருக்கிறது. நாம் இங்கு வந்ததால் இவ்விரு நாடுகளுக்குமிடையேயுள்ள பிணைப்பு பலமடைந்துள்ளது. இப்பிணைப்பு ஒருபோதும் அழியக்கூடிய தல்ல வென்று இப்போது நீங்கள் அளித்த வரவேற்பு உபசாரம் எடுத்துக் காட்டுகிறது. இதற்காக எங்கள் இதயங்கனிந்த நன்றியை செலுத்துகின்றோம்."

அடுத்த நாள் இளவரசர் மாத்தளை அலுவிஹாரையிலுள்ள புராதன ஆலயத்துக்கும் விஜயஞ் செய்தார். கொழும்பு திரும்பும் வழியில் பேராதனைப் பூந்தோட்டத்துக்கு விஜயம் செய்து, அங்கு ஒரு மரக் கன்றை நாட்டினார்.

இதே தினத்தன்று மாலையில் இளவரசருக்கும் கோஷ்டியினருக்கும் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் கொழும்பிலுள்ள தமது உத்தியோகப் பூர்வமான வாசத்தலமான "ரெம்பிள் டிரீ"ஸில் ஒரு பொது வரவேற்பளித்தார்.

### பத்திரிகை மகாநாடு

மேற்கத்திய நாடுகளும் பொதுவுடமை நாடுகளும் கம்போடியாவைக் கௌரவிக்கின்றன என்றும் அவற்றினிடம் அந்தரங்க நோக்கங்கள் எவையுமின்றி கம்போடியா பொருளாதார, தொழில்நுட்ப உதவிகள் பெற்று வருவதாகவும் இளவரசர் நொரோடம் பெப்ரவரி மாதம் 18 ந் திகதி இராணிமாளிகையில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகா நாட்டில் தெரிவித்தார்.

தமது நாட்டின் பஞ்சசீலக்கொள்கை பற்றியும் நடு நிலைமைக் கொள்கை பற்றியும் புதுடில்லி பாண்டுங் மகாநாடுகளில் தாம் அழுத்தந் திருத்தமாகப் பிரகடனம் செய்த பின்னர் தம்மீதும் தம்நாடு மீதும் ஏனைய நாடுகளுக்கிருந்த சந்தேகம் குறைந்து விட்டதென்றும் அவர் கூறினார்.

ருஷ்யா, அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பர்மா, இந்தியா, தாய்லந்து, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் கம்போடியா பொருளாதார, தொழில் நுட்ப உதவி

(40 ம் பக்கம் பார்க்க)

# எருக்கலம்பிட்டி கி. மு. சங்கம்—8 வது வருடாந்த நிறைவு விழா

"ஒரு கிராமத்தின் முன்னேற்றம் அங்குவதியும் ஒவ்வொரு கிராமவாசியின் கையிலும் தங்கியுள்ளது. எடுத்ததற்கெல்லாம் அரசாங்க உதவியையே எதிர்பார்த்திராது சுயமுயற்சியுடன் கிராமத்தை முன்னேற்றவேண்டும் என்னும் மனப்பான்மையுடன் பொதுநலப்பணியில் ஈடுபடும் அங்கத்தவர்களைக்கொண்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள் எங்கெங்கு உண்டோ அங்குதான் ஜனநாயக ஆட்சியின் பிரதிபலிப்பைக் காண முடியும். மன்னூர்ப் பகுதியிலேயே என் மனதைக் கவர்ந்த எருக்கலம்பிட்டி கிராம முன்னேற்றச் சங்கம் கிராமவாசிகளின் பொருளாதார, சுகாதார நல்லொழுக்க முன்னேற்றங் கருதி ஆற்றியுள்ள சேவைகளைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இங்குள்ள கிராமச் சங்கமும், கிராம முன்னேற்றச் சங்கமும் ஒத்துழைத்து ஆக்கவேலைகளில் ஈடுபட்டு வருவதும், இருசங்கங்களின் உத்தியோக தெரிவுகளின்போது போட்டி மனப்பான்மையின்றி ஒற்றுமையுடன் சுமுகமாக நிறைவேற்றிக்கொள்வதுமே இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்துள்ளதால் ஏனைய கி.மு. சங்கங்களுக்கு இச் சங்கம் முன்மாதிரியாக விளங்குகிறது." இவ்வாறு 19.1.57 தினத்தன்று சங்க மண்டபத்தில் நடைபெற்ற எருக்கலம்பிட்டி கி.மு. சங்கத்தின் 8 வது வருட நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய குடிசைக் கைத்தொழில், கிராம முன்னேற்ற இலாகாவின் மன்னூர் மாவட்ட அதிகாரி திரு. வி. குமாரசுவாமி குறிப்பிட்டார்.

பின்னர் சங்கத்தின் செயலாளர் ஜனாப் எம். பி. ஏ. ஜப்பார் சபையில் வாசித்துக்காட்டி ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ள 48 ம் 56 ம் வருட தொகுப்பறிக்கை பின்வருமாறு :—

**ஆரம்பம்.** 5.11.48 ல் மன்னூர் உதவி மாகாண அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆர். எல். ஆர்நோல்டா அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 20.11.48 ல் அரசினரால் பதிவு செய்யப்பட்டது. தற்போதைய சங்கத்தின் பதிவு இலக்கம் 190A of 20.11.48

**சங்கத்தின் அபிவிருத்தி :**—இன்றுவரை சங்கத்தில் 302 பேர் அங்கத்துவம் வகித்துவருகிறார்கள். இதுவரை சங்க அங்கத்தவர்களால் கட்டப்பட்ட தனிக்கிணறுகள் 164. இவற்றின் ஆகக்கூடிய பெறுமதி ரூபா 94,300.00 பிரத்தியேக மலகூடங்கள் 10. பெறுமதி ரூபா 1,800.00. சங்கமண்டபம் ஒன்று. பெறுமதி ரூபா 7,290.00. பிரதான வீதி ஹீஸ் ரோடு ஒன்று. பெறுமதி ரூபா 4,417.48. பொதுக்கிணறு ஒன்று ரூபா 380.40. ஆகக்கூடியது ரூபா 108,187.88. இதில் அங்கத்தவர்பணம் ரூபா 59,298.73. அரசினர் நன்கொடைப் பணம் ரூபா 48,889.15.

**சமாதான மன்றம் :**—சங்கத்தின் ஓர் கிளை ஸ்தாபனமாக இயங்கிவரும் மேற்படி மன்றத்தில் கிராம மக்களால் இதுவரை 590 முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டு 440 முறையீடுகள் சமாதானம் செய்யப்பட்டுள்ளன.

**தொண்டர் சபை :** கிராமத்தில் நிகழ ஏதுவான குற்றங்களை ஒழிப்பதில் சங்கத்தின் தொண்டர்சபை அவ்வப்போது ஆவன செய்துவருவதுடன் இதுவரை 1042 சட்டவிரோதக் குடியேற்றக்காரரைச் சங்கம் கைதுசெய்து போலீசாரிடம் ஒப்படைத்துள்ளது.

**சேமிப்பு :**—சங்கத்தின் பெரு முயற்சியால் கிராம வாசிகளிடம் 300 க்குக் குறையாத சேமிப்புத்தகங்களில் ரூபா 20,000.00 வரை கிராம வாசிகள் சேமித்துள்ளனர்.

**குடிசைத் கைத்தொழில் :**—கிராம மக்களை குடிசைக் கைத்தொழிலில் ஆர்வமுடன் ஈடுபடச் செய்ததன்பயனாக இதுவரை 20,000 பாய்கள் குடிசைக் கைத்தொழில் இலாகாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. சங்கத்தின் பெருமுயற்சியால் இங்கு மாதர் பனம் பொருளுற்பத்திக் கூட்டுறவுச் சங்கமொன்று ஸ்தாபிதமாகிச் செயலாற்றி வருகின்றது. கொழும்பிலும் ஏனைய பல இடங்களிலும் நடைபெறும் கைப்பணிப்பன்னவேலை பொருட்காட்சிக்கு பல பொருட்கள் அனுப்பப்பட்டு பாராட்டுகளும், பரிசுகளும் கிடைத்துள்ளன. ஆண்கள் மால்முடித்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் மாதர் தையல் பயிற்சி நிலையம் ஒன்றும் சங்கத்தின் சார்பாக ஸ்தாபிதம் செய்யப்பட்டு கிராம மக்கள் பயனடைந்து வருகின்றனர். அன்றியும் நெசவு நிலையம் ஒன்று ஸ்தாபிதமாக்க சகல ஒழுங்குகளும் பூர்த்தியாகி ஆசிரியையின் வருகையை எதிர்பார்த்து சமீபத்தில் ஆரம்பம் செய்ய விருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**கால்நடை வளர்ப்பு :**—கால்நடை வளர்ப்பில் கவனமெடுத்து வரும் எங்கள் சங்கம் இதுவரை 2,300 நல்லின முட்டைகளை கிராமவாசிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளது. நல்லினச் சேவல்களும் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. கோழிகளுக்கும் ஆடு மாடுகளுக்கும் நோய்கள் ஏற்படாதவாறு அவ்வப்போது ஊசி மருந்து பாய்ச்சவும் மருந்துகள் கொடுக்கவும் ஏற்பாடு செய்து வருவதனிமித்தம் தற்போது கிராமத்தில் மேற்படி நோய்கள் 80 வீதம் ஒழிக்கப்பட்டுவிட்டன. அரசினர் மிருக வைத்தியரின் ஆலோசனைப்படி கால்நடை வளர்ப்பைச் சங்கம் கண்காணித்து வருகிறது. கிராமத்தில் கோழிவளர்ப்பின் முன்மாதிரிக்காக இம்முறை 10 நபர்களுக்கு தலா ரூபா 50.00 வீதம் பெறுமதியான உற்பத்திப் பெருக்கப் பொருட்களை அரசினரிடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளது. இங்கிருந்து பிற இடங்களுக்கு பொருட்காட்சி வைபவங்களுக்காக கால்நடைகள் கொண்டு போகப்பட்டு பாராட்டு சான்றுரைப்பத்திரங்களும் பரிசுகளும் கிடைத்துள்ளன.

**கூட்டுறவு :**—ஏற்கனவே இக்கிராமத்தில் இலங்கையிலேயே முன்மாதிரியான ஐக்கிய நாணயசங்கம், மீன்பிடித்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஆகிய இரு சங்கங்களும் வேறுபல 4 கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வந்த போதிலும் சங்கத்தின் முயற்சியால் "அமீன்" ஐ. நா. சங்கம் "நூன்" ஐ. நா. சங்கம் ஆகிய இரு சங்கங்கள் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டு திறம்பட செயலாற்றி வருகின்றன. சுருங்கச் சொல்லின் இலங்கையில் கூட்டுறவு முன்மாதிரிக் கிராமங்களில் எருக்கலம்பிட்டியும் ஒன்று என்று சங்கம் பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறது.

**சுகாதாரம் :**—கிராமவாசிகளை சுகாதார விதிகளுக்கமைய நடக்குமாறு சங்கம் அவ்வப்போது தன்னாலான மட்டும் பிரச்சாரம் செய்தும் சுகாதார வாரங்களைப் பரிசில் வழங்கிக்கொண்டாடியும் கவனமெடுத்து வருகிறது. இது சம்பந்தமான அரசினர் இலவசப் படக்காட்சியைக் கிராம வாசிகள் கண்டு களித்து புத்துணர்ச்சி பெறச் செய்து வருவதுடன் பிள்ளைகளுக்குச் சிறந்த போஷாக்

களிக்குமுகமாக இரு அரசினர் இலவச பால் வினியோக நிலையங்களையும் சங்கம் பொறுப்பேற்று மேற்பார்வைசெய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**பயிர்ச் செய்கை** :—கிராம மக்களுக்கு அவ்வப்போது விதைகள், கன்றுகள் வழங்கியும் பயிர்ச்செய்கையில் ஈடுபடச் சங்கம் அன்னுரைத் தூண்டி வருவதுடனில்லாது கிராமத் தலைமைக்காரரைத் தலைவராகக் கொண்ட உணவு உற்பத்தி இயக்கமொன்றினையும் சங்கம் செயல்படச் செய்து வருகிறது. இவ்வகையில் கிராமவாசிகளுக்குப் போதிய அறிவையளிக்குமுகமாக ஏற்கனவே 10 நபர்களைக் கோண்டாவில் கி.மு.ச. சேவையாளர் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி பயிற்சி யளிக்கச் சங்கம் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**உல்லாசவேளை** :—உழைப்பின் பின் ஓய்வு என்றதற்கிணங்க கிராம மக்களை மகிழ்விக்க அரசினர் வானொலிப் பெட்டியைச் சங்கம் இயக்கிவருகிறது. எதிர்காலத்தில் ஓர் பொது விளையாட்டு மைதானத்தை அமைக்கவும் சங்கம் திட்டமிட்டுள்ளது. இன்னும் சிக்கனதினம், சுதந்திரதினம், நபிகள் நாயக ஜெனனதினம் ஆகியவற்றையும் சங்கம் கொண்டாடி சமயவகுப்பு நடைபெறவும் ஆவன செய்துவருகிறது. ஈற்றில் மேலும் இச்சங்கம் வருங் காலத்தில் கிராமவாசிகளுக்கு பயன்தரு பணிகளில் செயலாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக.

**ஏனைய பேச்சாளர்கள்** :—அடுத்தபடியாக மன்னூர்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. என். வேதாரண்யசியோன் சங்கத்தின், சேவைகளைப் பாராட்டியதுடன் கி.மு. சங்கத்தின் ஆரம்பம், நோக்கம், அங்கத்தவர் கடமை ஆகியவற்றைக் காரசாரமாக விளக்கிக் கூறினர்.

மன்னூர்ப் பகுதி கி. மு. ச. மேற்பார்வையாளர் திரு. கே. எஸ். முத்துவேல், கி.மு.ச. உத்தியோகஸ்தர் திரு. நடராஜா, மீன்பிடி இலாகா பிரதம அதிகாரி ஜனுப் என். எம். கௌது எருக்கலம்பிட்டி மத்தியபாடசாலை அதிபர் விரு. கே. நவரட்ணராஜா, தலைமை ஆசிரியர் திரு. ஏ. சின்னத்தம்பி கி. மு. ச. தலைவர் ஜனுப் கே. எஸ். சாகுல்கமீது ஆகியோரும் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.

**நடப்பு வருட உத்தியோகஸ்தர்** : வழமைபோல் இவ்வருடமும் கி. மு. ச. நிர்வாகசபையினராக வட்டாரத்திற்கு (3) மூன்றுபேர் வீதம் 9 வட்டாரத்திற்கும் 27 நபர்கள் அந்தந்த வட்டார மக்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குள் கீழ்க் கண்ட சங்க உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஜனுப் ஒ. எம். கப்பப்பிச்சை, உபதலைவர்: ஜனுப் எஸ். கே. சாகுல்கமீது: செயலாளர் ஜனுப் எம். பி. ஏ. ஜப்பார், துணைசெயலாளர்: பி. எம். எம். சாலிகு, பொருளாளர்: எஸ். எம். ஏ. கரீம். சமாதான மன்ற செயலாளர்: ஜனுப் என். எம். ஏ. ஹமீது.

ஈற்றில் எஸ். கே. கே. கப்பமரைக்காயர் அவர்களின் பாத்தி ஹாவுடனும் சிற்றுண்டி வைபவத்துடனும் விழா இனிது நிறைவெய்தியது.

இவ்வண்ணம்,
**எம். பீ. ஏ. ஜப்பார்,**
காரியதரிசி.

## ஆனைக்கோட்டைக் கிராம முன்னேற்றச் சங்க சன சமூக நிலைய எட்டாவது வருடாந்தக் கூட்டம் (17.1.57)

மேற்படி சங்கத்தின் எட்டாவது வருடாந்தக் கூட்டம் 1957 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ந் திகதி மாலை 5 மணியளவில் சங்கத் தலைவர் தலைமையில் ஆரம்பமாகி பின்வருபவர்களைப் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்துள்ளது.

தலைவர் : திரு. வே. சுந்தரம்பிள்ளை

உபதலைவர்கள் : திரு. V. பரமநாதன், திரு. C. K. கந்தசாமி, திரு. W. C. நாதன், திரு. S. இராசரத்தினம்,

காரியதரிசி : திரு. த. மார்க்கண்டு

தனதிகாரி : திரு S. கனகசூரியர்

இத்துடன் 13 பேரைக் கொண்ட நிர்வாக சபையும் ஏற்படுத்தியுள்ளது.

அன்று கிராம முன்னேற்றம் கருதி பின்வரும் சொற்பொழிவாளர்கள் சிறந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.

1. திரு. த. குமாரசாமிப் புலவர் அவர்கள்
2. திரு. சொ திருநாவுக்கரசு, J. P. அவர்கள்
3. திரு. ஆரியல் பெரேரா (பொலிஸ் அதிகாரி ஆனைக்கோட்டை)
4. பண்டிதர் சொ. இளமுருகனுர்.

**த. மார்க்கண்டு.**
கௌரவ காரியதரிசி.

## கம்போடிய இளவரசரின் இலங்கை விஜயம்

(38 ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பெற்றதாகவும் இவ்வுதவிகள் தமது நாட்டின் இரண்டு வருட அபிவிருத்தித் திட்டத்துக்காகும் என்றும் இளவரசர் குறிப்பிட்டார்.

பாண்டுங் மகாநாடு இரண்டாவது தடவை நடைபெறுவது, இந்த மகா நாட்டில் பங்குபற்றும் நாடுகளின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்குச் சந்தர்ப்பமளிப்பதாக விருக்கும் என்றும் அவர் கூறினர்.

முடிவில் அவர் இலங்கை மக்களுக்கு நல்லாசி கூறிவிட்டு தமது தற்போதைய இலங்கை விஜயம் புத்த ஜயந்தி சம்பந்தப்பட்டதே யன்றி அரசியல் சம்பந்தப்பட்ட விஜயம் அல்லவென்றும் தெரிவித்தார்.

### பிரியாவிடைச் செய்தி

கம்போடிய இளவரசர் நொரோடம் சிகனுக் பெப்ருவரி மாதம் 19 ந் திகதி தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விமானத்தில் ஏறுவதற்கு முன்னர், இலங்கை மக்களுக்கு விடுத்த பிரியாவிடைச் செய்தியில் கூறியதாவது :—

"எனக்கும் கம்போடிய தேசியத் தூதுக் கோஷ்டிக்கும் இந்நாட்டில் அளிக்கப்பட்ட குதூகலமும் அன்பும் நிறைந்த வரவேற்புக்கு நான் எனது மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கவர்ச்சி மிக்க உங்கள் நாட்டில் நாங்கள் தங்கியிருந்த சொற்ப காலத்தில் எங்களுக்குக் காட்டப்பட்ட சிறந்த அன்பைக் குறித்து மகாதேசாதிபதி அவர்களுக்கும், பிரதம மந்திரி அவர்களுக்கும், அரசாங்க அங்கத்தினர்களுக்கும், இலங்கை மக்கள் அனைவருக்கும் நான் எனது மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கைக்கு நிரந்தர சமாதானமும் மேலும் சிறந்த சுபீட்சமும் ஏற்படுவதாக".

# நவாலி தெற்கு சனசமூக நிலையத்தினதும் ஐக்கிய கழக கிராம முன்னேற்றச் சங்கத்தினதும் வருடாந்த விழா

மேற்படி சங்கங்களின் வருடாந்த விழா சங்கங்களின் தலைவர் திருவாளர் யோ. சின்னப்பா அவர்கள் தலைமையில் கடந்த ஜனவரி மாதம் 13 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் தமது தலைமையுரையில் கிராம முன்னேற்றச் சங்கங்களும், சனசமூக நிலையங்களும் நாட்டுக்குச் செய்து வரும் அளப்பரிய சேவைகளை பாராட்டியதுடன், மதஸ்தாபனங்கள், ஓய்வு நாட் பாடசாலை போன்ற காரியங்களால் இளைஞருக்குள் கடவுள் நம்பிக்கையையும், நல்ல பழக்க வழக்கங்களையும் இன்னும் அதிகமாய் வளரச் செய்யலாம் என்று விசேடமாகக் குறிப்பிட்டார். சங்கக் கௌரவ காரியதரிசி திரு. டப்ளியூ. என். தேவகடாட்சம் ஆசிரியர் அவர்கள் வருடாந்த அறிக்கையை அங்கத்தவருக்கும், பிரமுகர்களுக்கும், சபையோருக்கும் சமர்ப்பித்தார். அவ்வறிக்கை விவசாயம், கோழிப்பண்ணை, சுகாதாரம் சுதேசிவாரம், கயரோக உதவி, தொண்டர் படை, சமாதான மன்றம், நூல் நிலையமும் வாசிகசாலையும், தும்புத் தொழிற் சங்கம், இளைஞர் விவசாய கழகம், விளையாட்டு, படக்காட்சிகள், யாழ்ப்பகுதி சனசமூக நிலைய சமாச விழாவினுல் நடாத்தப்பட்ட இயல், இசை, நாடகம், விளையாட்டு, யோகாசனம் முதலிய போட்டி முடிபுகள், சில தீர்மானங்கள் முதலியவற்றைக் கொண்டதாகக் காணப்பட்டது.

பின்னர் சங்கத் தனாதிகாரி திரு. ஐ. பொன்னுத்துரை அவர்கள் 1,515 ரூபா 28 சதத்துக்குரிய வரவு செலவுக் கணக்குகளை வாசித்து விளக்கிக்காட்டினார். சபையினரால் மேற்படி இரு அறிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

"இச்சங்கங்கள் கலை, கலாச்சாரம், தொழில், விளையாட்டு முதலிய துறைகளில் மிக உன்னத நிலையை அடைந்துள்ளதாக கௌரவ காரியதரிசி திரு. டப்ளியூ. என். தேவகடாட்சம் ஆசிரியர் அவர்கள் தனது வருடாந்த அறிக்கையை வாசிக்க வாசிக்க என் மனத்தில் இன்பம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இன்னும் ஒரே குழுவினர் இவ்விரு சங்கங்களையும் திறமையாக நடாத்துவது மிகவும் பாராட்டப்படக்கூடிய விஷயம். சமாதானமன்றம், தொண்டர்படை முதலியவற்றைத் திறமையாகவும், நாட்டுக்குச் சேவை செய்யும் வண்ணமாகவும் நடாத்தவேண்டும்."

இவ்வாறு வலிகாமம் மேற்குப் பகுதி காரியாதிகாரி (D.R.O.) திருவாளர் மா. நடராசா அவர்கள் தனது பேச்சில் குறிப்பிட்டார். இராசவாசல் முதலியார் சி. தியாகராசா அவர்கள் இச்சங்கத்தின் தலைவர், காரியதரிசி, தனாதிகாரி ஆகியோரது திறம்பட்ட சேவையைப் பாராட்டி, இவ்வருடம் யா. ப. ச. ச. நிலைய விழாவில் இந்நிலையம் முதல் முதலாகப் பங்குபற்றி வெள்ளிக்கிண்ணங்களையும், அநேக தராதரப் பத்திரங்களையும் பெற்றுக்கொண்டது பாராட்டப்பட வேண்டிய காரியமென்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பகுதி சனசமூக நிலையங்களுக்கு அரிய புத்துயிர் கொடுத்து அளப்பரிய உண்மைச் சேவையைச் செய்து வரும் உள்ளூராட்சி விசாரணையாளர் திரு. வை.ச. சண்முகம் அவர்கள் இந்நிலையத்தின் இவ்வருட முன்னேற்றத்தைப் பல உதாரணங்களால் விளக்கினார். இவ்வருடம் இதற்கு கூடிய மானியம் கிடைக்குமெனவும் உறுதிமொழி கூறி, இன்னும் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் இந்நிலையங்கள் மூலம் அதிகமாகப் பரப்பமுடியுமென்றும் கூறினார். கனம் பி. சி. டி. மேதர், வலி மேற்கு விவசாயப் போதனாசிரியர் திரு. ஏ. சோமசுந்தரம் அவர்களும் திறம்படப் பேசினர்.

சமாச விழாவில் பரிசுபெற்ற திரு. அ. பிலிப்பையா அவர்களால் யோகாசனக்காட்சி காட்டப்பட்டது. "வேலைக்காரன்" என்னும் சமூக நாடகமொன்று மிகத் திறம்பட சங்க அங்கத்தவர்களால் நடித்துக் காட்டப்பட்டது.

புது வருட உத்தியோகத்தர் பின்வருமாறு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் : திரு. சி. ஜே. இளையதம்பி, எம். ஏ., முதலியார் வை. மகேசன், J.P., திரு. எஸ். எஸ். மரியதாஸ்.

தலைவர் : திரு. யோ. சின்னப்பா.

உபதலைவர் : திரு. ஐ. நாகநாதன், திரு. ஜே. அந்தோனிப்பிள்ளை.

கௌரவ காரியதரிசி : திரு. டப்ளியூ. என். தேவகடாட்சம்.

உபகாரியதரிசி : திரு. வை. பூதத்தம்பி.

கௌரவ தனாதிகாரி : திரு. ஐ. பொன்னுத்துரை.

கணக்குப்பார்வையாளர் : திரு. எஸ். கணபதிப்பிள்ளை.

இவர்களுடன் இன்னும் 12 பேர் நிர்வாக சபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சமாச விழாப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று வெள்ளிக் கிண்ணம் பெற்ற திரு. ஏ. எஸ். இ. பத்மநாதன் நன்றியுரை கூறினார்.

---

## கைதடி—நாவற்குழி சமூக சேவா சங்க 7 வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் சென்ற 30.12.56 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 7 மணியளவில் ச. சே. தலைவர் திரு. சி. சின்னத்துரை அவர்கள் தலைமையில் ஸ்ரீமுருகன் வாசிகசாலையில் ஆரம்பமாகியது.

முதலாவதாக கடந்த வருடக் கூட்ட அறிக்கையும் பின் தனாதிகாரியின் அறிக்கையும் வாசிக்கப்பட்டு, சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பின்வருபவர்கள் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் :—

தலைவர் திரு. சி. சின்னத்துரை அவர்கள், உபதலைவர் திரு. இ. கந்தையா அவர்கள், காரியதரிசி திரு. பொ. சுப்பிரமணியம் அவர்கள், உபகாரியதரிசி திரு. ச. சண்முகம் அவர்கள், தனாதிகாரி திரு. க. கனகசபாபதி அவர்கள்.

4 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. பின்வருவோர் சொற்பொழிவுகளுடன் கூட்டம் 8 மணியளவில் பூர்த்தியாயது. செல்வன் சி. புலேந்திரன், செல்வன் ச. சண்முகம், திரு. நா. இளையப்பா ஆசிரியர்.

## நூல்நலனாய்வு

### குமரகுருபரன்—1957 ம் ஆண்டு மலர்

இக்காலத்தில் தோன்றும் மதி இதழ்களும், பிறை இதழ்களும் நாள் இதழ்களும் அளப்பில; தோன்றி ஓராட்டை நிறைவுறுதற்கிடையிலேயே மறைந்து விடும் இதழ்களும் அளப்பில. விலை நூலகம் ஒன்றிற்குச் சென்று பார்ப்போமானால் காமத்தைக் கிளப்பிவிடும் நவீன வர்ணப்படங்களும் அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு எனும் நாற்குணமும் அறவே அற்ற அரிவையரின் அரை நிர்வாணப் படங்களும் கொண்ட நூல்களும் இதழ்களும் பல தொங்கிக்கொண்டிருப்பதைக் காணலாம். அட்டைப்படத்தின் போலியழகில் தம் உள்ளத்தைப்பறிகொடுத்து வெண்பொற்காசுகளை அள்ளியிறைத்து அவற்றை இக்கால இளைஞரும் இளநங்கையரும் ஆவலுடன் வாங்குவதைக் காண்கின்றோம். மாசில் வீணையும் மாலை மதியமும் மூசுவண்டறைப் பொய்கையும் போன்ற தண்டமிழ் மணங்கமழும் வெளியீடுகளையாதல் இதழ்களையாதல் விரல் விட்டு எண்ணிவிடலாம். இனிமையெனும் பொருள்படும் தீந்தமிழில் சைவம் கனிந்திருக்குமாயின் அத்தகைய இதழின் அருமைபெருமை எடுத்தியம்பற்பாலதோ? செந்தமிழும் சைவசித்தாந்தமும் தமிழகத்தில் ஒவ்வொருவர் இல்லந்தோறும் இருக்க வேண்டுமென்ற பணியே பணியாக் கொண்டு மலர்வது குமரகுருபரன் எனும் திங்கள் வெளியீடாகும். “**குமரகுருபரன்**” எழு ஆண்டு நிறைவு பெற்று எட்டாம் ஆண்டில் இன்முகத்துடன் தோற்றமளிப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியுறுகின்றோம். திருப்பனந்தாள் காசி மடம் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் இம்மதி இதழ் இனிது தொண்டாற்ற ஏற்ற பெற்றி அருளும் பொருளும் சுரந்து, போற்றிப் புரந்து வருவது யாவரும் நன்கறிந்ததொன்று. மேலும் சுவாமிகள் வழி நின்று ஒழுகும் **ஸ்ரீமத் வித்துவான் மகாலிங்கத் தம்பிரான்** சுவாமிகள் அவர்களும் “குமரகுருபரன்” சைவத்துக்கும் தமிழுக்கும் பணிசெய்யும் கருவியாக அமைய வேண்டுமென்று அயராது உழைத்து வருவது இவ்விதழகத்தே தெற்றெனப் புலனாகின்றது. “குமரகுருபரன்” நாளொருவண்ணமும் பொழுதோரு மேனியுமாகப் பொலிவது கண்டு இறும்பூ தெய்துகின்றோம்”. பழுத்த ஆராய்ச்சி யறிஞர்களின் ஆழ்ந்தகன்ற கட்டுரைகளையும் இளம் எழுத்தாளர்களின் கட்டுரைகளையும் குமரகுருபரன் தன்னகத்தே கொண்டு மலர்வதை உற்று நோக்குமிடத்து, அது பழைமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் விளங்கும் பெற்றிவாய்ந்தது என்பது போதரும். வாசகர்கள் குறைந்த கட்டணஞ் செலுத்திச் செறிந்த அறிவுக் கருவூலத்தைப் பெற்று, கற்றதனாலாயபயனாகிய வாலறிவன் நற்றாள் தொழுது நிற்பார்களாக எனும் பெருநோக்குடன் தொடங்கிய குமரகுருபரன் மகாவலிகங்கை மணலினும் பல்லாண்டு வாழ்ந்து செந்தமிழ்ப்பணியும் சைவப்பணியும் புரிவதாக. குமரகுருபரசுவாமிகள் நினைவாக மலர்ந்த குமரகுருபரனுக்கு நிர்வாக ஆசிரியராக வாய்க்கப்பெற்றவரும் **குமரகுருபரனே.** ஆனால் ஒரு சிறு வேறுபாடு. இவர் குமரகுருபரன் பிள்ளையாக விளங்குகிறார். இறை வழிநிற்கவிரும்பினோர் பிள்ளைகளைப்போல வெள்ளை மனமுடையராய்த் திகழவேண்டும். இவரது தூய சிந்தைக்கும் பணிவுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துளது இவர் எழுதியுள்ள தோற்றுவாய் எனும் ஆசிரியர் உள்ளக்கிடக்கை. சைவமும் தமிழும் கற்க விரும்புவோர் குமரகுருபரனைத் திங்கடோறும் தவறாது படித்துவரல் வேண்டும் “

—“ **அம்பலவாணன்** ”

### வளருந் தமிழ்

தெவிட்டாத செந்தமிழின் இனிமையை இனிதே நுகர்தற்கு இலக்கண அறிவு மிக மிக அவசியம். தமிழ் மொழி, இலக்கண வரம்பையடுத்தே இதுகாறும் வளர்ந்து வந்ததென்பதற்குத் தமிழகத்தேயுள்ள பல நூல்கள் சான்று பகர்கின்றன. தமிழ் வளர்ச்சியடைந்தமைக்கு முக்கிய காரணம் பழங்காலத்திலிருந்த புலவர்கள் பலரும் இலக்கண அறிவு நிறையப் பெற்றோராயிருந்தமைதான் எனல் மிகையாகாது. அன்னாரியற்றிய இலக்கிய நூல்களைக் கற்கும் எவரும் “இலக்கண மின்றேல் இலக்கியமில்லை” என்றே துணிந்து கூறுவர்.

தமிழ் வளர்ச்சிக்கு இத்துணைஅவசியமான இலக்கணத்தை சிறு பராயந்தொட்டே மாணவர் மனதில் பதியவைக்க எடுக்கப்படும் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதேயாகும்.

கடந்த சில ஆண்டுகளாக இலக்கியம் ஓர் கட்டாயபாடமாகப் போதிக்கப்பட்டமை தவிர்க்கப்பட்டது ஓர் துரதிருஷ்டம் எனலாம். இலக்கியம் கட்டாயமற்று கைவிடப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்களின் இலக்கண அறிவும் குறைந்து வந்தது. வசனங்களிலுள்ள எழுவாய், பயனிலைப் பிழைகளைத் திருத்தும் அறிவைப் பெறுதலுடனேயே மாணவர்கள் சி. பா. த. ப. வகுப்புப் பரீட்சைகளில் சித்தியெய்தி விடுமளவில் இலக்கண அறிவு குறைத்துக் கட்டுப்படுத்தப்பட்டமை விசனிக்கத்தக்கது.

இந்த நிலையில், ஆறும், எழாம் வகுப்புகளிலிருந்தே மாணவர்களுக்கு இலக்கண அறிவையூட்டற் பொருட்டு, 25 வருடங்களாக ஆசிரிய சேவையிலீடுபட்டுள்ள பண்டித க. யோ. ஆசிநாதன் அவர்கள் “வளருந் தமிழ்” என்ற நூலை அரசினர் பாடத்திட்டத்திற் கமைவாக எழுதிப் பிரசுரித்துள்ளார்கள். வளருந்தமிழ் முதலாம் புத்தகம் ஆறும் வகுப்புக்கும், இரண்டாம் புத்தகம் ஏழாம் வகுப்புக்கு முரியனவாகும்.

இவ்விரு புத்தகங்களும் ஆசிரியரின் அனுபவம், ஆராய்ச்சி என்பவற்றினடிப்படையில் தோன்றியவையாகும். சூத்திரவிதிகளை மனனஞ் செய்யாது, இலக்கண வழக்கை மாணவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியதாக சிறுசிறு பயிற்சிகள் இப்புத்தகங்களிற் காணப்படுகின்றன. இவற்றைக் கற்றுப் போதிய அறிவு பெறும் மாணவர்களுக்கு “நன்னூற் காண்டிகையுரை” போன்ற கடினமான இலக்கணப் புத்தகங்களை விளங்குதல் சுலபமாகும்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இத்தகைய நூல்களை இயற்றுவதும், அவற்றைக் கற்பதும் அவசியம். சிறுபராயத்தில் மாணவர்களுக்கு இலக்கண அறிவையூட்டி, எதிர்காலத்தில் அவர்களைச் சிறந்த மேதைகளாக்கும் நோக்குடன் பண்டித ஆசிநாதன் அவர்கள் வெளியிட்டுள்ள வளருந்தமிழ் நூல்களை நாம் பாராட்டுவதுடன், மாணவர்களும், ஆசிரியர்களும் இவற்றை ஆதரிக்க வேண்டுமெனவும் விழைகின்றோம்.

—“**தேவர்கோன்**”

# ஐம்பத்தேழே வாழ்க!

எஸ். எல். சவுந்தரநாயகம்

ஆதியந்தங் கணிக்கவொண்ணுக் காலப்பூங்கா
வதனில்யே சுக்கிறீஸ்தின் தோற்றம் தொட்டு
மேதினியில் மலர்ந்தவா யிரத்துத் தொள்ளா
யிரத்னதட்டத் தாறுமலர் கட்கடுக்க ;
பாதி நிசி யபரபக்கம் மூலநாட் செவ்
வாய் வார மம வாசித் திதியின்பப்பூந்
தாதவிழப் புதுமலரா யிதழ்விரித்துச்
சாந்திமணம் பாப்புனமம்பத் தேழே வாழ்க !

*   *   *   *

ஆன்றறிஞ ருள்ளமெனத் தெளிந்து ஆழ்ந்து
அலையெறியு மாழிவிட்டே யருண வின்று
வான்பரப்பில் விரைவில்வா வென்னச் சேவல்
வரவழைக்கக் கண்டு, வெண்டா மரைசிரிக்க
தேன்றுளிக்கும் மலர்ப்பொழிலில் மதுகரங்கள்
தித்திக்கும் ரீங்காரச் சுதியை மீட்ட
மான்களிக்க மயிலாடக் குயில்கள்பாடி
வரவேற்கப் பவனிவரு மைம்பத் தேழே !

*   *   *   *

செந்திருநேர் மங்கையரா டவர்கள் பாலர்
செவ்விளநீ ரொத்த புனல் மீதிலாடிச்
சந்தனக்கந் தங்கமழுங் கலைதரித்துச்
சருவேச னைமனக்கண் கண்டுபோற்றி
சொந்தவுற வுற்றார்கள் குழுமியாறு
சுவைகலந்த விருந்துண்டு அகம்பூரிக்க
பைந்தமிழ்ப்பா வணிசூடிக் காலத்தேரிற்
பாங்காகப் பவனிவரு மைம்பத்தேழே !

*   *   *   *

அன்பகிம்சை சமாதானம் வளரவேண்டும்
அறங்காக்கு மான்றோர்க ளாசை போலே !
நுண்கலைக ளறிவு தொழில் பெருகவேண்டும் ;
நுட் பமதி பெறுமறிஞர் வேட்கை போலே !
எண்டிசையும் நன்மாரி பொழிய வேண்டும் ;
இருநிலக்கா வலருழவோ ரிச்சை போலே !
நன்செய், புன்செய் விளைவதிகம் பொலியவேண்டும் ;
நாநிலத்துன் னுட்சியிலே யைம்பத்தேழே !

*   *   *   *

எம்மொழிக ளும்வளரப் பாரின்மீது
எவ்வினங்க ளும்வளர ; இறையைச் சாரும்
எம்மதங்க ளும் வளர ; உயர்வைக் காட்டு
மெக்கட்சி கள் வளர ; எல்லோர்க்குந் தத்
தம்கலைகள் கலாசாரம் வளர விந்தத்
தரணியிற் சேர்ந் தேவாழுங் கொள்கையாலே
ரம்யகுணத் தாளர்களாய் நரரை மாற்றி
நாநிலத்தை யரசுபுரி யைம்பத் தேழே !

எஸ். எல். சவுந்தர நாயகம்,
(கி.மு.ச. காரியதரிசி)
இலுப்பைக் குளம்,
நேரிய குளம்,
மதவாச்சி.

# டர்பன் ச. முனிசாமிப்பிள்ளை

**ஈழநாட்டிற் பிறந்து தென்னாப்பிரிக்காவிற் தமிழ்ப்பணி புரிந்த தொண்டர்**

சிறந்த தமிழறிஞரும் நூலாசிரியரும் பத்திராதிபரும் பொது நல ஊழியருமாகிய திரு. எஸ். எம். பிள்ளையவர்கள் 1956 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ந் திகதி தென்னாபிரிக்காவில் டர்பனிலுள்ள தமது இல்லத்திற் காலஞ்சென்ற செய்தி தமிழ் பேசும் நாடுகளில் வாழும் மக்கள் யாவருக்கும் மிக்க துயரை விளைக்குமென்பதில் ஐயமின்று. 1903 ம் ஆண்டில் இலங்கையிற் பிறந்த இப் பெரியார், தென்னாபிரிக்காவுக்குச் சென்று அங்கே தமிழ் மக்கட்குச் செய்துவந்த தொண்டு இம்மாத்திரமன்று. "பராசர மலர்", "செந்தமிழ்ச் செல்வன்", "தமிழ் மணி" முதலிய அனேக பத்திரிகைகளின் ஆசிரியராகவிருந்து பணியாற்றியவர். அனேக நூல்கள் இவரால் இயற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சில நாடக நூல்களைப் புதிதாக இயற்றியும் வேறு சிலவற்றை ஆங்கிலத்திலிருந்து பெயர்த்தும் தென்னாபிரிக்காவில் மாணவர்கள் நடித்தற்கு வழங்கிய பெருமையுமுடையவர்.

தமிழ் நாட்டுத் தேசீய கவியாக விளங்கிய சுப்பிரமணியப் பாரதியாரின் திருநாள் முதன் முதலாகத் தென்னாபிரிக்காவில் இவரின் முயற்சியாலேயே கொண்டாடப்பட்டது. மாணவர்கட்குப் பயன்படும்படியாகப் "பாலர் பாடல்" என்னும் சிறந்த செய்யுள்நூல் இவரால் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் வெளிவரும் பத்திரிகைகளில் இவர் கட்டுரைகள் குறைவின்றி வெளிவந்துகொண்டிருந்தது யாவரும் அறிந்ததொன்றே. ஸ்ரீ லங்காவில் அவருடைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஸ்ரீலங்கா பத்திரிகைமீது தாம் கொண்டிருந்த அபிமானத்தைப் பன்முறை கடிதமூலம் அறிவித்துள்ளார்.

இவ்வாறாக இடைவிடாது முப்பது ஆண்டுகளாகச் சமயத்துக்கும் மொழிக்கும் பணியாற்றிவந்த திரு. எஸ். எம். பிள்ளையவர்கள் பிரிவைக் கேள்வியுற்ற தமிழ் மக்கள் யாவரும், பெருந் துயரில் மூழ்கினரென்பது கூறுதேயமையும். இவருடைய ஆத்மா சாந்தியடைவதாகுக.

---

## வரப்பெற்றோம்

(1) **இலங்கைச் சரித்திரம்**—ஆங்கிலேயர் காலம்
எழுதியவர் : மட்டு நகர் வித்துவான் **F. X. C.** நடராசா
பிரசுரம் : கலைமகள் கம்பெனி, 124, செட்டியார் தெரு, கொழும்பு 11.

(2) **சைவ சமயபோதினி** (ஐந்தாம் வகுப்பு).
பிரசுரம் : சுன்னாகம், வட-இலங்கைத் தமிழ்நூற்பதிப்பகம்.

(3) **விபுலானந்த அமுதம்.**
தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம்.
பிரசுரம் : சரஸ்வதி புத்தகசாலை, செட்டியார்தெரு, கொழும்பு.

(4) **பதிற்றுப்பத்து** :—பண்டிதர்—அருளம்பலம் எழுதிய உரையுடன்.

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை | தபாற் செலவு |
|---|---|---|
| | ரூ. ச. | ச. |
| 1. இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. | 55 .. | 10 |
| 2. அரசாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. .. .. | 50 .. | 15 |
| 3. அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. .. .. | 1.20 .. | 35 |
| 4. இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் | 70 .. | 15 |
| 5. இந்துமத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியனவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. | 2.00 .. | 35 |
| 6. இலங்கைக் குடிமதிப்பு—1946 .. .. | 5.00 .. | 35 |
| 7. 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டும் மொழிகளாக தேசிய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. .. | 1.45 .. | 35 |
| 8. இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை—1945 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. | 2.00 .. | 35 |
| 9. சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. | 1.55 .. | 35 |
| 10. குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலீக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. | 60 .. | 20 |
| 11. இலங்கைப் பறவைகள்—சித்திரசகித நூல் .. | 5.00 .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,

தபால் பெட்டி நிர். 500,

கொழும்பு, 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.